முதலாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 253 ஆடி 21ஆம் நாள் திங்கட்கிழமை 06 ஒகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049



மேலதிக விபரங்களுக்கு
3ஆம் பக்கத்தை பார்க்கவும்

# நிறைவேறாத அரசியல் தீர்வைப்பற்றி பேசி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது கூட்டமைப்பு

## இப்படிச் சொல்கின்றது மகிந்த அணி

கொழும்பு, ஓகஸ்ட் 6

அரசியல் தீர்வுக்கு மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நாட்டில் உள்ள பெரும்பான்மை மற்றும் சிறு பான்மை மக்களின் எதிர்க்கட்சித் தலைவர் என்பதை ஒருபோதும் உறுதிப்படுத்தியதில்லை. வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து நிறை >> 04

## வழிநடத்தல் குழுவில் பங்கேற்பதா?

### ஆராய்கிறதாம் மகிந்த அணி

கொழும்பு, ஓக. 6

தவறான முறையில் புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. எதிர்வரும் காலங்களில் வழி நடத் >> 24

மன்னார்

## புதைகுழி அகழ்வுக்கு ஓ.எம்.பி. நிதியுதவி

கொழும்பு, ஓக. 6

மன்னார் நகர நுழைவாயில் சதொச கட்டட வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெரிய மனிதப் >> 04

## அச்சுவேலிப் பொலிஸ் பிரிவில் இளைஞர் குழு அட்டகாசம்

### சனசமூக நிலையம் மற்றும் 4 வீடுகள் மீது தாக்குதல்



அச்சுவேலி, ஓக. 6

உந்துருளியில் பயணித்த இளைஞர் குழுவின் அட்டகாசத்தால் இடைக்காடு மற்றும் பத்தமேனிப் பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். இடைக்காடு கலைமகள் சனசமூக நிலை >> 24

## சிறந்த பெறுபேறு பெற்றுப் பெருமை தேடித் தாருங்கள்

### ஏ.எல். பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு கல்வி அமைச்சர் வாழ்த்து

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர் தரப் பரீட்சை யில் தோற்றும் அனைத்து மாணவர்களும் உயர்வான சித்திகளைப் பெற்று எமது மாகாணத்துக்கும், தாம் சார்ந்த >> 04

**வாழ்த்துகிறோம்**

ஜி.சி.ஈ.
உயர்தரப் பரீட்சை
எழுதும் மாணவ,
மாணவியர்
இலட்சியத்தில் வென்றிட
உதயன் உங்களை
மனதார
வாழ்த்துகின்றான்.

கைதான

## வாள்வெட்டுக் கும்பலுடன் பொலிஸுக்கும் தொடர்பு?

### அலைபேசி அழைப்புக்களை மையப்படுத்தி விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 6

சாவகச்சேரியில் கைதான இளைஞர்கள் வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம் சுமத்தியுள்ள பொலிஸார், அவர்களுக்கும் பொலிஸார் சிலருக்கும் தொடர்பு இருக்கின்றதா என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். >> 24


மீட்கப்பட்ட வாள்

## புலிகள் மீதான தடை நீடிப்பு

கொழும்பு, ஓக. 6

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான >> 24

## இளைஞர்கள் கைதால் பதைபதைத்த உறவுகள்

மானிப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுத் திரண்டனர் >> 04

## இளைஞர்களின் செயற்பாட்டால் இராணுவம் நிலைகொள்கின்றது

### மாவை எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 6

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாகக் கோரி வரும் நிலையில், தற்போது இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இராணுவத்தினரைத் தொடர்ச்சியாக நிலை நிறுத்தும் வகையில் உள்ளன. இவ்வாறு தமிழ்த் >> 24

## சந்தேகநபர்களை பிணையெடுக்க முயன்ற சயந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 6

சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 7 இளைஞர்களையும் 14 நாள்கள் விளக்கமறிய லில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

மானிப்பாய் பொலிஸார் 7 இளைஞர்களை நேற்றுமுன்தினம் கைது செய்திருந்தார்கள். அவர்களிடமிருந்து 2 வாள்கள், ஒரு கோடாலி, ஒரு கைக் கோடாரி, செயின், இரும்புப் பைப், 3 உந்துருளிகளை மீட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை >> 24

## பரீட்சை கடினமல்ல

### தரம் 5 மாணவர்கள் உற்சாகம்

யாழ்ப்பாணம், ஓக. 6

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது. காலை 9 மணிக்கு >> 04

## தந்தையின் சடலம் வீட்டில் பரீட்சை எழுதிய மாணவி

### நெகிழ வைக்கும் சம்பவம்

அம்பாறை, ஓக. 6

காட்டு யானை தாக்கிக் கொல்லப்பட்ட தந்தையின் உடல் வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மாணவி ஒருவர் >> 04

## கிராமிய அபிவிருத்திக்கான நிதி மேலும் சுருங்குகின்றது

### ரூ.200 மில்லியனிலிருந்து ரூ. 40 மில்லியனாகியது

யாழ்ப்பாணம், ஓக. 6

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு அந்த நிதி பாதியாக வெட்டிக் குறைக்கப்பட்டிருந்தது. வெட்டிக் குறைக்கப்பட்ட நிதி மேலும் வெட்டப்பட்டு 40 மில்லியன் ரூபாவே வழங் >> 24

## ஆசிரியத் தொழில் பொழுதுபோக்குப் போல் மாறிவிட்டது

### ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வில் விக்கி ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 6

மாணவ மாணவியருக்குக் கல்வி போதிப்பது ஒரு பொழுது போக்குப் போல் மாறிவிட்டது. பொழுது போக்குகளே கட >> 04

## பொலிஸ் உந்துருளியுடன் மோதி இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 6

பொலிஸ் உந்துருளியுடன் மோதிக் காயமடைந்த நிலையில், பொலிஸார் சப்பாத்துக் கால்களால் தாக்கியதாகத் தெரிவித்து 18 வயது இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் கொக்குவில் பொற்பதியில் நேற்று மாலை 6.20 மணியளவில் >> 24

வடக்கு

## அமைச்சர் சபையில் மற்றொரு குழப்பம்

### அமைச்சர்களுக்கு சம்பளம் வழங்கலாமா எனக் கேட்டு ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 6

வடக்கு அமைச்சர் சபையில் புதிய குழப்பம் தோன்றியுள்ளது. அமைச்சர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அவர்களது பணியாள் தொகுதிக் >> 24

# சுயாதீன நாட்டில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் ரத்னாயக்க தெரிவிப்பு

நுவரெலியா,ஓக. 6

**இலங்கையில் புதிய ஆட்சியை ஏற்படுத்த அமெரிக்கா உள்ளிட்ட புலம்பெயர் அமைப்புகள் 585 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. இலங்கை போன்ற சுயாதீன நாட்டில் தலையீடு செய்வதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

கொத்மலை, பூண்டுலோயாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்த நிதியை சேன்ஞ் இன் சிறிலங்கா என்பதற்கு அமையவே அமெரிக்காவின் முன்னாள் அரசதலைவர் பராக் ஒபாமாவால் வழங்கப்பட்டது என்று அரசதலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது சீனா, இந்தியா போன்ற நாடுகளில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள அமெரிக்கா கோட்டபாய இரட்டை குடியுரிமை பெற்றவர். அதனால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது.

முதுகெலும்பு இல்லாத ஆட்சியாளர்களை இலங்கையில் ஏற்படுத்தி, இலங்கையை கைப்பற்றிக்கொள்ளும் எண்ணத்திலேயே அவர்கள் செயற்படுகின்றனர். வாகன விலையேற்றம் அதிகரித்துள்ளதை ஏற்க முடியாது. கொழும்பு நகரில் கடுகதி ரயில் போக்குவரத்தை ஆரம்பித்த பின்னர் வாகன விலையை குறைப்பதாக அரசு பொய் கூறிவருகின்றது.



தலைமைஅமைச்சர் ரணிலின் மூளை குழப்பமடைந்துள்ளதால் அவர் இவ்வாறான முடிவுகளை எடுக்கின்றார். அவர்கள் எல்லாவகையான காட்டிக்கொடுப்புகளைத் தற்போது அரங்கேற்றி வருகின்றனர்.

100 நீதிமன்றங்களை அமைத்து சிறைகளில் அடைத்தாலும் எமது போராட்டத்தை நிறுத்த போவதில்லை தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியத்தை அதிகரிக்க வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை.

தற்போதைய அரசதலைவரின் பெயரில் மைத்திரி என்ற இரக்க குணம் காணப்பட்டாலும் அவரிடம் அவ்வகையான குணம் இல்லை, மாறாக பொறாமை, பலி வாங்கும் எண்ணம் போன்றவையே மேலோங்கி காணப்படுகின்றது.

எனவே குரோத மனபான்மையை விட்டு சிறப்பான ஆட்சியை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

(ரி4)



# மட்டு. விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும்

## அமைச்சர் துமிந்த திஸ்ஸாநயக்க உறுதி

மட்டக்களப்பு,ஓக. 6

மட்டக்களப்பு உன்னிச்சை குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழபீடு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும் என நீர்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸ்ஸாநயக்க உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் சென்ற நீர்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸ்ஸாநயக்க உன்னிச்சை நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளை ஆயித்தியமலைப் பகுதியில் நேரில் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

மட்டக்களப்பு உன்னிச்சை நீர்பாசனக் குளத்தின் வான் கதவுகள் கடந்த மே மாதம் 24ஆம் திகதி சடுதியாகத் திறக்கப்பட்டதனால் சுமார் 6ஆயிரம் ஏக்கர் சிறுபோக வேளாண்மை அழிவடைந்துள்ளது. இதனால் அந்தப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது.

இதனால் உன்னிச்சைத் திட்டத்துக்குப் பொறுப்பான பொறியலாளர் மீது அதிருப்பதியடைந்த விசவாயிகள் அவரை இடமாற்றி விவசாயிகளின் நலனில் அக்கறை உள்ள பொறியியலாளர் நியமிக்க வோண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நட்டஈடு வழங்க வேண்டும்.

உன்னிச்சைக் குளத்தின் நீரினை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படாமை தொடர்பாக காரணங்களை ஆராய்வதற்கான குழு அமைக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்;

உன்னிச்சசை விவசாயிகளின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கான குழு அமைக்கப்பட்டு உண்மை கண்டறியப்படும்.

விவசாயிகளும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளும் கடந்த காலங்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்களை மறந்து பரஸ்வரம் விட்டுகொடுப்பு நடந்துகொள்ளவேண்டும்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டதில் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளேன் - என்றார். (ரி4)

# விபத்தில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு,ஓக. 6

மொனராகலை கும்புக்கன சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாரஊர்தி ஒன்று பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த முச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

விலஓய, எதிமலே வீதி பிரதேசத்தைச் சேர்ந்த 8 வயதுடைய சிறுவன், 22 வயதுடைய இளைஞன் மற்றும் 19 வயதுடைய யுவதி ஆகிய மூவரே உயிரிழந்தனர். 49 வயதுடைய பெண் ஒருவர் படுகாயமடைதார்.

முச்சக்கர வண்டியில் பயணித்த சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்து மொனராகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதில் சிகிச்சை பயனின்றி மூவர் உயிரிழந்தனர்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளார். (ரி4)

# மீனவர்களைச் சந்தித்தார் அமைச்சர் காதர் மஸ்தான்

முல்லைத்தீவு, ஓக.6

சட்டவிரோத மீன்பிடியைத் தடை செய்யக்கோரி முல்லைத்தீவில் தொடர் போராட்டம் நடத்திவரும் மீனவர்களைப் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் நேற்று முன்தினம் சந்தித்தார்.

கடற்றொழில் அமைச்சரை நேரில் அழைத்து வந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

லைலா வலை அல்ட்ரா ஒளி மூலம் மீன்பிடித்தல் டைனமைற் மூலம் மீன் பிடிப்பதால் கடல் வளங்கள் பாதிக்கப்படுகிறது. லைலா மற்றும் சுருக்கு வலையால் அதிகமான சிறு மீன்கள் பிடிபடுவதால் மீன்களின் இனப்பெருக்கம் கடலில் குறைவடைவதாகவும் முல்லைத் தீவு கடற்பகுதியில் வெளிமாவட்டத்தை சார்ந்த மீனவர்கள் மீன்பிடித்து செல்வதால் எமது வாழ்வாதாரம் பெரிதாகப் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டபோதும் அந்தவிதமான தீர்வுகளும் மீனவர்களுக்கு கிடைக்கவில்லைஎன்று மீனவர்கள் பிரதி அமைச்சரிடம் சுட்டிக் காட்டினர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ற-213)



# லொறியும் முச்சக்கரவண்டி விபத்து : இருவர் படுகாயம்

திருகோணமலை,ஓக. 6

திருகோணமலை கப்பல்துறையில் லொறியும் முச்சக்கரவண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றதெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரே படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தில் முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த 47 மற்றும் 24 வயதுடையவர்களே படுகாயமடைந்தனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)



# புனித லிகோரியார் ஆலயத் திருவிழா

சாவகச்சேரி ஒகஸ்ட் 6

சாவகச்சேரி கச்சாய் சாலையில் அமைந்துள்ள புனித லிகோரியார் ஆலயத் திருவிழா நேற்று சிறப்பான முறையில் இடம்பெற்றது.

திருநாள் திருப்பலி காலை 7 மணியளவில் அருட்தந்தை லோரன்ஸ் அடிகளார் தலைமையில் அருட்பணி ஜெராட் சவரிமுத்து அடிகள், அருட்பணி செல்வரட்ணம் அடிகள் மற்றும் பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகளும் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருச்சொரூபப் பவனி இடம்பெற்று இறுதியில் புனிதரின் ஆசிர்வாதமும் இடம்பெற்றது.

ஆலய நவநாள் திருப்பலி கடந்த 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றன. (ரி2.9)


காசில்லாமல்
இறுகி
விட்டீர்களா?
போன் மூலம் லோன் ஒன்று
இலங்கையில் முதன் முறையாக LOLC Finance மொபிடெல் உடன் இணைந்து போன் மூலம் லோன் ஒன்றை உங்களுக்கு வழங்குகின்றது. இது மூன்று படிமுறைகளில் உங்கள் கைகளில் உடனுக்குடன் காசைப் புரளச் செய்யும் ஓர் நிதிப் புரட்சியாகும்.
மூன்று படிமுறைகளில் காசு
#111#
mCash LOLC Digital Loan Service
12,000
Loan received
Rs.12,000
#111# ஐ அழைத்து
விண்ணப்பித்து
லோனைப் பெறுங்கள்
கொமர்ஷல் வங்கி மற்றும் சம்பத் வங்கி ATM ஊடாக பணத்தைப் பெறும் வசதி
நாடு முழுவதுமுள்ள 16,000க்கு மேற்பட்ட mCash முகவர்கள் ஊடாக பணம் பெறும் வசதி
24 மணிநேர சேவை
ஆகக்கூடிய கடன் தொகை ரூபா. 25,000
6 மாதங்கள் மீளச் செலுத்தும் காலம்
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 7111
இச்சேவைக்கு முற்பதிவு அவசியம்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
LOLC FINANCE
Sri Lanka Telecom Mobitel
mCash

உயர்தர

# பரீட்சை ஆரம்பமாகும் நிலையில் வடமராட்சியில் நேற்று மின்தடை

யாழ்ப்பாணம், ஓக. 6

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், வடமராட்சியின் பல பிரதேசங்களிலும் நேற்று இரவு திடீரென மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் திடீர் மின்தடையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மின்தடை சுமார் ஒரு மணித்தியாலம் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5,7,173)

கோயில் சுற்றாடலில்

# சடலம் புதைப்பதற்கு நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 6

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்துக்குப் பின்பாக, முன்னாள் ஆதீன கர்த்தாவின் சடலத்தைப் புதைப்பதற்கு மல்லாகம் நீதிமன்று நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

ஆதீன கர்த்தாவாக இருந்த தம்பையா பரஞ்சோதி கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். அவரது சடலத்தை ஆலயத்துக்குப் பின்பாக புதைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குடிமனைகள் அந்தப் பகுதியில் உள்ளது. ஆலயப் பூசகரின் வீடும் அருகில் உள்ளது. இவ்வாறான இடத்தில் சடலத்தைப் புதைப்பது பொருத்தமற்றதாக இருக்கும் என்று ஊர்மக்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளார்கள்.

மானிப்பாய் பொலிஸாருக்கு பிரதேச சபையால் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் நேரில் சென்று விசாரணை களை நடத்தினார்கள். நீதிமன்றுக்கு விடயத்தைப் பாரப்படுத்தியிருந்தார்கள்.

நீதிமன்றில் நேற்று விசாரணை இடம்பெற்றது. உயிரிழந்தவரின் உறவினர்கள் இருவரின் சடலங்கள் ஆலயச் சுற்றாடலில் ஏற்கனவே புதைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மன்றுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. அந்தச் சடலங்கள் புதைக்கப்பட்ட சமாதி ஒன்றினுள்ளேயே, முன்னாள் ஆதீன கர்த்தாவின் சடலத்தையும் புதைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (5)

## நிறைவேறாத...

வேறாத அரசியல் தீர்வு தொடர்பில் பேசி தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கூட்டு அரசு கொண்டு வருகின்ற முறையற்ற விடயங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக வரவு - செலவு திட்டம் மக்களுக்குப் பாதகமானது என்று பொது எதிரணியினர் எதிர்த்த போதும் பெயரளவில் எதிர்க்கட்சியாகச் செயற்படும் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. இதன் விளைவுகளை மக்கள் அனுபவிக்கின்றார்கள்.

நாட்டைப் பிளவுபடுத்தும் அரசியல் தீர்வு ஒரு போதும் நிறைவேறாது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க மகிந்த அணி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். அரசியல் தீர்வுதான் பாதிக்கப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்தும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (5,31)

## புதைகுழி...

புதைகுழி அகழவுக்கு, காணாமல் போனோர் பணியகம் நிதி அளிக்கும் என்று பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

48 நாள்களுக்கு முன்னர் இந்தப் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 62 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதைகுழி அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கு நிதி போதாமல் இருப்பதாகவும், இதற்கு உதவி அளிக்குமாறும் காணாமல் போனோர் பணியகத்திடம், சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மன்னார் புதைகுழி அகழ்வுப் பணிக்கு தாம் நிதி வழங்கியுள்ளதாகவும், எதிர்காலத்திலும் உதவத் தயாராக இருப்பதாகவும், காணாமல் போனோர் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தடயவியல் நிபுணர்களின் அகழ்வு, போக்குவரத்து, தங்குமிடம், மற்றும் ஏனைய உதவிச் சேவைகளை உள்ளடக்கிய அடிப்படைச் செலவுகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (5)

## சிறந்த...

பாடசாலைகளுக்கும், பெற்றோருக்கும் பெருமை தேடித் தர வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு மாணவனின் வாழ்வின் அடுத்த படிநிலையைத் தீர்மானிக்கும் இந்தப் பரீட்சையின் முடிவு பல்கலைக் கழகக் கல்வி மட்டுமல்லாது, ஏனைய துறை சார்ந்த கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்களுக்கான ஒரு திறவுகோலாகவும் விளங்கும்.

பதற்றமடையாது, இயல்பான ஒரு மனோநிலையில் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் மனோவலிமையை ஆண்டவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்க வேண்டும் என்று ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தை முதலாவது இடத்தைப் பெற வைத்துப் பெருமை சேர்த்தது போல் இந்த ஆண்டும் எமது மாணவர்கள் அதி உயர் சித்தியைப் பெற்றுக் கூடியளவுக்கு அதி சிறப்புச் சித்தியைப் பெறுவதற்காக முயற்சிக்க வேண்டும்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, மகாணக் கல்வித் திணைக்களம், வலய கல்வித் திணைக்களங்களங்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சார்ப்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ற)

## பரீட்சை...

ஆரம்பமான பரீட்சை மதியம் 12.30 மணிக்கு முடிந்தது.

பரீட்சை நிலையங்கள் அமைந்திருந்த பாடசாலைகளுக்கு முன்பாக மாணவர்களின் பெற்றோர் படபடப்புடன் காத்திருந்தனர். ஆனால் பரீட்சை முடிந்து வெளியே வந்த மாணவர்கள் உற்சாகத்துடனும், சிரிப்புடனும் வந்ததைக் காண முடிந்தது.

வினாக்களுக்கு விடையளிப்பது சுலபமாக இருந்தது என்று மாணவர்கள் தெரிவித்தனர். பரீட்சை முடிந்து வந்த மாணவர்களைப் பெற்றோர்கள் பெரும் பரபரப்புடன் கேள்விகளால் துளைத்தெடுத்ததையும் அவற்றுக்குப் பதிலளிக்க முடியாது மாணவர்கள் திணறியதையும் காணமுடிந்தது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வினாப் பத்திரம் இலகுவாக இருந்துள்ளது என்று ஆசிரியை ஒருவர் கூறினார். மாணவர்களிடம் கேட்டபோது அவர்கள் பரீட்சை இலகுவாக இருந்தது என்று கூறுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியாக அமைக்கப்பட்ட 3 ஆயிரத்து 50 பரீட்சை நிலையங்களில் 3 இலட்சத்து 55 ஆயிரத்து 326 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். (ற-110,105)

## தந்தையின்...

நேற்று 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

தந்தையின் உடலுக்கு அருகில் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு மாணவி பரீட்சை எழுதச் சென்ற சம்பவம் பலரையும் நெகிழ வைத்துள்ளது. பாடசாலையின் அதிபர், வீட்டுக்கு வந்து மாணவியை அழைத்துச் சென்றுள்ளார்.

அம்பாறை தமன பிரதேசத்தில், கடந்த 3ஆம் திகதி இரவு உந்துருளியில் சென்றுக்கொண்டிருந்த போது, சிறுமியின் தந்தை, காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஆசிரியத்...

மைகளாக மாறி வருகின்றன என்று சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இன்று அரச சேவைகளில் பலரும் தமக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களைப் பற்றியே சதாகாலமும் சிந்தித்தவர்களாக காணப்படுகின்றார்கள். எவ்வளவு விடுமுறை கிடைக்கும், எவ்வளவு சம்பள ஏற்றம் கிடைக்கும், எந்தவகை அண்மையிப் பாடசாலை கிடைக்கும் என்று அனைத்தும் தமக்குச் சாதகமாக கிடைக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றார்கள். இந்த நிலை மாற்றப்படல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.



வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தெரிவு செய்யப்பட்ட 194 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டது. மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3 மணிக்கு நியமனம் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றது. முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது,

அந்தக் காலங்களில் அரச சேவைகள் குறிப்பாக ஆசிரிய சேவைகள் சிறப்பாகக் காணப்பட்டன. ஆசிரியர் தமது வேலைத்தளத்துக்குச் சென்றுவிட்டால் அவருக்கு கற்பித்தல் கடமையைத் தவிர வேறு எந்த வேலையும் இருக்காது. அதற்கான நேரமும் கிடைக்காது. ஆனால் இன்று அனைவருக்கும் வீட்டுக்கு அண்மையில் பாடசாலைகள் கிடைக்கப் பெறுகின்றன. அதனால் சுற்றுச் சமூகத்தில் நடைபெறுகின்ற விழாக்கள், கொண்டாட்டங்கள் அனைத்திலும் கடமை நேரத்தில் கலந்து கொள்ள ஆசிரிய ஆசிரியைகள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றார்கள். மாணவ மாணவியருக்குக் கல்வி போதிப்பது ஒரு பொழுது போக்குப் போல் மாறிவிட்டது. பொழுது போக்குகளே கடமைகளாக மாறி வருகின்றன.

ஒரு ஆசிரியர் தனது கடமை நேரத்தில் ஒரு மணித்தியாலம் வெளியில் ஏதாவதொரு வேலைக்காகத் தனது நேரத்தைச் செலவிடுவாரேயாயின் இரண்டு பாட வேளைகளில் அவரிடம் கல்வி கற்கவிருக்கின்ற ஏறத்தாழ 80 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஒரு மணித்தியாலத்தினால் வீணடிக்கப்படுகின்றது. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கத் தயங்குகின்ற ஆசிரியர்கள் பிரத்தியேகக் கல்வி நிறுவனங்களில் விடியற்காலை மற்றும் மாலை நேர வகுப்புக்களில் சிறப்பாக செயற்படுவது விந்தைக்குரியது. இவை யாவும் எமது ஆசிரிய ஆசிரியைகள் பணத்துக்கும் சொகுசு வாழ்க்கைக்குந் தம்மை அடிபணிய வைத்திருப்பதையே எடுத்துக்காட்டுகின்றது. ஆசிரியத் தொழில் என்பது அறிவுசார் இளம்நெஞ்சங்களுடன் சம்பந்தப்பட்டது. அது நல்லதொரு உறவாக அமைந்தால் அதனால் ஏற்படும் மகிழ்வுக்கு எல்லையில்லை.

மாணவ மாணவியரின் வருங்காலம் பற்றிய உங்கள் சிந்தனை கரிசனையுடையதாக மாறினால் ஆசிரியத் தொழில் உங்களுக்கு நிறைந்த மன மகிழ்வைத் தரும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை - என்றார்.

'நியமனங்கள் வழங்கப்பட்ட ஆசியர்கள் நாளை (இன்று) கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். இது விடுமுறைக் காலம் என்பதால் வலயங்களின் ஊடாகப் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொண்டு கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். பாடசாலைகளில் கடமை ஏற்பது தொடர்பில் இடர்பாடுகள் காணப்பட்டால் வலயக் கல்விப் பணிமனையிலாவது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்' என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.உதயகுமார் தெரிவித்தார்.

'ஆசியர் நியமனங்களைப் பெற்றவர்களுக்கான முன் சேவைப் பயிற்சி நாளை மறுதினம் புதன் கிழமை வட்டுக்கோட்டை தொழில் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகும். 21 நாள்களை கொண்ட வதிவிட பயிற்சியாக இது அமையும். காலை 6 மணிக்கு உடற் பயிற்சியுடன் ஆரம்பமாகி மாலை கலை அம்சங்களுடன் கூடிய பயிற்சி நெறிகள் நடைபெறும். இந்தப் பயிற்சி நெறியில் அனைவரும் கட்டாயம் பங்குபற்ற வேண்டும். கற்பித்தலுக்காக உங்களைத் தயார் செய்யும் பயிற்சியாக இது அமையும். பயிற்சியின் முதல் நாளும் நிறைவு நாளும் இரண்டு பரீட்சைகள் உங்கள் தயார்படுத்தல் நிலைகளை அறிந்து கொள்வதற்கு நடத்தப்படும்' என்று மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (5,7)

## இளைஞர்கள்...

யாழ்ப்பாணம், ஓக. 6

தென்மராட்சியின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த 7 இளைஞர்கள் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் என்று சுமார் 40 இற்கும் மேற்பட்டோர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பதைபதைப்புடன் திரண்டார்கள்.

வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் 7 பேரும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றார்கள்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் முன்பாக, கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் என்று சுமார் 40பேர் வரையில் திரண்டிருந்தார்கள்.

எனது மகனுக்கும் இந்தச் சம்பவங்களுக்கும் தொடர்பு இல்லை என்று கைதான இளைஞன் ஒருவனின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்தார். வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடையதாக அவர் கைத்தொலைபேசியில் பதிந்துள்ள தகவல்களை தந்தையிடம் காண்பித்தனர். தனக்கு இது தொடர்பில் எதுவும் தெரியாது என்று தந்தை பொலிஸாரிடம் கூறினார்.

அங்கு திரண்டிருந்த உறவினர்கள் பலர், கைதானவர்களுக்கு குற்றச் செயல்களுடன் தொடர்பு இல்லை என்றே தெரிவித்தார்கள். அவர்களை விடுவிக்குமாறு கோரினார்கள். (5,26)



## கொடியேற்றம்

காரைநகர், ஓக. 6
யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரஆலயத்தின்வருடாந்ததேவிப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்த பத்துத் நாள்கள் இடம்பெற்று வருகின்றன.
எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமைதீர்த்தத்திருவிழா இடம்பெறும். (250)

• • •

சுதுமலை,ஓக 6
யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை காசிகர்ண்டமட சிறிவிசாலாட்சிசமேத விசுவநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.
எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (147)

## பெருந்திருவிழா

கொடிகாமம்,ஓக 6
யாழ்ப்பாணம், நுணாவில் மேற்கு ஶ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமைகாலை10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.
தொடர்ந்து எதிர்வரும் 14 ஆம் தகதி செவ்வாய்க்கிழமைதேர்திருவிழாவும் மறுநாள்புதன்கிழமைதீர்த்ததிருவிழாவும்இடம்பெறும்என்றுஆலயபரிபாலன சபையினர்தெரிவித்துள்ளனர். (159)

## பகவத்கீதை விளக்கவுரை

யாழ்ப்பாணம்,ஓக 6
யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசனந்தாவால் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் பகவத்கீதை விளக்கவுரை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை சின்மயா மிஷனில் நடைபெற்று வருகின்றன.
இதில் இன்று திங்கட்கிழமை ரீமத் பகவத்கீதையின்இரண்டாம்அத்தியாயத்தில், "தீரன்கலங்குவதுஇல்லை"என்ற தலைப்பில்விரிவுரைஇடம்பெறும். (8)

## மதுபானம் விற்றவர்களுக்கு தண்டம்

அனுமதியின்றி180மில்லிலீற்றர்அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் வரணி வாசிக்கு 10 ஆயிரம் ரூபாவும் 375 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தகொடிகாமம்வாசிக்கு7ஆயிரத்து 500ரூபாவும்சாவகச்சேரிநீதிமன்றில் தண்டமாக விதிக்கப்பட்டது.
கடந்த வாரம் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது தண்டம் விதிக்கப்பட்ட தெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## விளையாட்டு நிகழ்வு

அளவெட்டி,ஓக 6
யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளி யின் 22 ஆவது ஆண்டு நிறைவும் முன்பள்ளி மழலைகளின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுநிகழ்வும்நாளைசெவ்வாய்க்கிழமை கரைப்பிரான் ஆலய முன்றலில் பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டு றவுச்சங்க தலைவர் இ.பிரதீபன். தலைமையில் நடைபெறும். (63)



# அராலியில் டெங்குத் தொற்று 10 பேர் சிகிச்சையில் சேர்ப்பு

### தடுப்பு நடவடிக்கை ஆரம்பம்

**வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அராலி மேற்கு பிரதேசத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. கடந்த மூன்று வாரங்களில் அராலி தெற்கில் 10 பேர் டெங்கினால்பாதிக்கப்பட்டுயாழ்ப்பாணப்போதனாமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

டெங்கு தாக்கத்தினை அடுத்து சங்கானை சுகாதார மருத்துவப் பணிமனை மற்றும் சண்டிலிப்பாய்சுகாதாரமருத்துவஅதிகாரி பணிமனை ஊழியர்கள் இணைந்து அராலி தெற்கு முழுவதுமாக டெங்குக்கு எதிராக புகையடிக்கும் வேலை திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன்தலைமையில் மேற்படி வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. சங்கானை சுகாதார பணிமனை சுகாதாரபரிசோதகர்அராலி முழுவதுமாக உள்ள வீடுகளின் சுத்தங்களைப்பார்வையிட்டுவருவதுடன்கோம்பை, சிரட்டை, ரின் பேணிகள் மற்றும் நீர் தேங்கும் இடங்களை வைத்திருப்போருக்கு விழிப்புணர்வூட்டிவருவதுடன்சேகரிக்கப்பட்ட பொருள்கள் பொருத்தமான தொழில்நுட்ப முறையில் அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர்.
ஜெ/162 அராலி தெற்கில் 704 குடும்பங்களைச்சேர்ந்த2137பேர்வாழ்கின்றநிலையில் தொடர்ச்சியாக 10 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவது அராலி மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
டெங்கு தாக்கம் அராலிதெற்கில்அதிகரித்து இருப்பதனால் அராலிமற்றும்அயற் கிராம மக்களையும் விழிப்பாக இருக்குமாறுவலி.மேற்குபிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன் கேட்டுள்ளார்.
வீட்டின் சூழலை அசுத்தமாக வைத்திருக்கும் மக்களுக்கு எதிராக சட்டத்தின் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. (50)

> **"டெங்கு தாக்கம் அராலி தெற்கில் அதிகரித்து இருப்பதனால் அராலி மற்றும் அயற் கிராம மக்களையும் விழிப்பாக இருக்குமாறு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் த. நடனேந்திரன் கேட்டுள்ளார்.**

# அநாதரவாக நின்ற முதியவர் கைதடி முதியோர் இல்லத்தில்

யாழ்ப்பாணம்,ஒக 6
நாவற்குழி புகையிரத நிலையத்தில் அநாதரவாக நின்ற முதியவர் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.
கொழும்பு அப்புகாமி மாவத்தையைச் சேர்ந்த பாண்டியன் ஆச்சாரி தியாகராஜா வயது-85 என்ற முதியவரே கொழும்பில் இருந்துபுகையிரதம்மூலம்கடந்தவெள்ளிக்கிழமை நாவற்குழியை வந்தடைந்தார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இந்தமுதியவர்நாவற்குழிபுகையிரதநிலையத்தில் அநாதரவாக நின்றார். வீதியால் வந்தவர்களிடம்தன்னைமுதியோர்இல்லத்தில் இணைக்குமாறு தெரிவித்து அழுது புலம்பியுள்ளார்.
தனக்கு நான்கு பிள்ளைகள் இந்தியாவில் இருப்பதாகவும் கொழும்பில் தனது சகோதரன் இல்லத்தில் தங்கியிருப்பதாகவும் அந்த வயோதிபர் கூறினார். இந்த முதியவரை பொதுமக்கள்சேர்ந்து கைதடிமுதியோர் இல்லத்தில் சேர்த்தனர். இதேசமயம் குறித்த முதியவர் பற்றிய முழுமையாக தகவல்களை பெறுவதற்கு முதியவரின் உறவினர்களை முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்லஅத்தியட்சகர்த. கிருபாகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (17)

## ஆக்கத் திறன் போட்டிகள்

சாவகச்சேரி ஓக. 6
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கிடையிலான ஆக்கத் திறன் போட்டிகள் நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேசசெயலகமண்டபத்தில்நடைபெற்றன.
பண்ணிசை, நடனம், நாடகம், பேச்சு மற்றும் வில்லிசை ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டதுடன் பெருமளவவான மாணவர்கள் கலந்து கொண்டனர். (9)

## வழிபாட்டுத் தலங்களின் தலைவர்களுக்கான கூட்டம்

சாவகச்சேரி, ஓக. 6
யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர்சபை எல்லைக்குட்பட்ட அனைத்து மத நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கான சுகாதாரம்தொடர்பானகலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் முற்பகல்10 மணிக்குநடைபெறும். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க, முஸ்லிம் ஆலயங்களின் சார்பில் ஒரு பிரதிநிதியைக் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள் ளது.
சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆலயங்களின் நிர்வாகிகளுக்கான ஆலயங்களில் மேற்கொள்ளவேண்டிய சுகாதார நடவடிக்கைகள்தொடர்பானகலந்துரையாடல்அண்மையில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது. (9)

## ரூ. 5இலட்சம்செலவில் வீதிகளுக்கு மின் விளக்குகள்

யாழ்ப்பாணம்,ஓக் 6
யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்துக்கும்5 இலட்சம்ரூபாசெலவில்வீதிகளுக்கு மின் விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.
மாநகரபிரதேசத்தில்27வட்டாரத்திற்கும்இந்த வீதி விளக்குகள் புதிதாக அமைப்பதற்கு இந்நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகமாநகரட்சிமன்றம்தெரிவித்தது.
உறுப்பினர்களின்உதவியுடன்அந்தந்தவட்டாரங்களுக்குமுதன்மை, குறுக்குவீதிகள், ஒழுங்கைகள், பொதுஇடங்கள், விளையாட்டுமைதானங்கள் போன்றவற்றிக்கு வலுக்கூடிய வீதி விளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (17)

## விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரிஓக. 6
சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டுப் போட்டி நிலைய மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தலைவர் வை. இராசரத்தினம்தலைமையில்நடைபெற்றது. நிகழ்வில்முதன்மைவிருந்தினராகதென்மராட்சி பிரதேச சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் திருமதி யோகேஸ்வரி சுரேஸ்குமார் கலந்து கொண்டார்.
சிறார்களின் மேலைத்தேய வாத்தியங்களுடன் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு மறைந்த புவேந்தனின் உருவப் படத்திற்கு அவரின்பெற்றோரும்நிலையநிறுவுனர்களுமாகமகாலிங்கம் தம்பதியினர் மலர்மாலை அணிவித்து மங்கல விளக்கேற்றி போட்டியைஆரம்பித்து வைத்தனர். (9)



# வேலையில்லாப் பிரச்சினைகளே தகாத சம்பவங்களுக்குக் காரணம்

## வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஒக 6

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினைகளே பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்களுக்குக் காரணமாகக் காணப்படுகிறது. பிரதேசத்தில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய தொழில் நிலையங்களை அமைக்க புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழக தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள கிளைகளின் ஏற்பாட்டிலான தென்மராட்சி விழாவும் சாதனையாளர்கள் மதிப்பளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்றன.

நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதால் புலம்பெயர் நாடுகளில் உள்ள எமது பிரதேச மக்கள் பல்வேறு தொழில்களை ஆரம்பித்தால் மாகாணத்தில் காணப்படும் பல்வேறு விரும்பத்தகாத செயல்கள் இல்லாமல் போய்விடுமென எதிர்பார்க்கின்றேன்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோதிலும் வாழ்வாதார உதவிகளைக் கோரும் மக்களின் தொகை சிறிதளவு கூட குறையவில்லை. ஏனெனில் ஒவ்வொரு குடும்பத்திலும் உழைக்கக்கூடியவர்கள் இருந்தும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாததால் பொருளாதார நிலையில் பின்தங்கியே காணப்படுகின்றனர்.

கேரதீவில் உப்பளம் ஆரம்பிக்கமுன்னர் தொழில் முயற்சியாளர்களிடம் நாங்கள் கேட்டுக் கொண்ட ஒரே விடயம் பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் வாழும் குடும்பங்களினதும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டுமென விடுத்த கோரிக்கையை தொழில் முயற்சியாளர் ஏற்றுக் கொண்டுள்ளார். அந்தத் தொழில் முயற்சியாளர் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதால் பிரதேச மக்களின் நலனில் ‹அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அக்கறையுடன் செயற்படுகிறார்.

அவ்வாறு இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் பலர் ஒன்று சேர்ந்தாவது தொழில் முயற்சியினை ஆரம்பித்து நலிவுற்றுள்ள பல குடும்பங்களின் வளர்ச்சிக்கு ஒத்துழையுங்கள். சமூகத்தில் ஏற்படும் குறைபாடுகளை அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் முயற்சித்தாலே குறைக்க முடியும்- என்றார்.

நிகழ்வில் விருந்தினர்களாக கழகத்தின் பிரான்ஸ் கிளையின் தலைவர் செ.முகுந்தராஜா, கனடாக் கிளையின் தலைவர் சி.சுரேந்திரன், பிரிட்டன் கிளையின் தலைவர் மருத்துவர் புவிநாதன் உட்பட புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தேசிய நிலை தமிழ்த் தினப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் வலயத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. (9)



## கொடியேற்றம்

காரைநகர் ஒக.6

காரைநகரில் வியாவில் ஐயனார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் நாள்கள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (250)



## வலி .கிழக்கில் மக்கள் பங்கேற்புடன் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக 6

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையுடன் சனசமூக நிலையங்கள் இணைந்து துப்புரவுப் பணிகளைக் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் முன்னெடுத்தனர். இவ்வகையில் முதற்கட்டமாக புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் சுகாதாரக் குழுவுடன் இணைந்து சுன்னாகம் புத்தூர் வீதியின் இருமருங்கிலும் காணப்படும் பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் கலைமதி சனசமூக நிலையத்தின் சுகாதாரக்குழு உறுப்பினர்கள், பிரதேச சபையின் உறுப்பினர்கள், வெளிவாரி பணியாளர்கள் ஆகியோர் துப்புரவு பணியில் பங்கேற்றனர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் கடந்த அமர்வில் வீதிகளின் இருமருங்கிலும் துப்புரவு, மற்றும் பார்தீனிய செடி ஒழிப்புத் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் இராமநாதன் ஐங்கரனினால் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த வினாவுக்குப் பதிலளித்த தவிசாளர் 'வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையானது யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஏனைய பிரதேச சபைகளைக் காட்டிலும் மூன்று மடங்கு நிலப்பரப்பினைக் கொண்டுள்ளது. அவ்வாறு காணப்படும் பல பகுதிகளின் வீதியோரங்கள் தனியே பிரதேச சபையின் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணி மற்றும் வளங்களுடன் துப்புரவு செய்யப்பட முடியா நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் நாம் சனசமூக நிலையங்களை உள்வாங்கி மக்கள் பங்கேற்புடனான துப்புரவை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதாக' உத்தரவாதமளித்திருந்தார். அத்துடன் பிரதேச சபையின் வெளிவாரி பணியாளர்கள் தினமும் ஏதோ ஒருபகுதியைச் சுத்தம் செய்துவருகின்றனர். சுமார் 104 சதுரக் கிலோ மீற்றருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் சபை உறுப்பினர்கள் மேலும் துப்புரவுப் பணியை ஒழுங்கமைக்கும் பட்சத்தில் அதனை தான் வரவேற்பதுடன் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருவதாக தவிசாளர் தெரிவித்தார்.



## பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஒக 6

யாழ்ப்பாணம், மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய கலையரங்கில் பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத் தலைவர் நடராசலிங்கம் ஜெகதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்றம் உபதவிசாளர் அருணாசலம் பாலமயூரன், தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (159)

## வகுப்பறைக் கட்டடப் பணிகள் நிறைவடையும் நிலையில்



சாவகச்சேரி ஒக 6

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் 10.52 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 8 வகுப்பறைத் தொகுதிகளைக் கொண்ட இரு மாடிக் கட்டட வேலைகள் நிறைவடையும் நிலையில் காணப்படுகிறது.

இந்திய அரசினால் 2013 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இரு மாடிக் கட்டடங்கள் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகியவை தெரிவு செய்யப்பட்டு கடந்த வருடம் ஜூலை 15 ஆம் திகதி வலயக் கல்விப் பணிப்பாளராகவிருந்த சு.கிருஷ்ணகுமாரினால் இரு பாடசாலைகளிலும் அடிக்கல் நடப்பட்டன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் 10.52 மில்லியன் ரூபாவிலும் நாவற்குழி மகா வித்தியாலத்தில் 15 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்பட்ட புதிய கட்டட வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதால் இந்தக் கட்டடங்கள் பாடசாலைகளின் மூன்றாம் தவணை காலத்திற்கு முன்னர் திறந்து வைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (9)



யாழ்ப்பாணம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற ச.நந்தகுமார், திருமதி சு.விஜயகுமாரன் , செல்வி க.தீபா ஆகியோருக்கான பிரிவுபசார நிகழ்வு கடந்த வியாழக் கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 11 மணிக் குப் பாடசாலை அதி பர் க.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (159)



## சிறுவர் சந்தை

கொடிகாமம், ஒக 6

யாழ்ப்பாணம், மீசாலை கிழக்கு நாவலர் முன்பள்ளி சிறுவர்களின் சிறுவர் சந்தை முன்பள்ளியில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆசிரியர் திருமதி ஜெயராசன் தேவகி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அரியநாயகம் திருமதி அரியநாயகம் சறோஜாதேவி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர். (159)

# எதிர்க்கட்சித் தலைமைக்கு வெல்கமவா? தினேஷா?

## மகிந்த அணிக்குள் குழப்பம்



கொழும்பு, ஆகஸ்ட் 6

மகிந்த அணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கின்றபோது அதனைத் தினேஸ் குணவர்த்தனவுக்கு வழங்குவதா இல்லை குமாரவெல்கமவுக்கு வழங்குவதா என்பது தொடர்பில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் தமக்கு எதிர்க்கட்சி அங்கீகாரத்தை வழங்கி தலைமைப் பதவியை வழங்கவேண்டும் என்று கோரி சபாநாயகர் கருஜயசூரியவிடத்தில் மகிந்த அணி கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது.



முன்னதாக, பொதுத்தேர்தல் நிறைவடைந்ததும் மகிந்த அணியின் கட்சித்தலைவர் கூட்டத்தில் அந்த அணிக்கு எதிர்க்கட்சி அங்கீகாரம் வழங்கப்படவேண்டும் என்றும், எதிர்க்கட்சித் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவும் எதிர்க்கட்சித் தலைமை கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவும் நியமிக்கப்படவேண்டும். ஏகொபித்த தீர்மானம் எடுக்கப்பட்டு சபாநாயாகர் கருஜயசூரியவுக்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில்மகிந்த அணியின்நாடாளுமன்றக்குழுவின்தலைவராகஉள்ள தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குமாறு கோரி தற்போது எழுத்துமூலமான கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த அணியின் தலைவராக உள்ள முன்னாள்அரசதலைவர்மகிந்தராஜபக்சவும்தினேஷ்குணவர்த்தனவைஎதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டுமெனத்தீர்மனித்துள்ளதாகவும்நாடாளுமன்றஉறுப்பினர்காஞ்சனவிஜயசேகர ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

மாறுபட்ட இரண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதால்குழப்பநிலைஏற்பட்டுள்ளதாக சில மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்முன்னாள்அரசதலைவர்மகிந்த ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி2,61)

# இலங்கைஉள்ளிட்டநாடுகளுக்கு அமெரிக்காபாதுகாப்புஉதவிகள்

கொழும்பு, ஆகஸ்ட் 6

இந்தோனேசியாபசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு உறவுகளை முன்னேற்றுவதற்காக, இலங்கை உள்ளிட்ட 27 நாடுகளுக்குப்பாதுகாப்புஉதவிகளைவழங்கப்போவதாக அமெரிக்கஇராஜாங்கச்செயலர்றிச்சர்ட்பம்பியோஅறிவித்துள்ளார்.

வொசிங்டனில்நேற்றுமுன்தினம்நடந்தஆசியான்பிராந்தியஅமைப்பின்கூட்டத்தில்அவர்இந்தஅறிவிப்பைவெளியிட்டார்.

இந்தத்திட்டத்தின்கீழ், இலங்கை, பங்காளதேஷ், இந்தோனேசியா, மொங்கோலியா, நேபாளம், பசுபிக் தீவுகள், பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட 27 நாடுகள் சுமார் 300 மில்லியன் டொலர் பெறுமதியான அமெரிக்காவின் இராணுவப்பாதுகாப்பு உதவிகளைப் பெறவுள்ளன.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தல், மனிதாபிமான உதவி இடர் மீட்பு, அமைதி காப்புத் திறன்களை உள்ளடக்கிய290.5மில்லியன்டொலர்வெளிநாட்டுஇராணுவநிதி மற்றும், அனைத்துலகப் போதைப்பொருள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தலுக்கான 8.5 மில்லியன் டொலர் நிதியுதவியை உள்ளடக்கியதாக நாடு கடந்த குற்றங்களுக்கு எதிரான இந்த நிதி உதவி அமைந்துள்ளது. (ரி2)

# மகிந்தவுடன் உறவை பலப்படுத்துமாம்சீனா

கொழும்பு, ஆகஸ்ட் 6

மேலதிக பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம், மகிந்த ராஜபக்சவின்தலைமையிலானசிறிலங்காபொதுமக்கள் முன்னணியுடனான உறவுகளைவலுப்படுத்திக்கொள்ள முடியும்என்றுசீனகம்யூனிஸ்ட்கட்சிநம்பிக்கைவெளியிட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின், அனைத்துலக உறவுகள் திணைக்கள உதவி அமைச்சர் கோ யிசோ, கடந்த வெள்ளிக்கிழமைமுன்னாள்அரசதலைவர்மகிந்தராஜபக்சவையும், சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் தலைவர் ஜி.எல்.பீரிஸையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்த மகிந்த அரசு எடுத்த நடவடிக்கைகளை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரிபாராட்டினார் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தெரிவித்துள்ளார்.

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியுடனானஉறவுகளை சீன கம்யூனிஸ்ட் கட்சி வலுப்படுத்திக் கொள்ளவும், விருப்பம் வெளியிட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார். (ரி2)

# சிங்கப்பூர் ஒப்பந்தத்தினால் ஏற்றுமதிக்கு வாய்ப்பில்லை

## மத்திய வங்கி ஆளுநர்தெரிவிப்பு



கொழும்பு, ஆகஸ்ட் 6

சிங்கப்பூர் உடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மூலமாக இலங்கைக்கு ஏற்றுமதி வாய்ப்புக்கள் மற்றும் அதனூடாகப் பெருமளவு வருமானம் இருக்காது. இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர்இந்திரஜித்குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

நாணயச்சபை மீளாய்வுக் கூட்டத்தொடரின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றுமத்தியவங்கியில்நடைபெற்றது. இந்தசந்திப்பின் போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் மற்றும்அதன்மூலம்பெருமளவானஏற்றுமதிவருமானம் என்பனவற்றை இலங்கை எதிர்பார்க்க முடியாது. காரணம்சிங்கப்பூர்பெருமளவில்தன்னிறைவடைந்துள்ளது. இலங்கையிடமிருந்து பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியதேவைகுறைவாகவேஉள்ளது. எனவேசுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் ஊடாகச் சிங்கப்பூருடன் ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வருமானம் என்பவற்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகும்.

முதலீடு மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் என்பவற்றில் ஈடுபடுவதற்கானவாய்ப்புபெருமளவில்உள்ளது. சிங்கப்பூர்முதலீட்டாளர்களை இலங்கையிலுள்ளவணிகவாய்ப்புக்கள் மூலம் ஈர்த்துக் கொள்வதற்கும், இலங்கையில் சிங்கப்பூர் முதலீடுகளை அதிகரித்துக் கொள்வதற்கும் முடியும்.

அத்தோடு இரு நாடுகளும் பரஸ்பர இலத்திரனியல் வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களை விரிவுபடுத்தவும், வணிக வாய்ப்புக்களை அதிகரிக்கவும் முடியும்என்றார். (ரி2,31)

## தமது பிள்ளைகளின்

# எதிர்காலம்நிறைவேறுகையில் மக்கள் மனம் மகிழ்வடையும்



கொழும்பு, ஆகஸ்ட் 6

தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த நல்ல கனவுகள் கண்முன்னே தெரியும்போது இந்த நாட்டின் அப்பாவி மக்கள் உண்மையாகவே மகிழ்வடைகின்றனர். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனதெரிவித்துள்ளார்.

கிராமத்திலுள்ள பாடசாலை, மருத்துவமனை மற்றும் சமய நிறுவனங்கள் அபிவிருத்திசெய்யப்பட்டு, மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படுவதனூடாக மக்கள் மகிழ்வடைகின்றனர்.

லிப்டன்சுற்றுவட்டாரத்திலிருந்து உங்களுக்கு இப்போது மகிழ்ச்சியா?என்றுகேட்கின்றஅரசியல்வாதிகள் கிராமத்திலுள்ள அப்பாவி மக்களிடம் சென்று இந்த மகிழ்ச்சியைக் கண்டுகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஹிங்குரக்தமன காஷ்யப்ப பிரிவெனாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிக்குகளுக்கான விடுதியை மகா சங்கத்தினரிடம் கையளிக்கும்நிகழ்வுஅண்மையில்இடம்பெற்றது. இதில்கலந்துகொடு உரையாற்றும்போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,

தற்போதைய அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நாட்டிலுள்ள அப்பாவிக் கிராமிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

நகரத்திலுள்ளஅபிவிருத்தியைக் கிராமத்துக்கும் கொண்டுபோய் கிராமத்தில்இடம்பெற்றுள்ளஅபிவிருத்திதொடர்பானஅநீதிகளை இல்லாமல் செய்வதற்கு தற்போதைய அரசு விரிவான நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

விவசாயசமூகத்தின்பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் வாழ்க்கையையும்நாட்டின்விவசாயத் துறையையும் அதே போன்று தேசியப் பொருளாதாரத்தையும்கட்டியெழுப்புவதற்கு விவசாயத் துறையில் விரிவான மாற்றமொன்றைத் தற்போதைய அரசு ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு கல்விமான்களின் ஒத்துழைப்பு அவசியம் - என்றார்.

பிரிவெனாவில் கல்வி கற்கும் பிக்கு மாணவர்களுக்கு அரச தலைவர் கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

புதிய பிக்கு விடுதிக்கு, காலஞ்சென்ற சங்கைக்குரிய வடகொட பிரேமானந்த நாயக்க தேரரின் பெயரை வைப்பதற்கு அரச தலைவரிடம்முன்வைக்கப்பட்ட கோரிக்கை அரச தலைவரால் நிறைவேற்றப்பட்டது.

பொலனறுவைஇசிபதனாராமாதிபதி சங்கைக்குரிய உடகம தம்மானந்த தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், சாந்த பண்டார, வடமத்திய மாகாண ஆளுநர் எம்.பீ. ஜயசிங்ஹ, பொலனறுவைமாவட்டச்செயலர்ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இவ்வாறு அரசதலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி2)

# மத்தல திட்டம் தொடர்பில் இந்தியாவுடன் பேச்சுக்கள்

## சிறிபால டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஆகஸ்ட் 6

மத்தல வானூர்தித் தளத்திட்டம்தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இலங்கை சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மத்தல வானூர்தித் தளத்தைக் கொள்வனவு செய்யும்திட்டம்எதுவும்பரிசீலனையில்இல்லை என்று இந்தியாவின் சிவில் வானூர்திப் போக்குவரத்து இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹா இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

மத்தல வானூர்தித் தளத்தைக் கூட்டாக இயக்குவதுதொடர்பாகஇரண்டுநாடுகளுக்குஇடையில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தைஎட்டியிருப்பதாகக் கூறப்பட்டிருந்த நிலையில், இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹாவின் இந்தக்கருத்துகொழும்புக்குகுழப்பமானசமிக்ஞைகளை அனுப்பியிருந்தது. இந்த நிலையில், இலங்கை சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம், இது பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், மத்தல வானூர்தித் தள அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டுவருகின்றன.

இன்னமும்இரண்டுதரப்புகளுக்கும்இடையில் உடன்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை என்ற அடிப்படையிலேயே பெரும்பாலும், இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹா, நாடாளுமன்றத்தில் அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கலாம்" என்றார்.

**மகிந்தவின் எச்சரிக்கை**

இதற்கிடையே, கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை அரசைக் கவிழ்க்கும் இலக்குடன் நடத்தப்பட்ட ஜன பலய பேரணியில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இலங்கை தேசியச் சொத்துக்களை வாங்க வேண்டாம் என்று வெளிநாடுகளுக்கு எச்சரித்துள்ளார்.

"வெளிநாடுகளுக்கு ஒரு கோரிக்கையை விடுக்கிறேன். இலங்கையின் தேசிய சொத்துக்களை வாங்காதீர்கள். நாங்கள் விரைவில் ஆட்சிக்கு வந்ததும் அவற்றைத் தேசியமயமாக்குவோம்" என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ரி2)

# அரச தலைவர் வேட்பாளராக சிரந்தி போட்டியிட்டால் நன்றாக இருக்கும்

## நாமல் எம்.பிக்கு அமைச்சர் நிமல் ஆலோசனை

**கொழும்பு, ஓக. 6**

**முன்னாள் அரச தலைவரின் மனைவி சிரந்தி ராஜபக்சவை அடுத்த அரசதலைவராகப் போட்டியிட நிறுத்தினால் சகலவற்றுக்கும் வாய்ப்பாக அமையும். கோத்தா வந்தால் பல விடயங்களுக்கும் சிக்கலாகிவிடும் என்று அமைச் சர் நிமல் சிறியால டி சில்வா கூறியுள்ளார்.**

முன்னாள் அரசதலைவரின் மூத்த புதல்வரும், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்குத் தனிப்பட்ட விடயமொன்றுக்காகத் தொலைபேசி அழைப்பொன்றை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி சார்பான வேட்பாளர் தொடர்பாகவே பேச்சு அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

"கோத்தபாய ராஜபக்சவை வேட்பாளராகக் களமிறக்கினால் அனைவருடைய ஆதரவையும் பெறுவது கடினமாக இருக்கும். மத்தியதர மற்றும் சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெறுவதும் இலகுவாக இருக்காது என்று கூறியதோடு பசில் ராஜபக்சவைக் களமிறக்கினால் ஏனையவர்கள் எதனையும் செய்ய முடியாது. அனைத்தையும் அவரே செய்து முடித்துவிடுவார். ஆகவே இதற்கு அரசதலைவர் வேட்பாளருக்குப் பொருத்தமானவர் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் பாரியாரே. அவரைக் களமிறக்கினால் அனைவருடைய ஆதரவையும் பெறமுடியும்" என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இந்த விடயம் சம்பந்தமாக எந்தவிதமான பதிலையும் கூறவில்லை என்றும்' கூறப்பட்டுள்ளது. (4)

# புலமைப் பரிசில் எழுதச் சென்ற சிறுமி மீது யானை தாக்குதல்

## தாயாரும் தப்பவில்லை

கொழும்பு, ஓக. 6

பாடசாலை மாணவியும் அவரது தாயும் காட்டு யானையின் தாக்குதலில் காயமடைந்து மகியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் மகியங்கனை, ஹத்தத்தாவ கிராமத்தில் நேற்று இடம்பெற்றது.

நேற்று இடம்பெற் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தாயுடன் சென்று கொண்டிருந்தபோதே யானை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சயுரி சத்சரனி என்ற மாணவியும் சேபாலிகா குமாரி (வயது -35) என்ற தாயுமே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். (4)

# புலமைப் பரிசில் எழுதவிருந்த 84 மாணவர் மீது குளவி 'கடி'

## விகாரை வழிபாட்டில் சம்பவம்

கொழும்பு, ஓக. 6

அநுராதபுரம் பதவிய பிரதேசத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்ட சுமார் 136 பேர் பதவிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று இட்ம்பெற்றது. நேற்று முன்தினம் அவர்கள் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்வதற்காக பதவிய சிறிசுதர்சனாராம விகாரையில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர். அதன்போதே சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்களில் 84 பேர் மாணவர்கள். 52 பேர் பெற்றோர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவிய, மஹசென் மகா வித்தியாலய மாணவர்களே இவ்வாறு காயமடைந்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அனைவரும் தற்போது வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# கால்வாயில் வீழ்ந்து குழந்தை இறந்தது

கொழும்பு, ஓக. 6

கால்வாய் ஒன்றில் வீழ்ந்து ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை ஒலகன்வத்த பிரதேசத்தில் நேற்றுச் சம்பவம் இடம்பெற்றது.

அகுரன்பட பிரதேசத்தை சேர்ந்த 3 வயதுடைய குழந்தையே உயிரிழந்தார். தனது தாயுடன் ஒலகன்வத்த பிரதேசத்தில் நீராடச் சென்றுள்ளார். தாய் கால்வாயின் ஓரத்தில் ஆடைகளைச் சலவை செய்துகொண்டிருந்தபோது குழந்தை கால்வாயில் வீழ்ந்துள்ளார். குழந்தையை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோதும் சிகிச்சை பயனளிக்கவில்லை. (4)

# கூட்டு எதிர்க்கட்சியின் ஊர்வலம் வெற்றியில்லை

## அகிலவிராஜ் கூறுகிறார்

கூட்டு எதிர்க்கட்சி கடந்த 2ஆம் திகதி கொழும்பில் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் கூட்டம் என்பன வெற்றியளிக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பண்டாரகம, ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனபல சேனா பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தைத் தோற்கடிக்க சிறிலங்கா மக்கள் முன்னணியில் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தனது ஆதரவாளர்களுக்குச் செய்திஅனுப்பியிருந்தார்.

எனினும், பேரணிக்குப் போதிய ளவு கூட்டம் கூடவில்லை. விமல் வீரவன்ச மற்றும் வேறொரு அரசியல்வாதி அழைத்து வந்தவர்களே கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் கூட்டத்தில் இருந்து இடைநடுவில் நழுவிவிட்டார் என்று அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (4)

# கழியாட்ட நிகழ்வில் மூவர் உயிரிழந்தனர்

களியாட்ட நிகழ்வில் திடீரென்று சுகவீனமடைந்த 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


வாதுவை பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினமிரவு நிகழ்வு இடம்பெற்றது.

சுகவீனமடைந்த அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பயனளிக்கவில்லை.

திவுலப்பிட்டிய, கெஸ்பேவ பிரதேசங்களைச் சேர்ந்த 20, 31 மற்றும் 36 வயதுடையவர்களு உயிரிழந்தனர்.

உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (4)

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வேண்டும் - செய்தி



நன்றி - சண்டே ரைம்ஸ்

# சகல குற்றங்களையும் செய்வது கூட்டரசுதான்

கொழும்பு, ஓக்.5

நாடு என்ற வகையில் மேற்கொள்ளக்கூடிய சகல குற்றங்களையும் தற்போதைய அரசு செய்துகொண்டு வருகிறது என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த 'அரசுக்கு எதிரான தேசிய போராட்டம்' என்ற தொனிப்பொருளிலான பொதுமக்கள் தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்று கலவான பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் வளங்கள் தொடர்ச்சியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இது நாட்டைச் சிக்கலில் வீழ்த்தவுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் நிர்வாகம் செய்வது பற்றித் திட்டங்கள்

## வகுக்கப்படுகின்றன என்கிறார் முன்னாள் அமைச்சர் பசில்

கொழும்பு, ஓக. 6

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்னர் நாட்டை நிர்வாகம் செய்யும்முறை சம்பந்தமாகத் தற்போது திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கலவான பிரதேசத் தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'அரசுக்கு எதிரான போராட்டம்' என்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த நாட்டைப் பொறுப்பெடுத்து எவ்வாறு கொண்டுசெல்வது என்பது தொடர்பாக இரவு பகலாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தற்போதைய அரசு மேற்கொள்கின்ற தேசிய துரோக மற்றும் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது எவ்வாறு என்பதே எமக்குத் தற்போது சவாலாகவுள்ளது - என்றார். (4)

# இப்படியும் ஒரு கொள்ளை

கொழும்பு, ஓக. 6

காலியில் உள்ள அகஸ்கம என்ற இடத்தில் விசித்திரமானதொரு கொள்ளை நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் குடியிருப்பாளர்கள் மூன்று பேர்தான். கணவன், மனைவி ஒரு மகள். கணவன் வெளியூர் சென்றுவிட்டார். சென்றதன் பின்னர் அந்த வீட்டுக்கு 5பேர்கொண்ட குழுவொன்று வாகனத்தில் சென்றுள்ளது. அவர்கள் கையில் பெரியளவான பெட்டிகளாகப் பரிசுப் பொதிகளை வைத்திருந்துள்ளனர்.

அந்த வீட்டின் குடும்பத் தலைவனின் பெயரைக் கூறிக்கொண்டே அவர்கள் வீட்டுக்குள் நுழைந்தனர். அதனால் தந்தையாரின் நெருங்கிய நண்பர்கள் என்று வீட்டுக்காரர் நினைத்து அவர்களை இன்முகத்துடன் வரவேற்றுத் தமது வீட்டுக்குள் அனுமதித்துள்ளனர். உள்ளேசென்ற அந்த விருந்தினர்கள் சிறிது நேரத்தில் தங்கள் கை வரிசையைக் காட்டியுள்ளனர்.

தாயையும் மகளையும் கட்டிப்போட்டனர். அவர்களின் வாயையும் பிளாஸ்டர் கொண்டு ஒட்டினர். பின்னர் அந்த வீட்டில் தேடுதல் நடத்தி பணம் மற்றும் நகைகள் உட்பட சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நீண்ட நேரத்தின் பின்னர் அயலிலுள்ளவர்கள் அங்கு சென்றதால் தாயையும் மகளையும் மீட்டனர். கொள்ளைக்குழு கொண்டுவந்திருந்த பெரியளவான பரிசுப் பொதிகளைப் பிரித்துப் பார்த்தபோது அவற்றுக்குள் செங்கற்களே இருந்துள்ளன. (4)

# மட்டு.மாவட்டத்தில் பெரும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 6

மட்டக்களப்புமாவட்டத்தில்சிறப்பு, பெரும்அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் அரச தலைவரின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் துமிந்த திசநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமளவிலான நீர்ப்பாசனத் திட்டமான உன்னிச்சைநீர்ப்பாசனத்திட்டத்தின்கீழ்விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர்இதனைத்தெரிவித்துள்ளார். அவர்தெரிவித்ததாவது, விவசாயிகளுக்காகத்தான்நீர்ப்பாசனத்திணைக்களம் உள்ளது. விவசாயிகள் இல்லாவிட்டால் நீர்ப்பாசனத் திணைக்களம் என்ற ஒன்று இல்லாமல் போய்விடும். இரண்டுதரப்பினரும்இணைந்துசெயல்படுவதன்மூலமே சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக விவசாயிகளுக்கும், நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை இரண்டு தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.


இந்தப் பிரச்சினை இங்கு மட்டுமன்றிப் பல இடங்களில் காணப்படுகின்றன. இதில் யார் பிழை, யார் சரி என்பதற்கு அப்பால் இரண்டு தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் செயலாற்ற முன்வரவேண்டும் என்றார். இந்தக் கூட்டத்தில் அமைச்சின்செயலர்கள், திணைக்களங்களின்தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2)

# ஊடக அச்சுறுத்தல் தற்போதும் உண்டு

## சாடுகிறார் நாலக தேரர்

கொழும்பு, ஆகஸ்ட் 6

ஊடக சுதந்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர், கூறினாலும் அரசின் சில தரப்பினர் ஊடகங்களை அச்சுறுத்திவருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலர் பெங்கமுவே நாலக தேரர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளதாகக் கொழும்பு சிங்கள ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், வன்முறை அரசியலைச் செயல்படுத்திவந்தஆட்சியாளர்கள்தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கப் போவதில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதிகாரம் கையை விட்டுச் சென்ற பின்னர், அவர்கள் மக்களுடன் இருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். சில ஊடகங்கள் மீது அரசியல்வாதிகள் ஏற்படுத்திய அச்சுறுத்தல்களைக்கண்டிக்கின்றோம் என்றும் பெங்கமுவேநாலகதேரர்தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி2)

# நண்டு பிடித்த அறுவர் கைது

கொழும்பு, ஆகஸ்ட் 6

யால சரணாலயத்தின் புதவ நீரேரியில் நண்டுகள் பிடித்த அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சுமார் 400 கிலோவுக்கும் அதிகமான நண்டுகளைப் பிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் திஸ்ஸமஹாராக நீதவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான், ஒவ்வொருவருக்கும் தலா 35 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கைப்பற்றப்பட்ட நண்டுகளை நீதிமன்ற அனுமதியின் பேரில் மீண்டும் குறித்த நீரேரியில் விட வனவிலங்குத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி2)

# தமிழர்களின் மாற்றமே முஸ்லிம்களுக்குத்தீர்வு

கொழும்பு, ஆகஸ்ட் 6

தமிழ்முஸ்லிம்மக்கள்இந்தமண்ணிலேநிம்மதியோடு அரசியல் தீர்வு பெற்று வாழ வேண்டுமாக இருந்தால் முஸ்லிம்களின் அடிப்படைத் தேவைகள், அரசியல் உரிமைகளை மதிக்கும் சமூகமாகத் தமிழ் சமூகம் மாற வேண்டும். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

விடயம் தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

தமிழ்முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதன் ஊடாகவடகிழக்குஇனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

மாறாகமுஸ்லிம்களின்உணர்வுகள், உரிமைகளை ஒழித்து விட்டு அம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

இந்தவிடயத்தில்தமிழ்த்தலைமைகள்மிகத்தெளிவாக இருக்க வேண்டும்.

வடகிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதாக இருந்தால் முஸ்லிம்களை தமிழ் மக்கள் மதிப்பளிக்க வேண்டும். முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், தேவைகளைநிவர்த்திசெய்வதற்கும் தமிழ்த் தலைமைகள் முன்வர வேண்டும்.

மாறாகத்தமிழ்த்தலைமைகள்தமது அரசியல்சுயலாபங்களுக்காகத் தமிழ் பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம், கோஷங்கள், விமர்சனங்களை முன்வைக்கின்றபோது ஒருபோதும் வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

தமிழ்முஸ்லிம்மக்கள்இந்தமண்ணிலேநிம்மதியோடு அரசியல் தீர்வு பெற்று வாழ வேண்டுமாகவிருந்தால் முஸ்லிம்களின் அடிப்படைத் தேவைகள், அரசியல் உரிமைகளை மதிக்கின்ற சமூகமாக தமிழ் சமூகம் மாற வேண்டும்என்றார். (ரி2)

# வலம்புரி சங்குகளுடன் இருவர் கைது

மாத்தறை, ஆகஸ்ட் 6

வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதற்கு முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

மாத்தறைப் பகுதியில் இரண்டு வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதற்கு முற்பட்ட இருவரே கைதுசெய்யப்பட்டதாக மாத்தறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹரகமவிலிருந்து மாத்தறைப் பகுதிக்கு குறித்த வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதற்காகக் கொண்டு சென்ற போதே பொலிஸார் இவர்களைக் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 22 வயதான மதகுரு ஒருவரும் அடங்குவதாகத் தெரிவித்த பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ரி2)

# மாணவர்களின் சாதனைகளேசமூகத்தின் எழுச்சிக்கு வித்திடுகின்றது

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 6

மாணவர்களின்சாதனைகளேசமூகத்தின்எழுச்சிக்குவித்திடுகின்றது. இவ்வாறு முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளருமான தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

மாகாண ரீதியில் மெய்வல்லுனர் போட்டிகளில் தங்கம் வென்ற மாணவர்களைமதிப்பளிக்கும்நிகழ்வுபிரதேசசபையின் கேட்போர் கூடத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

மாணவர்கள் பெற்ற சாதனை கல்லூரிக்கு மட்டுமல்ல பிரதேசத்தின் ஏனையபாடசாலைகளில்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதாரண புருசர்களாக திகழ்கின்றார்கள் இவ்வாறான சாதனைகள்சமூகத்தின் எழுர்ச்சிக்குஎடுத்துக்காட்டாக அமைகின்றது

இதுபோன்றசாதனைகள் இனிவரும்காலங்களிலும் உருவாக வேண்டும். கல்வியில் மாத்திரமல்ல விளையாட்டு போன்ற புறக்கிரித்திய செயல்பாடுகளிலும் ஒரு மாணவன் தன்னை முழுமையாகஈடுபடுத்துகின்றபோதுதான் அவன் முழுமையான சாதனைகளுக்கும் சொந்தக்காரனாகின்றான். இப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் றாணமடு இந்துக் கல்லூரியானது அண்மைக் காலங்களில் பல சாதனைகளைநிகழ்திவருவதைக்காணமுடிவதாகவும்இதற்கு கல்லூரியின் முதல்வர், உப முதல்வர், ஆசிரிய ஆசிரியைகளின், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அர்ப்பணிப்பு என்பது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றதுஎன்றார்.

இந்தநிகழ்வில்தமிழரசுக்கட்சியின்பிரதேசசபைஉறுப்பினர்கள், அ.குணரெட்ணம், அ.சுதர்சன், மு.நிறோஜன்,- கல்லூரி முதல்வர்கள், ஆசிரிய ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கதினர் ,பழய மாணவர்கள், பிரதேச சபை ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி2)

# அமெரிக்க இராணுவத்தினரால் அநுராதபுரத்தில் வேலைத்திட்டம்

கொழும்பு, ஆகஸ்ட் 6

அமெரிக்க இராணுவத்தினர் அனுராதபுரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றுமுதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த வேலைத்திட்டத்தில் 65 சிப்பாய்கள் ஈடுபடவுள்ளனர்.

"பசிபிக் ஏன்ஜல்" எனும் பெயரில் இந்த நடவடிக்கை அழைக்கப்படுகின்றது. இதன் கீழ் சுகாதாரம், பல் மருத்துவ சேவை, சிறுவர் நல சேவை, பொறியியல் சேவைகள் போன்ற வேலைத்திட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் இலங்கை வானூர்திப் படைப் பிரிவினரும் கலந்து கொள்ளவுள்ளனர் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளைப் புதுப்பித்தல் நடவடிக்கைகளும் இவர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் இரு நாடுகளினதும் இராணுவத்தினரிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் எனவும், இதனால், பொது மக்களும் நன்மையடைவதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஹில்மன் தெரிவித்துள்ளார். (ரி2)

# துப்பாக்கிவைத்திருந்தவர்கைது

கொழும்பு, ஆகஸ்ட் 6

துப்பாக்கிஒன்றைச்சட்டவிரோதமாகவைத்திருந்தஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமகாராம, அமரவெவ பிரதேசத்தில் இந்தக் கைதுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

பொலிஸ்சிறப்பு அதிரடிப் படையின் கதிர்காமம் முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.


சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக திஸ்ஸமகாராம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ரி2)

# கல்வி இராஜங்க அமைச்சருக்கு மதிப்பளிப்பு விழா

ஹற்றன், ஆகஸ்ட் 6

ஹற்றனில் கல்வி இராஜங்க அமைச்சர் இராதாகிருஸ்ணனுக்குமதிப்பளிப்புவிழா நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை ஹற்றன் டி.கே.டபிள்யு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.



இராதாகிருஸ்ணனின்30வருடஅரசியல் வாழ்க்கை முழுமையை முன்னிட்டும், கலாநிதிபட்டம்பெற்றதை மதிப்பளிக்கும் முகமாக இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில்பிரதிஅமைச்சர்முத்துசிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மத்திய மகாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்படப் பல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களும் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர். (ரி2)

# யாழ்.போதனாவில் முதற்தடவையாக இருதயவால்பு மாற்று சத்திரசிகிச்சை

## மருத்துவ நிபுணர் முகுந்தன் குழு சாதனை

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் முதற்தடவையாக இருதய வால்பு மாற்று சத்திர சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது. இருதய வால்பில் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிருக்குப் போராடியவருக்கு சத்திர சிகிச்சைமூலமாகசெயற்கைவால்புபொருத்தப்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

மருத்துவமனையில்இருதயநெஞ்சறைசத்திரசிகிச்சை நிபுணர் சி.முகுந்தனின் மற்றொரு சாதனையாகவே இந்தச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இருதய வால்வில் கிருமித்தொற்று ஏற்பட்டதனால் தீவிரசிகிச்சைப் பிரிவில் 14 நாள்கள் செயற்கைச் சுவாசம் மூலமாகஉயிரூட்டப்பட்டுக்கொண்டிருந்த41வயதுடையவருக்கே சிக்கலான விடயமான இருதய வால்வு மாற்றுசத்திரசிகிச்சைவெற்றிகரமாகமேற்கொள்ளப்பட்டுள்ளது. அவருக்கு மறுவாழ்வு வழங்கப்பட்டதற்கு ஒப்பானதாக இந்தச்சத்திர சிகிச்சை அமைந்துள்ளது என்று மருத்துவமனைத் தரப்பினர் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த குடும்பத்தலைவருக்கு 3 பிள்ளைகள். கூலிவேலைசெய்து அவர்வாழ்கிறார். அவர்நோய்வாய்ப்பட்டுகடந்தமேமாதம்27ஆம் திகதி போத்னா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இருதயத்தில்கிருமித்தொற்றுஏற்பட்டுள்ளமைபரிசோதனையில்தெரியவந்தது. அவர்மருத்துவநிபுணர்முகுந்தனின் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

கிருமித்தொற்றுஇருதயவால்புக்கும்தொற்றியுள்ளமையும்அதுஉயிராபத்தைஏற்படுத்தும்நிலைக்குச்செல்கின்றதையும்நிபுணர்முகுந்தன் அவதானித்துள்ளார். சத்திர சிகிச்சைமூலமாகஇருதயவால்பைமாற்றுவதைத்தவிர வேறுவழியில்லைஎன்பதால்அவரதுகுடும்பத்தினருக்கு அது குறித்துத் தெளிவுபடுத்தப்பட்டது. அவர்களது சம்மதத்துடன் உயிராபத்து மிக்க இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள அவர் நடவடிக்கை எடுத்தார். கொழும்புக்குச்சென்றுஅதற்குரியசெயற்கைவால்பைஎடுத்துவந்து கடந்த ஜூன் 21 ஆம் திகதி அவருக்குச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. எனினும் ஜூலை 21 ஆம் திகதிவரை அவர் மருத்துவமனையில் தீவிர மருத்து கண்காணிப்பில்வைக்கப்பட்டிருந்தார். உயிராபத்துமிக்கதாக இருந்ததால் அவ்வளவு உயரிய மருத்துவ கண்காணிப்பை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. சுமார் 2 மாதங்களின்பின்னர் அவர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இதுவரை இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்புக்களுக்கான சத்திர சிகிச்சை, பிறப்பிலிருந்து இதயத்தில் ஏற்படுகின்றஅமைப்பு ரீதியான அசாதாரண மாற்றங்களுக்கான சீரமைப்புசத்திரசிகிச்சைமுதலான திறந்த இருதய சத்திரசிகிச்சைகளே இதுவரை மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் முதற்தடவையாக இந்தச்சத்திரசிக்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் இருக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு வாராந்தம் இருவருக்கு மாத்திரமேதிறந்தஇருதயசத்திரசிகிச்சைகளைமேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் தலைமையில் இந்தச் சத்திரசிகிச்சை செய்யப்படுகிறது. அவருடன் உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் மருத்துவர் சு.பிறேமகிருஸ்ணா மற்றும் ஏனைய துறைசார் சத்திரசிகிச்சைக் குழாமும் இணைந்து குறித்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டிருந்தனர். போதனா மருத்துவமனையில் 2017 ஆம் ஆண்டு டிசெம்பரில் இருதய நெஞ்சறைசத்திரசிகிச்சைகள்ஆரம்பிக்கப்பட்டன. கடந்த ஜூலை 31ஆம் திகதிவரை 44 பேருக்கு திறந்த இருதய சத்திரசிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன. இவற்றைவிட 6 பேருக்கு இருதயம், நுரையீரலுடன் தொடர்புடைய ஆபத்தான சத்திரசிகிச்சைகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இருதய சத்திரசிகிச்சைக்காக 750பேர்வரையில்காத்திருக்கின்றார்கள். இருதயநெஞ்சறைசத்திரசிகிச்சைநிபுணர் சி.முகுந்தன் இந்தவகைச்சத்திரசிகிச்சைகளைமேற்கொண்டுவருகிறார். திறந்தஇருதயசத்திரசிகிச்சைகளைதனியார்வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு ரூபா 6 இலட்சம் முதல்10இலட்சம்வரைதேவைப்படும். இலங்கையின் வடபகுதியில் மட்டுமன்றி கிழக்குப் பகுதியிலும் உள்ள ஏழ்மையான இருதய நேயாயாளிகளின் உயிர்காப்பதற்கு யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு விரைந்து விரிவாக்கப்பட வேண்டும் மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது. (4)

# வடக்கில் தொல்பொருள் திணைக்களம் இன, மதம் சார்ந்துதான் செயற்படுகிறது

## அமைச்சர் முன்பாக சாள்ஸ் எம்.பி. எடுத்துரைப்பு

**மன்னார், ஓக. 6**

**தொல்பொருள்ஆராய்ச்சித்திணைக்களம்ஒருஇனம்சார்ந்த, ஒருமதம்சார்ந்ததிணைக்களமாகத்தான் தற்பொழுது வடக்கில் செயற்படுகின்றது. அதுமட்டுமன்றி பக்கச்சார்பாகவும் செயற்படுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

மன்னார் நறுவிலிக்குளம் கிராமத்தில்வீடுகள்கொண்டமாதிரிக்கிராமம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார்மாவட்டத்துக்கான விளையாட்டு மைதானம் நறுவிலிக்குளத்தில் சீரமைக்கப்பட்டு வந்தது. தற்போது அந்தவேலை இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. திருக்கேதீஸ்வரத்தில் மக்கள் குடியமர முடியவில்லை. நானாட்டான் இராசமடுவில் வீடுகள் கட்ட முடியவில்லை. இவை எல்லாவற்றுக்கும்காரணம்கேட்டால்தடையாக இருப்பது தொல்பொருள் திணைக்களமே.

இந்த மாவட்ட விளையாட்டு மைதானம் 2011ஆம் ஆண்டு முன்மொழியப்பட்டுவேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும்பின்னர்இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதே வேலைத்திட்டம் தென்பகுதி மாவட்டத்தில் இடம்பெற்றால், இத்தனை வருடங்களுக்குத் தொல்பொருள்ஆராய்ச்சித்திணைக்களத்தால்நிறுத்தி வைக்க முடியுமா? அதற்கு அங்கிருக்கின்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுவார்களா?

நாங்கள் பல தடவை கதைத்தும் அதற்குரியதீர்வுவரவில்லை. விளையாட்டுத்துறைஅமைச்சரிடம்கதைக்க வேண்டும், கலாசார அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுடன் கதைக்க வேண்டும்என்றுசொல்கின்றார்கள். அவர்களிடம்கதைத்தபோதும் பார்க்கிறோம் என்று சொல்கின்றார்களே தவிர வேலை நடக்கவில்லை.

### ஒரு அமைச்சின் பணிகளை வேறு அமைச்சு தடுக்கிறது

மாவட்டத்தில்இருக்கின்றஅபிவிருத்திகளை ஒவ்வொருதிணைக்களங்களும் தடைசெய்கின்ற நடவடிக்கை தொடர்கிறது. வனஜீவராசிகள் திணைக்களம் இன்னுமொரு விடயத்துக்குத்தடையாகஇருக்கின்றது. அரசின் ஒரு அமைச்சு எடுக்கின்ற முயற்சியை இன்னொரு அமைச்சு தடைசெய்கின்றது.

வடக்குகிழக்கில்50ஆயிரம்வீடுகள் அமைக்கப்படும் 2017ஆம் ஆண்டு அரசு அறிவித்திருந்தது. 65 ஆயிரம் வீடுகள்வருகின்றதுஎன்றும்அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. முதற்கட்டமாக 25 ஆயிரம் வீடுகள் அமைக்க அமைச்சரவை பத்திரம் நிறைவேற்றப்பட்டது. ஒரு வருடம்ஆகியும்25ஆயிரம்வீடுகள் திட்டத்தில் ஒரு வீடுகூட இன்னும் கட்டிமுடிக்கப்படவில்லை.

இறுதியில், வடக்குக்கிழக்கில்சிறப்புப் பேரவை ஒன்றை உருவாக்கி ஒரு வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை இப்பொழுது அறிவிக்கின்றார்கள். 25 வீடுகள் கையளிக்கப்படுகின்றன. ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்தும்போது அது அந்தமக்களுக்குஉடனடியாகநடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்படி நடைமுறைப்படுத்தப்பட்டால் தான் அது மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும். வீடுகள் இல்லாமல் பல ஆயிரம் மக்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும்உள்ளார்கள். அந்தந்தமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்கள், பிரதியமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்றஉறுப்பினர்கள், பிரதேச சபைத்தவிசாளர்கள், செயலாளர்கள் உட்பட அனைவரிடமும்மக்கள்வீடுகளுக்காகஅலைகின்றார்கள். அமைச்சுகள்மாறினால்அந்தச்செயற்பாடுகளுடைய வேகம் குறையும். அகவே அமைச்சர் சஜித், கூட்டரசில் முக்கிய அமைச்சராகஇருக்கின்றீர்கள், அரசியல்பாராது எமது மக்களுக்கு வீடுகளை வழங்க வேண்டும். (4,213)

# 23 வீடுகள் கொண்டமைந்த கிராமம் மன்னாரில் திறப்பு



மன்னார், ஓக. 6

மன்னார் நறுவிலிக்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 23 வீடுகள் கொண்ட 102 ஆவது மாதிரிக்கிராமம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச அதனைத் திறந்துவைத்து மக்களிடம் ஒப்படைத்தார்.

நறுவிலிக்குளம்கிராமத்தில்லூர்துநகர் எனும் மாதிரிக்கிராமமே திறந்து வைக்கப்பட்டது. குறித்த கிராமத்தில் தலா 2 இலட்சம் ரூபா வங்கிக் கடனுக்கான சான்றிதழ்களையும் வாழ்வாதார உதவிகளையும் அமைச்சர் பயனாளிகளிடம் நேற்று வழங்கினார்.

நைட்டாதொழிற்பயிற்சிநிறுவனத்தின் மூலம் மேசன் தொழிற்பயிற்சி பெற்ற 158 பயனாளர்களுக்கான சீருடைகளும்உபகரணங்களும்அதன்போது. வழங்கப்பட்டன.

115 பேருக்கான மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இந்த திட்டம் 2025 இல் அனைவருக்கும் வீடு பெற்றுக்கொள்ளும் நோக்கில் அமைச்சர்சஜித்உருவாக்கினார்என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில்விருந்தினர்களாகநாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சாள்ஷ்நிர்மலநாதன், அமைச்சர் ரிஷாட் பதியுதீன், பிரதியமைச்சர் காதர் மஸ்தான், ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர்முகமதுபஸ்மி, மன்னார் மாவட்டச்செயலர் சி.ஏ.மோகன்ராஸ், நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிகந்தகுமார், நானாட்டான்பிரதேசசபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி, நானாட்டான் பிரதேசசபை உபதவிசாளர் புவனம் மற்றும் உறுப்பினர்கள், வீடமைப்புஅதிகாரசபையின்மன்னார் மாவட்ட முகாமையாளர் திருமதி சொர்ணராஜா, தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊழியர்கள் மற்றும் பெருமளவானோர்கலந்துகொண்டனர். (4,213,56)

# நாடு திரும்பிய சகோதரியை பார்க்கச்சென்றோர் மீது வெட்டு

தென்மராட்சி. ஓக. 6

புலம்பெயர் நாடொன்றிலிருந்து குடும்பத்துடன் நாட்டுக்கு வந்திருந்த சகோதரியைக் காணச்சென்ற சகோதரங்கள் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தென்மராட்சியின் நுணாவில்மேற்கில்நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் மூவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

புலம்பெயர் நாட்டில் வசித்த சகோதரி நீண்டகாலத்தின் பின்னர் நுணாவிலுக்கு வந்துள்ளார். அவரைப் பார்க்கமீசாலை வடக்கில் வசிக்கும் அவரது சகோதரியுழ் சகோதரனும் குடும்பத்தாருடன் சென்றுள்ளனர்.

சகோதரியுடன் நீண்டகாலத் தொடர்பு இல்லாததால் வாசலில் வைத்து அங்குநின்றவர்களால்தடுக்கப்பட்டுள்ளனர்.

இதனால் எழுந்த வாக்குவாதம் மோதலாக மாறியதில் அந்த வீட்டில் நின்றவர்கள் அங்கு சென்ற மூவரை கூரான ஆயுதத்தால்வெட்டியுள்ளனர்என்றுதெரிவிக்கபட்டது.

சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (4-9)

# முல்லை மாவட்டத்தில் வீடுகள் அமைப்பதற்கு வனவளப்பிரிவே தடை

## சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஓக. 6

முல்லைத்தீவில்தேசியவீடமைப்புஅதிகாரசபை கொண்டுவரும் வீட்டுத்திட்டங்களுக்குத் தடையாக இருப்பது வனவளப்பிரிவு என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முல்லைத்தீவு செல்வபுரம் மாதிரிக் கிராம திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில்அவர்இவ்வாறுகுற்றஞ்சாட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டங்கள் ஆரம்பத்தில் வெலிஓயாப் பிரதேசத்தில் தான்நடைமுறைப்படுத்தப்பட்டன. பின்னர்நாடாளுமன்றபொதுக்கூட்டஅறையில்அமைச்சர்சயித் பிரேமதாசவுடனான கலந்துரையாடலில், எமது பிரதேசங்களிலும் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தோம். அதனைக் கருத்திற் கொண்டு இன்று பெருந்தொகையான கிராமங்களை அபிவிருத்திசெய்துவருகின்றனர்.

மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவர் என்ற வகையில் தேசியவீடமைப்பு அதிகார சபையுடன்இணைந்துசெயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

பல்வேறுவீட்டுத்திட்டங்கள்இங்குஇருக்கின்றன. அவை மக்களுக்குத்தெரியும். காணி இல்லாமல் இருந்தால் தேசிய வீடமைப்பு அதிகாரசபை 5இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் காணியும் வீடும் வழங்குகிறது.

**சபை உறுப்பினர்கள்**

பிரதேசசபைஉறுப்பினர்களாகத்தெரிவுசெய்யப்பட்டவர்கள் கட்சி பேதமின்றித் தங்கள் வட்டாரங்களில் இரண்டு வீட்டுத்திட்டங்களையும் அதற்கான ஆள்களையும், காணிகளையும் நீங்களே தெரிவுசெய்து அடையாளங் காட்டித் தருவீர்களானால்ஒவ்வொருபிரதேசசபைஉறுப்பினர்களும் ஆகக்கூடியது ஐந்து வீட்டுத்திட்டத்தையாவது அடையாளப்படுத்தினீர்கள்என்றால்மாவட்டஅபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அதனைச் சிபார்சு செய்துதருவேன்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக வரும் வீட்டுத்திட்டங்களுக்குத் தடையாக இருப்பது வனவளப்பிரிவு மட்டுமே. அவர்கள் எல்லை போட்டிருக்கும்நிலங்கள்எல்லாம்காடுகள்என்று சொல்கின்றனர்.

மாங்குளத்தில்மாவீரர்கிராமம்என்றுஒருவீட்டுத் திட்டம் ஆரம்பித்தோம். அங்கு அவர்கள் மரங்களை வெட்டவேண்டாம் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் மரங்களின் கீழ் வீடுகளைக் கட்டிவருகின்றோம். எங்களால் எது செய்யமுடியுமோ அந்த விதத்தில் அந்த அபிவிருத்திகளைச் செய்யவேண்டும்.

மக்களின்கோரிக்கைதடைசெய்யப்பட்டஅட்டை பிடிப்பு, சுருக்குவலைஉட்படத்தடைசெய்யப்பட்ட அனைத்துத் தொழில்களையும் இடைநிறுத்துங்கள். சட்டத்தில் அதற்கு இடமுண்டு.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் சட்டவிரோத தொழில்களைவிடுதலைப்புலிகள்ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அதனால்தான்முல்லைத்தீவில் இத்தகைய வளங்கள் நிலைகொண்டுள்ளன.

ஒருபுறத்தால் இந்தியர்கள் இழுவை மடிகளில் வந்துதிருடிச்சென்றனர். தற்போதுதென்பகுதியில் இருந்து வந்து திருடுகின்றனர்.

எமது வளம் எமது மக்களின் வாழ்வாதாரத்துக்காக இருக்கவேண்டும் என்பதுதான் மக்களின் கோரிக்கை.

எனவே அமைச்சர் சஜித் பிரேமதாச மீன்பிடி அமைச்சருக்கு இதனை நேரடியாகத் தெரியப்படுத்தி எமது பிரதேசத்தில் இந்த தொழில்களுக்கு யாருக்கும் அனுமதிகொடுக்கவேண்டாம் என்றும், கொடுக்கப்பட்ட சகல அனுமதிகளையும் மீளப்பெறவேண்டும்என்றும்கோருகிறேன்-என்றார். (4,ரி3)

# உங்கள் உரிமைகளைக் கேட்கவில்லை எங்கள் உரிமைகளையே கேட்கிறோம்

## அவற்றை வழங்கப் பின்னடிக்காதீர்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி கோரிக்கை

**முல்லைத்தீவு, ஓக. 6**

**நல்லிணக்கம், நல்லாட்சி என்று சொல்லிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தாலும் எங்கள் மக்கள் உங்கள் உரிமைகளையும் சொத்துக்களையும் கேட்கவில்லை. நாங்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை விட்டுத்தாருங்கள் என்றும் அன்றாட வாழ்வுக்குக் கடலில் சுயமாகத் தொழில்செய்ய வழிவிடுங்கள் என்றும் தான் கேட்கின்றனர். இதனைப் புரிந்துகொண்டு அவற்றை வழங்குங்கள்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவுதேசியவீடமைப்புஅதிகார சபையின்மாதிரிவீட்டுத்திட்டநிகழ்வுசெல்வபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டார். அதில் உரையாற்றுகையில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

**60 அடி உயர விகாரை**

முல்லைத்தீவுமாவட்டத்தில்தொல்பொருள் திணைக்களத்தால் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை அபகரிப்பதற்குப் பல சூழ்ச்சிகள், வேலைத்திட்டங்கள் நடைபெற்றுவரும்நிலையில், முல்லைத்தீவில் 60அடிஉயரவிகாரைஅமைப்பதற்கும்; விடுதி அமைப்பதற்கும் தொல்பொருள் திணைக்களம்அனுமதிவழங்கியுள்ளது. இலங்கையில் சகல மாவட்டங்களிலும் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடுகள் கட்ட நிதி வழங்கப்படுகிறது.

போரால் பல்வேறு இன்னல்களை எதிர் கொண்ட மாவட்டம் முல்லைத்தீவு. பன்னாடுகளிடம் பெயர்பெற்ற முள்ளிவாய்க்கால்கிராமம்அமைந்துள்ளமாவட்டமும் இது.

அமைச்சரே, இங்குஒருபுறம்கடற்றொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கு இடம் பெறும்அநீதிகளைஎதிர்த்துப்போராட்டம் நடத்தி வருகின்றனர். மறுபுறம் ஒரு ஆண்டுக்குமேலாகக்கேப்பாப்பிலவுமக்கள் தங்கள் பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு போராடிக்கொண்டிருக்கின்றனர்.

மற்றொருபுறம் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி என்று தமிழர்களின் பூர்வீகக் காணிகள் மகாவலிஎல்வலயத்தில்அபகரிக்கப்படுகிறது. 2013ஆம்ஆண்டுவெளியிடப்பட்டஅரசிதழ்களில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளைக் கையகப்படுத்த, தொல்பொருள் திணைக்களம் பல சூழ்ச்சிகளைச் செய்தது. இங்கு60அடிஉயரமானவிகாரை, ஓய்வு மண்டபங்களைக் கட்டுவதற்குச் சம்மந்தப்பட்ட அமைச்சு அனுமதிவழங்கியுள்ளது.

கோத்தபாய கடற்படை முகாம், வட்டுவாகல் பாலத்தை அண்டிய தமிழ்மக்களின் ஆயிரக்கணக்கான காணிகள் படையினரால் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ள நீங்கள் இந்தப்பிரச்சினைகளை உங்கள்சக அமைச்சர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்கள் சேவைகளை நாங்கள் பாராட்டுகின்றஅதேவேளையில்எங்கள் மக்களை நோக்கி நீங்கள் வருகின்ற போது மக்கள் சார்பாக எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைநாங்கள்உங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். இங்குஇருக்கின்ற மக்கள்போரின்வலியைச்சுமந்தவர்கள். இறுதிப்போரின்வலியைநானும்சுமந்து கொண்டிருப்பவள் என்ற உரிமையில் மக்களின் குரலாக நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**அதிகாரிகள் கையறுநிலை**

அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கைகளால்எங்கள்அரசஅதிகாரிகள்கையறுநிலையில்கதிரையில்வெறும்பொம்மைகளாக இருப்பதுபோல் எங்களுக்குத் தோன்றுகின்றது. அவர்களை மிஞ்சிய சுற்றறிக்கைகள், அவற்றையும்விஞ்சிய செயற்பாடுகள் இந்த மாவட்டத்தை மேலும் மழுங்கடிக்கச் செய்கின்றது. இந்தமாவட்டத்தில்நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடாவடித்தனமான வேலைகளை உங்கள் சக அமைச்சர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**கூட்டு எதிர்க்கட்சி போன்று எமது போராட்டம் ஆட்சிக்கவிழ்ப்பல்ல**

நாங்கள்அரசுக்குஎதிரானவர்கள்அல்ல. இந்தப் போராட்டங்கள் தெற்கில் கூட்டு எதிரணி செய்வதுபோல அரசை வீழ்த்துவதற்கான போராட்டம் அல்ல. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குச் சுமுகமாக வாழ்வதற்கான மக்களின்போராட்டம்தான்இது. இதனை நீங்கள் கொச்சைப்படுத்தக் கூடாது. தமிழன் தன்னுடைய சுய நிர்ணய உரிமையுடன் தனது பூர்வீகமான இடங்களில் வாழ்வதற்காகத்தான் நாங்கள் இன்றும் அரசுடன் ஒத்துப்போய்க் கொண்டிருக்கின்றோம்.

கூட்டரசு இந்த நிலமையை விளங்கிக் கொண்டு எமது மக்கள் சுயமாகச் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சுமுகமான சூழலை ஏற்படுத்தித் தருவதற்கு நீங்கள் அரசுக்குக் குரல் கொடுக்கவேண்டும் என்று மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (4,ரி3,105)

# 2 ரூபா நாணயத்தை விழுங்கினார் சிறுமி

## சங்கிலி விழுங்கினானென்று சிறுவன் மீது பரிசோதனை

தென்மராட்சி, ஓக. 6

வாய்க்குள் வைத்திருந்த 2 ரூபா நாணயத்தை எட்டு வயதுச் சிறுமி விழுங்கியுள்ளார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவம் கொடிகாமம் கச்சாயில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவியான சிவலோகநாதன் துவாரகா (வயது - 8) பாடசாலையில் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பியவேளையில் வாயினுள் இரண்டு ரூபா நாணயத்தை வைத்திருந்துள்ளார். அது திடீரென்று தொண்டைக்குள் சென்றதும் உள்ளே சென்றுவிட்டது. அதனை வெளியே எடுக்க அவர் முற்பட்ட போது அது மேலும் உள்ளே சென்றுவிட்டது. மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அவர் நாணயத்தை விழுங்கியுள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. அவர் சிகிச்சையில் உள்ளார்.

இதேவேளை, பொம்மையில் பொருத்தப்பட்டிருந்த சங்கிலியை விழுங்கினார் என்று தெரிவிக்கப்பட்டு 3 வயதுச் சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பரிசோதனையில் சிறுவனின் வயிற்றில் அப்படி எதுவும் இல்லை என்று தெரியவந்ததால் அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

மூன்று வயதுச் சிறுவன் பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும் சிறிது நேரத்தில் அங்கு வந்த தாயார் பொம்மையில் பொருத்தப்பட்டிருந்த சங்கிலியைக் காணாததால் அதனைச் சிறுவன் விழுங்கியிருக்கலாம் என்று கருதிச் சிறுவனை மருத்துவமனையில் சேர்த்தார். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த போது வயிற்றினுள் சங்கிலியைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)



# 4ஆவது நாளாகவும் நேற்று முல்லை மீனவர் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில்நடவடிக்கையைக்கட்டுப்படுத்துமாறுகோரிய கடற்றொழிலாளர்களின் போராட்டம் 4 ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது.


முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களத்தின்முன்பாகக்கொட்டில் அமைத்து அவர்கள் போராடி வருகின்றனர். அவர்களை மதகுருமார்கள் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், வை.கெங்காதரன், ம.தெம்மைப்பிள்ளை ஆகியோரும் மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். எதிர்வரும் 12 ஆம்திகதி கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள அமைச்சர், கடற்றொழிலாளர்களைச்சந்தித்துச்சட்டவிரோததொழில்நடவடிக்கை தொடர்பாக ஆராயவுள்ளார். தமது கடற்றொழில் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்வரை போராட்டம்தொடரும்என்றும்போராட்டத்தில்ஈடுபட்டுள்ள மீனவர்கள் தெரிவித்தனர். (4,ரி3)

see more news in NEWUTHAYAN.COM

# எனது மகன் மிகவும் நல்லவன் என்கிறார் பின்லேடனின் தாயார்

வொஷிங்டன், ஒக. 6
"எனது மகன் மிகவும் நல்லவன். அவன் மூளைச் சலவை செய்யப்பட்டுத்தான் தீவிரவாதியாக மாற்றப்பட்டான்" என்று கருத்துத் தெரிவித்தார் பின்லேடனின் தயார் அலியா கனோம்.
அமெரிக்காவில் நடத்தப்பட்ட இரட்டை கோபுரத் தாக்குதலில் அந்த நாட்டு அரசால் தேடப்படும் முக்கிய குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார் அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன்.
இதன் பின்னர் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்க படையினர் கடந்த 2011 மே மாதம் 2ஆம் திகதி சுட்டுக் கொன்றனர்.
ஒசாமா பின்லேடன் இறந்து எழு வருடங்களுக்குப் பிறகு அவருடைய தாயார் அலியா கானோம் தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு செவ்வி வழங்கியுள்ளார்.



அதிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர். தற்போது சவூதியில் ஜெட்டா நகரில் தனது இரண்டு மகன்களுடன் வசித்து வரும் அலியா அந்த நேர்காணலில், "எனது வாழ்க்கை மிகக் கடினமாகிவிட்டது. ஒசாமா பின்லேடன் என்னிடமிருந்து வெகு தொலைவு சென்றுவிட்டார். அவர் மிகவும் தன்னம்பிக்கை மிக்க குழந்தையாக இருந்தார். அவர் என் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். ஒசாமா தனது 20ஆவது வயதில் கின் அபுலாசிஸ் பல்கலைகழகத்தில் பொருளாதாரம் படித்துக் கொண்டிருக்கும்போது மூளைச் சலவைக்கு உட்படுத்தப்பட்டார்.
அதிலிருந்து அவர் மிகவும் வித்தியாசமான நபராகக் காணப்பட்டார். அந்தப் பல்கலைக்கழகமும், அங்கிருந்தவர்களும் ஒசாமாவை மாற்றினார்கள். நான் அவர்களிடமிருந்து விலகி இருக்குமாறு கூறினேன். ஆனால் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர் அதனை விரும்பினார். அமெரிக்க இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு என் மகன் தான் காரணம் என்று தெரிந்து எங்களுக்கு மிகவும் அவமானமாக இருந்தது" என்றுள்ளார். (ம)




அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் அண்மைக்காலமாக கடுமையான காட்டுத் தீ ஏற்பட்டு அங்கு தீவிரமாகப் பரவி வருகிறது. தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு கடும் முயற்சிகளை எடுத்துள்ளது அமெரிக்கா. (ம)

# ஏவுகணைகளை வடகொரியா கைவிடவில்லை

வொஷிங்டன், ஒக. 6
வடகொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. அந்த நாடு இன்னும் தனது சோதனைகளைக் கைவிடவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.
பன்னாட்டுச் சட்டங்களை மீறிய வகையில் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது வடகொரியா. இதையடுத்து அமெரிக்கா, ஐ.நா, உலக நாடுகள் என்று பல தரப்பும் வடகொரியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை வாரிக் குவித்தன. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப இடையிலான சந்திப்பும் அண்மையில் இடம்பெற்றது.
இதனால் வடகொரியா தனது சோதனைகளைக் கைவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
எனினும் தனது சோதனைகளை வடகொரியா தொடர்ந்துகொண்டுதான் உள்ளது என்கிறது ஐ.நா. (ம)





# உலங்குவானூர்திகள் நேருக்குநேர் விபத்து

மொஸ்கோ, ஒக. 6
ரஷ்யாவில் உலங்குவானூர்திகள் ஒன்றுடன் ஒன்று நேருக்குநேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் 18 பேர் உயிரிழந்தனர்.
இரண்டு உலங்கு வானூர்திகளும் சுமார் 400 மீற்றர் உயரத்தில் ஒன்றுடன் ஒன்று மோதுண்டன என்று சொல்லப்படுகிறது. 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (ம)

# எபோலாவுக்கு காங்கோவில் 33 பேர் உயிரிழப்பு



காங்கோ, ஒக 6
எபோலா நோய் காங்கோவில் பரவிவரும் நிலையில் குறித்த நோயால் பாதிக்கப்பட்டு 33 பேர் உயிரிழந்தனர் என்கிற தகவலைப் பன்னாட்டு ஊடகங்கள் வெளியிட்டன.
மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் 2013ஆம் ஆண்டு 'எபோலா' நோய் பரவியது. முதலில் கினியா நாட்டில் பரவிய நோய் பின்னர் சியாரா லியோன், லைபிரியா, காங்கோ குடியரசு உள்ளிட்ட நாடுகளிலும் பரவியது. 2016ஆம் ஆண்டு வரை இந்த நோய் தொடர்ந்து பரவி வந்தது. இதில் 28 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 11 ஆயிரத்து 310 பேர் உயிரிழந்தனர். 2016ஆம் ஆண்டு பிற்பகுதியில் எபோலா ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
ஆனால் காங்கோவில் எபோலாவின் தாக்கம் கடந்த ஏப்ரல் மாதம் அவதானிக்கப்பட்டது. காங்கோவில் மே மாதம் மரமச் சாவடைந்த 36 பேரில் 18 பேர் எபோலா வால் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. தற்போது எபோலாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33ஆக அதிகரித்தது. (ம)

# சாவகச்சேரி பிரதேச சபை.
# PSDG வேலைத்திட்டத்துக்கான கேள்விகோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை, தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப் பட்டகேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமாண வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப் பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள ICTAD தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்ட வணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் (தொலைபேசி: 021-2050348, 021-2050356, தொலைநகல்: 021-2050348, மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 20.08.2018 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலைநாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர் / செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 06.08.2018 ஆம் திகதியிலிருந்து 20.08.2018 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர் / செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு20.08.2018 திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடிய தாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்து மூன்று நாள்கள்-21.10.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2/PSDG/2018/06 | ஊரியன்காட்டு மயான வீதி புனரமைப்பு கைதடிதெற்கு. | 2.000 | 3 மாதம் | C9 | 20,000.00 | 18.11.2018 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 15.08.2018 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரபெறுகைக்குழு,**
**சாவகச்சேரிபிரதேச சபை, கொடிகாமம்.**

(IN/7431)(11,17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 838
சீட்டிழுப்பு திகதி ▶ 2018.08.04 சனிக்கிழமை
I 23 55 63 70
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 47,481,776/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
2018.08.06ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 12 . 1953 — மறைவு 04 . 08 . 2018

### சின்னவன் தங்கராசா (தங்கண்ணா)

வளர்மதி கரவெட்டி கிழக்கு, கரவெட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக வும், இல. 31செல்வபுரம், வவுனிக்குளம் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் தங்கராசா (தங்கண்ணா) அவர்கள் 04.08.2018 காலமானார்.

அன்னார் சின்னவன் - ஆழ்வி தம்பதியரின் மகனும், பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், சாந்தினிமலரின் கணவரும், காலஞ்சென்ற ஜெயந்தன் (நீர்ப்பாசன திணைக்கள முகாமைத்துவ உத்தி யோகத்தர் - மாங்குளம்), ஜெசீபன் ஆகியோரின் தந்தையும் அகழ்யாவின் மாமனும், விபுசியனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்துக்காக செல்வபுரம் பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**ஜெசீபன் - 077 639 8402** (c.12914)

## மரண அறிவித்தல்



### திருமதி ஸ்ரீமதி அம்மாள் துரைராஜா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி சங்கானையை வசிப் மாகவும் கொண்ட திருமதி ஸ்ரீமதி அம்மாள் துரைராஜா 03.08.2018 வெள் ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சிவக்கொழுந்து தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - முத்து தம்பதி யரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவி யும், காலஞ்சென்ற ரஞ்சனி மற்றும் வனிதா (ஜேர்மனி), பிரபாகரன் ஆகியோ ரின் பாசமிகு தாயும், மகேந்திரன் (தண்ணீரூற்று - ஜேர்மனி), ஹம்சவதனி (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியும், நாகரத்தினம், திருச்செல்வம் ஆகியோரின் அருமைச்சகோதரியும், ரிகாஷினியின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங் கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப் படும். இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குகபவனம்,**
**பிரதான வீதி, சங்கனை.**

**தகவல்:**
**மகன் - பிரபாகரன்**

**077 4691203**

## மரண அறிவித்தல்



உதிப்பு 13 . 04 . 1935 — உதிர்வு 02 . 08 . 2018

### திருமதி இராசம்மா நடராசா

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நடராசா 02.08.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதி களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னம்மா தம்பதி களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் நடராசாவின் அன்பு மனைவி யும், இராசசுலோசனா இரஞ்சினி (ஜேர்மனி), இரமணிசியாமா (ஆசிரியை, நெல்லியடி மத்திய கல்லூரி), நற்குணராஜா (சுவிஸ்), மோகனதாஸ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணநாயகம், கமிலஸ், டொமினிக் சாவியோ, ஜெயந்தினி, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரணவன், தனுஷன் - நிம்மி, றெனுஸன் - யுலியற்றா, தர்ஷயா - பவித்திரன், துளசிகா - பாரத், கௌசிகா - ஜெய தர்சன், பிரவிண் - சிந்துஜா, பிரவீண்ராஜா கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தி யாரும், காலஞ்சென்றவர்களான இராசமணி தம்பிப்பிள்ளை மற்றும் அன்னம்மா யோகராசா (கனடா), தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொடிகாமம் கட்டைபறித்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

(C/33613)(11,17)


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 657 6413**

வ
ஓம் ச

# வடமராட்சி பொலிக

# திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகா
# சித்திரத்தேர் வெள்ளோ



அம்பிகை அடியார்களே!
நிகழும் மங்களகரமான விளம்பி
ஆடி மாதம் 21ஆம் நாள் (06.08.2018)
கிழமை தசமித் திதியும், ரோகினி ந
மும் கூடிய பி.ப 2.00 மணி முதல்
மணிவரையுள்ள சுபவேளையில்
நிர்மாணிக்கப்பட்ட அம்பாளின் சித்தி
வெள்ளோட்ட விழா நிகழ்த்து
அம்பிகையின் திருவருள் கைகூடி
எனவே அடியார்களே குறித்த தின
வருகைதந்து சித்திரத்தேர் வெள்
விழாவில் கலந்து கொண்டு அம்பி
இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.



### சமர்ப்பணம்

தக்கன் கொண்டுள தானெனுந் தருக்கின் தன்மை சாம்பிட முக்க ணானவர் முன்னர் முகத்தெழு முனி வித் தோன்றிய மிக்க ஸ்ரீ பத்திரகாளி வீதி உலா வர தக்க மாமணி தேரினைத் தந்துளோம் அது எம் சமர்ப்பணம்

பொலிகண்டி மருதாம்புலம் பதியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் பவனி வர அம்பிகையின் திருக்குறிப்பினால் புதிதாக நிர்மாணிக்கபெற்ற அழகிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நடைபெறும் இந்நாளில் இவ்வரிய விழாவினை மனதில் நிறுத்தும் முகமாக தேர்த்திருப்பணி உபயகாரர்களாகிய எம்மால் வெளியிடப்படும் இச் சிறப்பு மலர் பத்திரகாளி அம்பாளின் பாதாரவிந் தங்களில் பரிமளிக்கும் அற்புதமலராக நம்புகின் றோம். இச் சித்திரத்தேரினை உருவாக்குவதற்கு முழுமையாக உழைத்த திரு. தம்பிராசா சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஸ்ரீ பத்திர காளி அம்பாளின் அருள் கிடைக்க வாழ்த்து கின்றோம்.

சைவ உலகத்திற்கு அம்பிகையின் பக்தர்களும், அறிஞர்களும், கவிஞர்களும், பாவலர்களும் தங்கள் கட்டுரைகளாலும், கவிதைகளாலும், பக்தி பாமாலைகளாலும் இம்மலரை மணம் வீசச் செய்துள்ளனர்.

இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய குருமார்களுக்கும், ஆதீன பெரியார் அவர்களுக்கும் அம்பிகை அடியார்களுக்கும் புகழ் பூக்க வேண்டி இம்மலரை அம்பிகையின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து வழங்குகின்றோம்.

**சித்திரத்தேர் உபயகாரர்**
**செ. விநாயகலிங்கம்,**
**திருமதி கலாறஞ்சனி, பிள்ளைகள்.**



### சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றேன்

வடமராட்சி வடக்குப் பிரதேச பிரிவுக் குட்பட்ட பொலிகண்டி மண்ணிலே மருதாம்புலம் என்னும் இடத்திலே அமர்ந்து அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டத்தினைக் காண்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பஞ்ச கிருத்தியங்களில் சங்காரத் தொழிலை உணர்த்தி நிற்பது தேர் உற்சவமாகும். புராணங்கள், இதிகாசங்கள் யாவும் இதன் பெருமையைப் பறை சாற்றி நிற்கின்றன. மும்மல காரியமாக விளங்குகின்ற முப்புரங்களையும் எம்பெருமான் தேரிலே கவர்ந்து வெற்றி பெற்ற வரலாறு இதன் அடிப்படைத் தத்துவமாக அமைகின்றது.

இத்தகைய அருத் தத்துவங்கள் நிறையப்பெற்ற சித்திரத் தேரானது அற்புதங்கள் நிறையப் பெற்ற ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு சிறப்பாக அமையப்பெற்று இன்று இறையருளால் வெள்ளோட்டமும் காணப்போகும் இந் இனிய நாளில் எல்லோரும் இனிதாய் வாழ, இறையருள் வேண்டி, சித்திரத்தேர் வெள்ளோட்டமும் சிறப்புற வாழ்த்தி அமைகின்றேன்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி ( SLAS, MA, MPM)**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், - பருத்தித்துறை.**



### ஆசிச் செய்தி

ஆலயங்களில் நடைபெறும் நைமித்திய கிரியைகளில் மஹோற்சவம் முக்கியமானது. இந்த மஹோற்சவத்தில் சிகரம் போல் அமைவது இரதோற்சவம் . இதன் தத்துவத்தை ஆராய்ந்தால் அது சம்ஹாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு காலத்தில் திரிபுர தகனத்திற்காக இரதத்தில் ஆரோகணித்தார் இறைவன். இதனைக் கருத்தில் கொண்டே ஆலயங்களில் இரதோற்சவம் நடைபெறுகின்றது. பல தத்துவப்பொருள் செறிந்த இரதத்தில் அம்பாள் ஆரோகணித்து ஆன்மாக்களாகிய நம்முள் இருக்கும் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சாரியங்களை சம்ஹாரம் செய்து முக்தி தரும் விழாவைக் கண்டு பேரானந்தம் அடைவோம்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திராவிட மரபுச் சித்திரத் தேர் இரதோற்சவத்திற்கு முன்பு ஒரு முறை கோவிலை வலமாக வந்து பக்தர்களுக்கு ஆருட் காட்சியாக வரப்போகின்றது என்பதை அறிவிக்கும் நோக்கமாக தேர்வெள்ளோட்டம் என்று தேரைப் பக்தர்கள் இழுத்து வருவார்கள். அத்திருக்காட்சியைக் காண்பதும் வடம்தொட்டு இழுப்பதும் நாம் செய்த பூர்வபுண்ணிய பலனாகும். விளம்பி வருஷம் ஆடி மாதம் முதன்முதலாக பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளிற்கு தேர் விருவிழா ஆரம்பாமாகவுள்ளது 06.08.2018 திங்கட்கிழமை நடைபெறும் இரத வெள்ளோட்டம் எந்தவிதமான விக்கினங்களும் வராது நடைபெறவேண்டுமென அன்னை பத்திர காளி அம்பாளை வேண்டி வணங்கி எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

மேலும் இந்த சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பா சாரியார்களும், அம்பாளின் திருக்குறிபால் தேர் திருப்பணியை நிறைவேற்றிய செல்லக்கண்டு விநாயக லிங்கம் கலாறஞ்சனி குடும்பத்தினரும் சீரும் சிறப்புடன் அம்பிகையின் அருளாலும் வாழ்க வளமுடன் என்ற வாழ்த்துகின்றேன்.

"லோகா, சமஸ்தா சுகினோ பவந்து"

**குமரகுருமணி கிரியாகலாபமணி**
**சிவப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்கள்**
**பிரதம குரு : கந்தவனம்**
**சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்**
**பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,**
**பொலிகண்டி,**
**வல்வெட்டித்துறை.**



### ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு அழகான சித்திரத்தேர் அமைவது கண்டு ஆனந்தம் கொண்டேன்.

நான் வலிகாமத்தில் இருந்தாலும் இவ்வாலயத்தின் தொடர்பு பலகாலம் காரணம் இவ் வாலயத்தின் பிரதம குருக்கள் துரைஐயா அவர்கள் இவ் வாலய வளர்ச்சியில் மிகவும் அக்கறைகொண்டு ஆலய நிர்மாணம் தேர்முட்டி அமைப்பது கொடிமரம் அமைப்பது தேர் அமைப்பது போன்ற சிந்தனையுடன் கோயில் நிர்வாகிகளும் சேர்ந்து ஆலயக் கட்டுமானப் பணிகள் செய்வது துல்லியமான அழவைப் பிரமாணத்துடன் செயற்படுத்துவது போன்ற காரியங்களால் இன்று ஆலயம் புதுப்பொலிவுடன் வளர்ந்துவிட்டது. வடமராட்சியில் புகழ்பூர்த்த ஆலயமாகவும் வளர்ந்து விட்டது இந்த வகையில் திருப்பணி சபையினரதும் குருக்களின் பணியும் போற்றத்தக்கது.

தேர் என்பது எமது உடம்பையும் உயர்வான வாழ்க்கையும் சித்தரிக்கின்றது. ஆலயத்தின் மூலஸ்தான அழகின் பெருக்கம் தேரின் உயரமாக அமைகின்றது. இதில் சக்கரங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும் நாற்பாதங்கட்கும் கட்டுப்பட்டு ஒழுங்காக ஓட வேண்டும் என்பதற்காக சறுக்கு கட்டை போட்டு தேர் ஓட்டம் நடக்கின்றது.

தேரின் நடுப்பகுதி (பீடம்) மனித இதயம் இப்பகுதி தான். தெய்வீகமாக தெய்வம் இருந்து வருகின்றாள். காளி அம்மன் குருக்கள் சேர்ந்து இருக்கின்றார். 10 நாட்களும் பூடை கண்ட காளி அம்மளின் அருளை குருக்கள் பெற்றுத்தருகின்றார். அவரையும் இறைவியாக பார்கின்றோம்.

காளியின் தேரின் அமைப்பு நன்கு அமைவது காளியின் திருவருள் எற்றுதான் கூறவேண்டும். பக்தர்களின் நிதியும் சேர்ந்துள்ளது பெரும் பங்களிப்பும் நடந்துள்ளது. சிற்பி தன் கைவண்ணத்தை அழகுற அமைத்துள்ளார். அழகான தேர்முட்டியும் கொடிமரமும் ஒருங்கே அமைந்துள்ளது. சாலச்சிறந்துள்ளது. ஆகவே இந்த்முறை சகலதும் ஒருங்கே அமைந்துள்ளது. பத்திரகாளியின் அருள் பிரகாசித்துள்ளது என்பது வெளிப்படை. எனவே இவ்வாலயம் சிறப்புக்கண்டு ஆனந்தமடைவதுடன் தங்கள் குருக்களின் ஆசியும் தேவியின் ஆசியும் உங்களுக்கு கிட்டி உள்ளது என்பது வெளிப்படை. நானும் எனது குலதெய்வமாகிய விநாயகரின் பாதம் பணிந்து உங்கள் எல்லோருக்கும் ஆசியைத்தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கலாநிதி. தியாக கொங்காதரக்குருக்கள்**
**ஈவினை, புன்னாலைக்கட்டுவன்**




### அருளாசிச் செய்தி


பொலிகண்டி மருதாம்புலம் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் பத்திரகாளி அம்பாளுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று இடம்பெறுவது மகிழ்ச்சி தருகின்றது. ஆலயத் திருவிழாக்களில் முக்கியமான இடத்தைப் பெறுவது தேர்த்திருவிழா. இதனை அடையாளமாகக் கொண்டு பிரமா, உருத்திரன், மும்மூர்த்தி அடையாளமாக உருவாக்கப்படுவது தேராகும். உலகப் பிரபஞ்சத்தை வெளிப்படுத்தும் வகையில் அமையப்படுவது ரதம். இதனை உருவாக்கிய சதீஸ் சிற்பக்கலைஞரை வாழ்த்துகின்றேன். திருப்பணி நிறைவேற்றியவருக்கும் ஆலய சமூகத்தவருக்கும் ஊர் மக்களுக்கும் இறையாசி கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**



### அம்பாள் துணை



பத்ரகாளி அம்பாளின் அருள் பெற்று வளமுடன் வாழ்வோம்.

வரலாற்றுப்புகழ் வாய்ந்த பொலி கண்டி மருதாம் புலத்து பத்ரகாளி அம்பாளின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் அம்பாளுக்குப் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள் ளோட்ட விழா வைபவம் 06.08.2018 நடைபெற அம்பாள் திருவருள் கிடைத்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம்.

இவ் வைபவம் எவ்வித தடையும் இன்றி மிகவும் சிறப்பாக நடைபெற எம்குலதெய்வமான பத்ரகாளி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். மிகவும் குறுகிய காலத்தில் இத்தேரை உருவாக்கிய சிற்பிகள் அதற்கு அனுசரணையாக இருந்த சித்திரதேர் உபயகாரர்கள் மற்றும் அம்பாளின் பிரதம சிவாச் சாரியார் பக்தர்கள் யாவர்களுக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க எம்பிராட்டி யை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**சி. பத்திராதேவி**
**வி.ஞானோதயம்**

### வாழ்த்துச்செய்தி

எனது பிரிவிலே அமைந்திருக்கக்கூடிய தென்மையும் சிறப்புமிக்க ஆலயங்களில், பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் மகிமையும் அம்பாளின் அற்புதங்களையும் ஊரவர் கூறக் கேள்வியுற்றிருக்கிறேன். அலங்கார உற்சவத்தின் ஒன்பதாம் நாள் தேர்ப்பவனித்திருவிழா இடம்பெறக் காலங்கை கூடியுள்ளது. இச் சிறப்பு மிகு தருணம் எல்லோர் மனதிலும் புது ஒளியாய் மகிழ்ச்சியை பரவச் செய்கிறது. இலுப்பை மரத்தை தல விருட்சமாய்க் கொண்டு அருளாட்சி புரிகின்ற அம்பாளுக்கு இந்நாளில் தேர் வெள்ளோட்டம் நடைபெற விருப்பது மிகவும் பரவசத்திற்குரியது. இந் நிகழ்வு சிறப்புறவும் ஊரும் மக்களும் அருள் பெற்று இன்பமாய் வாழவும் வாழ்த்தி அமைகின்றேன்.

**திரு.ம.தர்சாந்தன்**
**கிராம அலுவலர் - J/394**
**பொலிகண்டி கிழக்கு.**



### வாழ்த்துச் செய்தி

இந்நாள் சித்திரத்தேர் சிங்காரமாய் பவனிவரும் வெள்ளோட்ட நன்னாள். மருதாம்புலத்துறையும் பத்திரகாளித் தாயார் தேரேறி வருகின்ற அருட்காட்சியைக் காண்கின்ற பேறு நம் வாழ்நாளில் கிடைக்குமா என எண்ணியிருந்த நமக்கெல்லாம் இது மகிழ்ச்சியான தருணம். அன்னையின் அருளால் திரு.திருமதி விநாயகலிங்கம் கலாரஞ்சனி குடும்பத்தினரின் புண்ணிய கைங்கரியத்தினால் கிடைத்தற்கரிய இப்பேறு எமக்குக் கிட்டியுள்ளது. அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்த சித்திரத்தேரின் வடம் பிடிக்கின்ற அடியவர்களுக்கு அம்பிகை அளித்திடும் அருட்பிரசாதமே இவ்வரம். இன்று வெள்ளோட்டம் காணும் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து பத்திரகாளித் தாயார் ஒன்பதாம் திருவிழா தினத்தன்று அழகுற பவனி வருகின்ற அருட்காட்சி கண்டு நம் நெஞ்சம் உருகும். கண்கள் பனிக்கும். இவ் அழகிய காட்சியைக் கண்டு எல்லோரும் இன்புற்று அன்னையின் அருளைப் பெறுவோம்.

**த.சுந்திரமூர்த்தி.**

உ
ஓம் சக்தி

# கெண்டி மருதாம்புலம்
# காளி அம்பாள் தேவஸ்தானம்
# ோட்ட விழா - 06.08.2018



ாம்பி வருஷம்
.2018) திங்கட்
கினி நட்சத்திர
முதல் 4.00
ாயில் புதிதாக
சித்திரத்தேர்
ழ்த்துவதற்கு
கைகூடியுள்ளது.
த தினத்திற்கு
வெள்ளோட்ட
அம்பிகையின்
ரகளாக.

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா
## காலம் : 06.08.2018 திங்கட்கிழமை

**சித்திரத்தேர் நிர்மாணிப்பு**
**விஸ்வப் பிரம்மஸ்ரீ பரஞ்சோதி சதீஸ்வரன் குழுவினர்**
**தனுஷா சிற்பாலயம்**
**பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி.**

**சித்திரத் தேர் உபயம்**
**திரு.செல்லக்கண்டு விநாயகலிங்கம் குடும்பம்**
**கிளானை வளவு, பொலிகண்டி.**

**சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வுகள் யாவும் கதிர்த் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பாகும்.**

### ஆசிச்-செய்தி

நிகழும் மங்களகரமான விளம்பி வருசம் நடைபெற விருக்கும் அம்பிகையின் திருவிழா உற்சவத்துக்கு தேர் ஏறி ஆரோகணித்துப் பதினாறு செல்வங்களும் ஐஸ்வர்யங்களும் கொடுத்து அருள்பாலிப்பதற்காக மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் புதிதாக சகல சிற்பங்களும் கூடிய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா பவனி வருவதற்கு நாம் அனைவரும் என்ன தவம் செய்தோமோ. எல்லாமே பத்திரகாளி அம்பிகையின் அருளே' என்று கூறி அம்பிகையின் பாதங்களைப் பணிவோமாக.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக
இவ்வுலகமெல்லாம்
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

**பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணியசர்மா**
**(ஆயுள்வேத வைத்தியர்)**
**கந்தசாமி கோயிலடி, பொலிகண்டி.**



### வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி மருத்தாம்புலம் ஸ்ரீ பத்திர காளி அம்பாள் தேவஸ்தானத்தில் அம்மன் திருவருளால் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வை முன்னிட்டு பத்திரிகையில் வெளியிடப்படவிருக்கின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ் ஆலயத்தில் வருடந்தோறும் அம்மனுக்குகந்த ஆடிப்பூரத்தை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு நடத்தி வருவதாக அறிகின்றேன். வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நிகழ்வை சிறப்புற நடத்துவதற்காகப் பெரும் பணச் செலவில் வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வுகள் இம்முறை நடைபெறுகின்றன. இத்தருணத்தில் இவ்விழாவில் கூடியிருக்கப்போகும் அனைத்து பக்த கோடிகளுக்கும் அம்மனின் அருட் கடாட்சம் கிட்ட யாசிக்கின்றேன். இச் சித்திரத் தேரை வடிவமைப்புச் செய்ததற்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொண்ட சுவிற்சலாந்து வாழ் திரு.செல்லக் கண்டு விநாயகலிங்கம் குடும்பத்தினருக்கும் அம்மனின் அருளாசி வேண்டி வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர் - வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி

மருதமும் நெய்தலும் ஒருங்கே அமையப்பெற்ற வளம்மிகு பதியாம் பொலிகண்டியிலே ஓங்கியுயர் பனைவளக் கூடலினிடையே இலுப்பை விருட்சத்தில் அமர்ந்து தரிசனம் தந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்தந்த பத்திரகாளித் தாயின் மகிமை ஈடிணையற்றது. சக்தியாய் அமர்ந்து சக்தி தரும் குலதெய்வமாய் தோன்றி பின்னாளில் ஆலய அம்சங்கள் யாவும் அமையப்பெற்று சிறப்புற்றிருக்கும் இவ்வாலயத்திலே மேலும் அதன் சிறப்பைத் தரும் வகையில் சித்திரத்தேரும் அதற்கான கொட்டகையும் அமையப்பெற்றிருப்பதானது பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது.

அந்த வகையில் வெளிநாட்டில் வசிக்கும் அம்பாள் அடியவரான செ.விநாயகலிங்கம் என்பவரால் நிர்மாண அன்பளிப்புச் செய்யப்பட்டு இன்று வெள்ளோட்டம் காணுகின்ற இந்நிகழ்வு சிறப்புற அமைய எல்லாம் வல்ல பத்திரகாளித் தாயை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**என்றும் இறைபணியில்**
**சிவஸ்ரீ கி.கதிர்காமநாதர் ஐயா**
**தலைவர், - பரிபாலனசபை,**
**மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் ஆலயம்,**
**பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.**

### பொலிகண்டி, மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளியம்பாளின் திருத்தேரின் வெள்ளோட்டம் இன்று.

அன்னை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் பொலிகண்டியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். வருடாந்த உற்சவத்தின்போது அன்னை தேரேறி வரவேண்டும் என்று அருள்பாலித்து எங்கள் வைத்தியநாதக் குருக்கள் JP அவர்களின் ஊக்குவிப்போடும், விநாயகலிங்கம் குடும்பத்தினரால் இச்சித்திரத் தேர் இன்று வெள்ளோட்டம் காணவுள்ளது.

அன்னையவள் கம்பீரமாகத் தேரேறி வருவதை நாம் பக்திப் பெருக்கோடு கண்டுகளிப்பதோடு அவள் அருளால் ஊரும் ஊர்மக்களும் ஏனைய பக்தர்களும் எல்லா நலங்களும் பெற்று உய்ய வேண்டும் என்று அவள் தாழ் பணிந்து நிற்கின்றேன். இன்று நடக்கவிருக்கும் வெள்ளோட்டம் சிறப்புற அமைந்து அன்னையவள் மகிழ்ந்து நம் எல்லோரையும் மகிழ்விக்க வேண்டுகின்றேன்.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

**Mrs. Sivayoganayaki Ramanathan ( MSc )**
**Former Principal G.T.C.Kopay,**
**Rtd.Deputy Director of Education,**
**Rtd. Lecturer in French Language,**
**Hereditary Managing**
**Trustee of Polikandy Kandavanam**
**Kalyana Velava Swamy Thevashthanam.**
**021 205 5225**



### வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கென புதிய சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டு இன்று வெள் ளோட்டம் காண்கின்ற இந்நிகழ்வுக்கு ஆலய நிர்வாக சபையின் செயலாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். ஆலய வரலாற்றில் இந்நாள் சிறப்பு மிக்க நாள். அம்பாளின் சித்தத்தால் கிடைக்கப்பெற்ற சீர்மிகு நாள். அன்னையின் அடியவர்கள் எதிர்பார்த்து காத்திருந்த இனிய நாள். அம்பாளுக்குத் தேர் இல்லையே என்ற குறை தீர்ந்த நாள். இக்குறையைத் தீர்த்து வைப்ப தற்கு அன்னை தேர்ந்தெடுத்த திரு.திருமதி விநாயக லிங்கம் கலாரஞ்சினி குடும்பத்தினர் அரும்பேறு பெற்றவராவர். அழகு மிளிரும் சித்திரத்தேரினை நிர்மாணித்துத் தந்த சிற்பாச்சாரியார்கள் பாராட்டுக்குரியவர்கள். ஒன்பதாம் திருவிழா நாளன்று அம்பாள் தேரேறி வந்து அருள்பாலிக்கும் அழகிய காட்சியைக் கண்குளிரக் கண்டு அன்னையின் தேர்வடம் பிடித்து எம் பிறவிப் பெருங்கடலை நீந்தி கரைசேர்வோம். அம்பாளின் பூரண அருட்கடாட்சம் கிடைக்கப் பெறுவோம்.

**வீ.சிவஞானசேகரம்**
**செயலாளர்.**

### தேரேறி வினை தீர்க்க வருகின்றாள் ஸ்ரீ பத்திரகாளி அம்மன்

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலாப் பரம்பொருளான சக்தி எங்கும் எதிலும் நிறைந்து தானே அதுவாய் விளங்குபவள். சக்தியானவள் பொலிகண்டி மருதாம்புலத்தில் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளாக வீற்றிருந்து அவளை வழிபடும் ஆன்மாக்களின் குறை நீக்கி அருள்பாலித்து வருகின்றாள். சக்தியின் வடிவங்களுள்ளே மிகவும் சினம் கொண்ட கோர ரூபமாக அமைவது காளியாகும். ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்குப் பொலிகை மக்கள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பண உதவிகளை வழங்கி பல்வேறு திருப்பணிகளை நிறைவு செய்துள்ளனர். அந்த வரிசையில் வெளிநாட்டில் வசிக்கின்ற அம்பாள் பக்தரான திரு.செல்லக்கண்டு விநாயகலிங்கம் (சுவிஸ்) அவர்கள் அம்மன் அருள்பெற்று அம்மனுக்குத் தேர் அமைக்க உளங்கொண்டதன் விளைவாக இன்று அம்மனுக்கு அழகிய சித்திரத்தேர் உருவாக்கப் பட்டுள்ளது. அம்மன் அத்தேரில் ஏறி வினை தீர்த்து அருள்பாலிக்கப் புறப்படுகின்றாள்.

அசையாப் பொருளை அசையும் பொருளாகச் செய்யும் முகமாக தேரானது மரத்தினால் செய்யப்படுகின்றது. கீழே அதலம் முதல் பாதாளம் வரையான உலகங்களைக் குறிக்கும் வகையில் ஏழு தட்டுக்களும் மேலே ஏழு மேல் உலகங்களைக் குறிக்கும் வகையில் ஏழு தட்டுக்களும் வைத்துத் தேரானது அமைக்கப் பெறுகின்றது. கடவுளே தேராகவும் அவரே தேரில் வீற்றிருக்கும் தலைவராகவும் விளங்குகின்றார். இன்று பத்திரகாளி அம்மன் தலைவராக இருந்து பக்தர்களினதும் தொண்டர்களினதும் மும்மலங்களை அழித்து அவர்களுக்கு அருள் வழங்கி ஆசிர்வதிப்பாள்.

**சி.புஸ்பலிங்கம்**
**ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்.**

### பார்போற்ற அருள்சுரக்கும் பத்திரகாளியம்மா

ஊர் கூடி வடம்பிடித்து உணர்வோடு தடம்பதிக்க ஊரெல்லாம் கூடி ஒன்றாகத் திரள்கின்றது. உன்கோயில் வீதியிலே பார்போற்ற அருள்சுரக்கும் பத்திரகாளியம்மா உன் சீர்மேஷ சித்திரத்தேர் ஏறிடும் திருக்கட்சி காண்பதற்கே சேயர்கள் நாம் செய்ததவம் தான் எதுவோவம்மா ஈரமுள்ளநெஞ்சங்கள் இங்கும் இருப்பதனால் ஆர்வமுடன் தேரோட்டம் அழகாக நடக்கிறது. வேராக நின்று விழுதுகளைத் காக்கின்றது வீரத்தின் உறைவிடமாம் வீரபத்திரன் தேவியே தேர் ஓட்டம் வந்ததென்று தெருவெல்லாம் ஒரே முழக்கம் தேவாரப் பண்ணோசை திக்கெட்டும் பாய்கிறது பாராயணம். பண்ணி பந்திரகாளியம்மா வென்றே பக்தரெல்லாம் ஆடுகின்றார் பரவசங்கள் கூடி நாராயணியே நலமோங்கக்காத்துநிற்கும் பூரணியே பொலிகையின் பொக்கிசமே அருமருந்தே தேனே அமுதப் பெருங்கடலே திருவருள் புரிந்திடவே தேரேறி வருவாயம்மா! மருதலம்புலந்துறையும் மாதாவே யென்று கருதா நிற்கும் அன்பருக்கும் கவலையுண்டோ உருகாத உள்ளங்களும் உருகுமம்மா உனைநினைத் தால் பெருகுமெம் துயர் தீர்க்கும் பிறிதொருவர் யார் தானம்மா? தார் ஓடி வளப்புடனே தேர் மீது தாயே நீ வரும் தனிக்காட்சி ஊர்கூடி வடம்பிடித்து உருக்கமுடன் நெருக்கமாய் நிற்கும் திருக்காட்சி கார்மேக வண்ணணின் தங்கையே உன் கடைக்கண் பார்வை பட்டவற்கும் பாரினிலே துன்பம் உண்டோ அம்மா!

**ஆக்கம்: செ.சின்னையா**
**தலைவர் பொலிகை அம்பிகை**
**சனசமூக நிலையம்.**



### வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற நடைபெறுவதற்கு அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளதையிட்டுப் பேரானந்தம் அடைகின்றேன்.

கருணையே வடிவமானவள் பத்திரகாளித் தாயவள். பேச முடியாத என்னைப் பேச வைத்த பேரருள் கொண்டவள். எனது குலதெய்வமாய் என்னை வழி நடத்துகின்ற தாயவள். அற்புதங்கள் பல செய்த அன்னையவள். அருளாட்சி செய்கின்ற புனிதப் பதியிலே இன்று சித்திரத்தேர் பவனி வரவுள்ளது.

சைவ சமயத்தவர்களின் வாழ்வில் பெறுதற்கரிய பெரும் பேறாயமைந்த தரிசனங்கள் மூன்று உள்ளன. அவை குல தெய்வக் கோயில் குட முழுக்குத் தரிசனம், கோபுரக் குட முழுக்குத் தரிசனம், சித்திரத் தேர் வெள்ளோட்டத் தரிசனம் என்பவையாகும். இவை நம் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் தேடிய தேட்டமாகும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய தேர் வெள்ளோட்டம் அனைவராலும் தரிசிக்கப்பட வேண்டியதொன்று. தேரின் வடம் பிடித்தால் தேவருலகில் இடம்பிடிக்கலாம் என்பது கண்கூடு. எனவேதான் சிறப்பான இந்த சித்திரத்தேரினை செய்வித்த அம்பிகையின் அருள்பெற்ற அடியவர் விநாயகலிங்கம் குடும்பத்தினர் சிறப்புற சித்திரத்தேரினைச் செய்தவர்கள். தேர் வெள்ளோட்டத்தினை தரிசிக்கும் அடியவர்கள் யாவருக்கும் அம்மன் அருள் வேண்டி ஆசிகள் கூறி அமைகின்றேன்.

**பண்டிதர் சொல்வேந்தர் பொன்.சுகந்தன்**
**கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**



## தேர்த்திருப்பணி உபயகாரர்கள்

ஓம் சக்தி

## வடமராட்சி பொலிகண்டி மருதாம்புலம்

# திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## 06.08.2018







### மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலசன சபை உபதலைவரின் வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய ஓர் புனித நாள் இன்று ஆகும். எவரும் எதிர் பாராதவகையில் பத்திரகாளி அம்பாளின் சித்திர தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெற திருவருள் கூடி உள்ளது.

மேற்படி ஆலயத்தின் மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் 42 ஆவது ஆண்டாக மிளிர்கின்றது. இந்த நல்ல நேரத்தில் சித்திரதேர் வெள்ளோட்டம் நடைபெற இருப்பது மிகவும் மகிழ்ச்சியான கருமமாகும் இப்பெரிய முயற்சி பல்வகை கஷ்டங்களுக்கு மத்தியில் அம்பாளின் அருளால் நிறைவேறுகின்றது இப்பணியை செய்ய முன்வந்த திருசெல்லக்கண்டு விநாயகலிங்கம் குடும்பத்தினரை மிகவும் போற்றி புகழ்கின்றோம். காலத்ததினால் செய்த உதவி ஞாலத்தில் மானப்பெரிது என்பார்கள். எனவே பொலிகை மக்களும். மேற்படி ஆலய பரிபாலனசபையும் இவர்களுக்கு என்றும் நன்றிகடன் பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். இப் பெரிய பணிக்கு பல்வகையிலும் உதவி புரிந்த அனைவரையும் பாராட்டுவதோடு எல்லாம் வல்ல அம்பாளின் அருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

இத்தகைய பணிகள் மேலும் தொடர வேண்டும் என விரும்புவதோடு அவற்றிற்கும் பொது மக்கள் நல்லாதரவு தரவேண்டுமெனவும் பணிவாக கேட்டுக்கொள்கின்றேன்.

**அம்பாளின் அருள்வழியில் நிற்கும்**
**ந.பாஸ்கர சோதி**



### அழகுரதம் ஏறி வருகின்றாள் மருதாம்புலத் தாயவள்

அண்டங்களையெல்லாம் ஆக்கி காத்துவரும் அன்னை பராசக்தி பொலிகண்டி என்னும் நற்கிராமத்திலே மருதாம்புலப் பதியில் பத்திரகாளி வடிவத்தில் எழுந்தருளி எமையெல்லாம் காத்து இரட்சிக்கின்ற அன்னைக்கு இக்கிராமத்திலே அன்னையின் அருளைப் பெற்ற செல்லக்கண்டு வள்ளிநாயகி தம்பதியரின் பிள்ளைகள் மனதில் அன்னை குடிகொண்டு தனக்கோர் சித்திரத்தேரினை செய்துவழங்கும் பாக்கியத்தை வழங்கியதன் பயன்ாக இந்த புனிதமான விளம்பி வருடத்திலே அன்னையின் வருடாந்த மஹோற்சவ பெருவிழாவிலே இந்த சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நடைபெற அருள்பாலித்துள்ளார். அத்துடன் இந்த ஆண்டு ஆடிப்பூர சமுத்திரத் தீர்த்தத்திற்கு முதல் நாள் இந்த சித்திரத்தேரிலே அமர்ந்து மருதாம்புலப்பதியை வலம்வரும் காட்சியைக் காண நாமெல்லாம் பிறவிப்பலனை அடைய வரம் தந்த அன்னை பத்திரகாளியின் பாதம் பணிந்து வணங்கி இத் தேர்த்திருவிழாவின் பயனாக எங்கள் கிராமத்து மக்களும் அன்னையைத் தேடிவந்து வணங்கும் அயலூர் கிராம மக்களும் இனிதே வாழ அருள்மழை பொழிந்து எம்மையெல்லாம் காத்து இரட்சிப்பாவாக.

தேர் சிறப்புற அமைய சகல வழிகளிலும் அரும்பாடுபட்ட தேர்த்திருப்பணிகாரர்கள். சிற்பாசாரியார், ஆலயகுரு பரிபாலனசபை ஏனைய தொண்டர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்து வாழ்த்துக்களையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றேன் அன்னையின் திருநாமம் வாழ்க

**அன்னையின் பக்தன்**
**சி.சிவபாலசிங்கம்**
**(இளைப்பாறிய கிராம அலவலர்)**



### வாழ்த்துச் செய்தி

அன்பும் அறமும் நிறைந்த எழிலார்ந்த உலகத்தை
ஆன்மீக சிந்தனைகள் உருவாக்க வேண்டும்
நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் என்ற கனவுகள் யாவும்
மெய்ப்பட வேண்டும்!

இந்த நம்பிக்கையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடும் மக்களின் உணர்வுகளுக்கு நான் என்றும் மதிப்பளிப்பவன். மருதமும், நெய்தலும் ஒன்று சேர்ந்து இயற்கையின் எழில் கொஞ்சி விளையாடும் பொலிகை மண்ணில் மருதாம்புலம் எனும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திரகாளியம்மாள் ஆலயத்தின் சீர் பெரும் சிறப்புக்கு சிகரம் வைத்தது போல் சித்தி ரத்தேர் வெள்ளோட்டம் நிகழவிருக்கும் செய்தியறிந்து பொலிகை மக்களோடு இணைந்து நானும் அகம் மகிழ்ந்து வரவேற்று வாழ்த்தி வணங்குகின்றேன். அன்பும் கருணை யும் அவனி முழுவதும் ஆளட்டும்! குறையில்லாமல் உயிர்கள் வாழட்டும்! ஆன்மீக வெளிச்சத்திலும் நம் தேசம் விடியட்டும்!

**டக்ளஸ் தேவானந்தா**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**செயலாளர் நாயகம்**
**ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி**

### வாழ்த்துச் செய்தி

வடமராட்சியின் வட கரையில் கடல் அன்னை அரவணைக்கும் பொலிகை கிராமம் புதினமான புனித கிராமமாகும். முன்னைய காலத்தில் இக்கிராமம் வன்னி மர வனமாக இருந்துள்ளது. வன்னிமரமும் கற்பக தரு வனமும் நிறைந்த இக்கிராமத்தில் முருகப்பெருமாள் இங்கு தங்கியுள்ள கதைகள் உண்டு. அவருடைய சேனாபதி சன்னதி கடற்கரையோரத்தில் தங்கியிருந்து சூரனுடன் சண்டை புரிந்ததாகவும் பழைய கதைகள் உள்ளன.

முருகப்பெருமான் தங்கிய வன்னி வனமே இன்று கல்யாண வேலவ சுவாமி கோயிலாக காணப்படுகின் றது. முருகப் பெருமான் வணங்கிய விநாயகப்பெருமாள் உப்புக்கிணற்றடியில் குடிகொண்டுள்ளார். அவர் வேண்டி வணங்கிய அம்மையாரின் அவதாரங்களில் ஒன்றான பத்திரகாளித் தாயார் மருதாம்புலம பதியில் கோயில் கொண்டுள்ளார்.

சிறுகொட்டிலில் ஆரம்பமான மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் ஊரவர்களுக்கு கேட்ட வரங்களை நிறைவாக கொடுத்து தானும் வளர்ந்து இன்று பெருங்கோயிலாக உயர்ந்து காட்சி அளிக்கிறது. இதனைப் பொலிகை மக்கள் தங்கள் மனதில் இருத்தி பெருங்கோயிலாக வளர்ந்துள்ளனர்.

கட்டுத்தேரில் வீதி உலாவந்த தாயார் இன்று சித்திரத் தேரில் சிறப்பாக பவனிவந்து காட்சி கொடுத்து அருள் பாலிக்கும் நாள் நெருங்கியுள்ள. இச் சித்திரத் தேரினை சுவிற்சிலாந்தில் வாழும் பொலிகண்டியைச் சேர்ந்த செல்லக்கண்டு ஆசிரியரின் மகன் விநாயகலிங்கம் குடும்பத்தினர் வடிவமைப்பு செய்து வழங்கும் அருளை அம்பாள் வழங்கியுள்ளார். அருள் நிறைந்த செல்லக் கண்டு ஆசிரியரின் குடும்பமும் சந்ததியாருக் கும் அவ்வூர் மக்களுக்கும் அம்பாளின் அருள் நிறை வாக கிடைக்க அம்பாளின் பாதங்களை பணிந்து வேண்டுகி றேன்.

பொலிகை கந்தனின் பிரதம குருவான வணக்கத் துக்குரிய பிரதம சிவாச்சாரியார் குமரகுருமணி சிவப்பிரம ஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் இவ்வாலய பிரதம குருவாகவும் செயற்படுவது மிகவும் உன்னத மானது. அவர் பாலுள்ள சக்திமூலம் பக்தர்கள் தூண்டப் பட்டு இப் பணியை மனமுவந்து செய்தது ஒரு வரலாற்று குறிப்பாகவும் மாறியுள்ளது.

இச்சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு இனிதாக இடம்பெறவும் மலர் வெளியீட்டில் எனது குறிப்பை சேர்க்கும் பாக்கியமும் பெற்றேன் என நினைக்கும் பொழுது அன்னையின் அடியில் ஆனந்தம் அடைகின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

**வே. விசுவலிங்கம்**
**(ஓய்வு நிலை அரச அதிபர், மன்னார் )**

### வாழ்த்துச் செய்தி

இந்து சமய வழிபாட்டு நெறிமுறைகளின் மஹோற்சவக் கிரியைகள் நிகழ்கின்ற ஆலயங்களின் அருளாட்சி செய்கின்ற பதிக்காக தேர் உற்சவம் நிகழ்த்தப்படுகின்றன. இங்கு நாம் குறிப்பிடும் தேர் மற்றும் தேர் உற்சவம் ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் தொழிலைக் குறித்து நிற்கின்றது. இங்கு அழித்தல் என்பது பல பிறவிகளில் பிறந்திருந்து உழலும் ஆன்மாக்களை இளைப்பாற வைத்தல் எனப் பொருள்படும்.

இரதேற்சவ காலங்களில் அடியார்களாகிய நாமும் கலந்து கொண்டு அம்பாளின் இரத்தின வடத்தினைப் பிடித்து இழுக்கும் போது நம் மானிட வாழ்க்கையில் செய்திருந்த எத்தனையோ பாவங்களை யெல்லாம் பலியாக்கி பிறவிக்கடலிலிருந்து மோட்சும் நோக்கிய பயணத்குற்கான வழி அமைக்கப்படுகின்றது.

இரதம் பல உறுப்புக்களை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்றது அதுமட்டுமின்றி அதன் வடிவத்திற்கேற்பவும் அவை பல வகைப் படுத்தப்படுகின்றன. சதுரவடிவான தேர் நபஸ்வன் பத்ரகம் அல்லது நாகரம் எனவும் அறுகோணவடிவான தேர் பிரபாஞ்சன பத்ரகம் அல்லது அந்திரம் எனவும் என்கோண வடிவான தேர் திராவிடம் எனவும் வட்டவடிவான தேர் வேசரம் எனவும் இவ்வாறு விதானபத்ரகம், பவன பத்ரகம், பிருஷத பத்ரகம், சந்திரக பத்ரகம் அநில பத்ரகம் எதன ஏழுவகைகளாக அழைக்கப் படுகின்றன.

இவ்வாறன அம்சங்களைக்கொண்டுள்ள அழகிய இரத்தில் எங்கள் தாயான பத்திரகாளி அம்மன் மெல்ல மெல்ல ஆடி அசைந்து அடியார்களின் அரகரோ ஹர ஒலிகளுடன் வீதியுலா வரும் தெய்வீக காட்சியினை கண்டு அகமகிழ இரு கண்கள் போதாது ஆயிரம் கண்கள் வேண்டுமம்மா.

தேர் மனிதன் ஒருவரால் இழுத்துச் செல்லமுடியாது பலர் அல்லது கிராமமே ஒன்று கூடி இழுத்தால்தான் அது நகர்ந்து செல்லும். இங்கு இரதோற்சவமானது ஓர் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றது. ஒற்றுமையுள்ள இடத்தில் ஒவ்வொரு வருக்கிடையிலும் அன்பு நிலவும். இதைத்தான் எமது சைவ சமயம் அன்பே சிவம் என்கின்றது. மற்றொன்று பலரும் சேர்வ தால் தேரை இழுத்துச் செல்வதற்கான பலம் கிடைக்கின்றது. அதாவது சக்தி கிடைக்கின்றது இவ் உற்சவத்தின் போது நாம் எங்களையே அறியாமல் சக்தியையும் சிவத்தையும் மெய் யுணர்வால் அறிகின்றோம். இறையருளையும் பெறுகின்றோம்.

அம்பாள் அடியார்கள் இறைபணிசெய்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு அம்பாளிற்காக சித்திரதேரினை வழங்கிய செல்லக்கண்டு மாஸ்ரர் குடும்பத்தினருக்கும் சைவம் தழைத்தோங்க மேன் மேலும் அயராது இறைபணியாற்ற வேண்டும் என அம்பாளை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் சித்திரதேர் நூலுக்காக அடியேனாகிய நானும் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேரின்பமடை கின்றேன்.

**சிவப்பிரகாசம் சிறிபாஸ்கரன்**
**செயலாளர்**
**பருத்தித்துறை பிரதேச சபை,**
**புலோலி.**

### வாழ்த்துச் செய்தி

"மனிதனாகப் பிறப்பதற்கு கோடி புண்ணியம் செய்தல் வேண்டும்" என அறிஞர்கள் கூறியுள்ளார்கள். அரிது அரிது மானுடர் ஆதல் அரிது" என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே மனிதனாகப் பிறந்த எமக்கு ஆணவம், கர்மம், மாயை என்ற மும்மலங்களும் பீடித்து உள்ளது.

அம்மூன்று மலங்களையும் நீக்கும் பொருட்டு பத்திரகாளி அம்மன் தேர் மீது ஏறி வெளிவீதி வலம் வருவார். ஆலயம் செல்ல முடியாதவர்களுக்கு அருள்பாலிக்கும் முகமாகவே அம்மன் வெளிவீதி வலம் வருகின்றார். அவர் வெளிவீதி வரும் போது அவ்வூர் மக்களுக்கு அருள் பாலித்து மும்முலங்களையும் நீக்கி அருள் பாலிக்கின்றார்.

எனவே வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியை சரணடைந்து வாழ்வதே நமக்கு நன்மையாய் அமையும்.

நலம் தரும், நன்மையெல்லாம் தரும், குலம் தரும், கூர்மதி தரும், பெரும் நிலம் தரும், நீளும் செல்வம் தரும் வலம் தனில் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் நாமமே.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

**ம.ஆறுமுகம்**
**அகில இலங்கை சமாதான நீதிவான்**
**ஓய்வுபெற்ற அதிபர்.**

### வாழ்த்துச் செய்தி

ஆறு அரைமதியணி சடைக் கடவுள் ஆரணியெனப் புகழ அகிலாண்ட கோடியீன்ற அன்னையை பின்னும் கன்னியென மறைபேசும் அம்மையாரின் அவதாரங்களில் ஒன்றே பத்திரகாளித் தாயார், மருதாம்புலம் பதியிலே எழுந்தருளி பக்தர்களைக் காத்தருளுகின்றாள். அவர் விநாயகப் பெருமான் சண்டேஸ்வரருடன் சுடர் ஒளி விட்டு எரியும் அக்கினியின் தோற்றத்தில் அழகு பூத்துக் குலுங்க விளங்கும் பஞ்ச கிருத்திய தொழிலில் ஒன்றாகிய ஆத்ம கோடிகள் ஓய்வு எடுக்கும் படியாகிய தொழிலைப் புரியும் தேரில் அம்மையார் இன்று வீதி உலா வருகின்றார். தேரானது பிரபஞ்ச தோற்றத்தையும், வடமானது இருதயத்தையும் சறுக்கு கட்டை நல்வழியிலே நெறிப்படுத்தும் காட்சியாகவும் விளங்குகின்றது. இப்பெரும் திருப்பணியின் மூல கர்த்தாக்களாகிய திருவருள் மிகு விநாயகலிங்கம் குடும்பம் சிற்பாசிரியர்கள் பல வழிகளிலும் அவ்வப்போது வேண்டிய உதவிகளைப் புரிந்த ஊர் மக்கள் இளைஞர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் பத்திரகாளி அம்மையாரின் திருவருள் கடாட்சம் கிடைக்கப்பெற்று நீண்ட ஆயுள் அஸ்வரியம் சுக சௌக்கியத் துடன் நல்ல வண்ணம் மண்ணில் வாழ அம்மையாரை இதயத்தில் வைத்து வணங்கி வேண்டி நிற்கின்றேன்.


**ஆ.சிவபாதசுந்தரம்.**

### கோயில்களில் நடைபெறும் விழாக்களில் சிறப்பு வாய்ந்தது மஹோற்சவப் பெருவிழாக்களே!

அப்பெருந் திருவிழாக்களினும் மகோன்னதமானதும் பரவசமானதும் இரதோற்சவப் பெருவிழாவாகும்! ஊர் கூடித் தேர் இழுக்கவேண்டும் என்பது நமது முன்னோரின் தத்து வார்த்தங்கள் நிறைந்த வாக்கு இவ்வகையில் கோயில்களில் இரதோற்சவம் நடைபெறுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இலங்கைத் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் தழைத் தோங்கி நிற்கும் வடமராட்சிப் பிரதேசசத்தின் பொலிகண்டி கிராமத்தில் வீற்றிந்து அருளாட்சி செய்யும் மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கீர்த்தி பிரசித்தமானது அம்பாளின் கோயிலில் நீண்ட காலமாகத் தேர் இல்லாக்குறை நீங்க அம்மை யின் அருட்கடாட்சத்தால் அழகிய சித்திரத்தேர் அமையப்பெற் றுள்ளமை அடியவர்கள் செய்த பாக்கியமாகும். இன்று நடைபெற வுள்ள சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு மிகச்சிறப்பாக நிறை வேற எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அனுக்கிரகம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்!

அன்னையின் அருளாட்சி அவனியெல்லாம் பரவட்டும்!

**வீ.இந்திரலிங்கம்**
**அதிபர்,**
**யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை**



# பூப்பறிக்கக் கோடரி எதற்கு?




உழவன் ஒருவனிடம் பெரிய காய்கறித் தோட்டம் ஒன்று இருந்தது. அங்கே நிறைய காய்கறிகள் நாள்தோறும் காய்த்துத் தொங்கும். உழவன் தன் தோட்டத்தை நன்றாகப் பராமரித்து வந்தான். இப்படியிருக்கையில் திடீரென ஒரு முயல் தினமும் இரவில் அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்து இலை பிஞ்சுகளைச் சாப்பிடத் தொடங்கியது. அந்த முயலைப் பிடிப்பதற்கு உழவன் பல முயற்சிகள் செய்தும் பயனில்லை. எப்படியும் முயலைப் பிடித்தாக வேண்டும் நினைப்புடன் உழவன் அரசனின் உதவியை நாடினான். "அரசே என் தோட்டத்தை முயல் ஒன்று பாழக்குகிறது. நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்"என்றான். அரசன் சிரித்தபடி "என்ன ஒரு சிறு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா?" என்று கேட்டான்.

"அரசே' அந்த முயலுக்கு மாய மந்திரம்தெரிந்திருக்க வேண்டும். நான் அதைப் பார்த்துகல்லையோ கட்டையையோ வீசினாலும் அவை அதன்மீது படுவதில்லை". என்றான் உழவன். "நாளையே வேட்டை நாய்களுடன் நான் அங்கு வருகிறேன் முயலின் மாய மந்திரங்கள் எதுவும் என் வேட்டை நாய்களிடம் செல்லாது. அந்த முயலைப் பிடித்தபிறகுதான் நான் அங்கிருந்து திரும்புவேன்" என்றார் அரசன்.

மகிழ்ச்சியுடன் தன் தோட்டத்துக்கு வந்த உழவன், இனி முயலின் தொல்லை இருக்காது என்று மனம் மகிழ்ந்து அரசனுக்கும் அவன் வீரர்களுக்கும் சிறப்பான விருந்துக்கு ஏற்பாடு செய்தான். மறுநாள் தன் படை வீரர்களும் வேட்டைக்காரர்களும் நாய்கள் சூழ அரசன் அங்கு வந்தான். அவர்களை உழவன் சிறப்பாக வரவேற்று விருந்து படைத்தான். சிறிது நேரத்தில் வேட்டை நாய்கள் பயங்கரமாகக் குரைத்துக்கொண்டு தோட்டத்துள் பாய்ந்தன. அரசனும் முயலைத் தப்ப விடாதீர்கள் பிடியுங்கள் என்று கத்தியபடி தோட்டவேலிப் பக்கமாக ஓடினான். வேட்டை வீரர்களும் அரசனைத்தொடர்ந்து ஓடினர்.

தப்பிக்க நினைத்த முயல் தோட்டத்துக்குள் அங்கும் இங்கும் ஓடியது. அவர்கள் அனைவரும் அதைத் துரத்தினார்கள். நீண்ட போராட்டத்தின் பின் ஒரு வேட்டை நாய் பாய்ந்து அந்த முயலைக் கவ்விப் பிடித்தது. வெற்றிப் பெருமிதத்துடன் அந்த முயலை உழவனிடம் காட்டினான் அரசன். இவர்களின் முயல்பிடிக்கும் முயற்சியில் தன் அழகான தோட்டம் முற்றிலும் நாசமாகிக் கிடப்பதைக் கண்ட உழவன் மிகவும் வருந்தினான். சிறு வேலைக்குப் பெரியவர்கள் உதவி கேட்பது தவறு என்று உணராமல் போனேனே! என் அழகான தோட்டம் இப்படியாகி விட்டதே என்று மிகவும் மனம் வருந்தினான். ஒரு முயல் என்ன ஆயிரம் முயல்கள் பல நாள்கள் வந்திருந்தாலும் இப்படிப்பட்ட அழிவை ஏற்படுத்தி இருக்க முடியாதே என் முட்டாள் தனத்தால் பேரழிவைத் தேடிக் கொண்டேன் என்று வருந்தினான்.




# நிலத்தின் கீழ் நீரூற்றுக்களைக் கண்டு பிடிக்கும் தடி

எமது விஞ்ஞானிகளின் அறிவுக்கு அப்பாற்பட்ட பலகாரியங்கள் இருக்கின்றன. நிலத்தின் கீழ் ஓடும் நீரூற்றுக்களைக் கண்டுபிடிக்கும் இயற்கையான ஆற்றல் சிலரிடம் இருக்கின்றது. இவ்வாற்றல் அவர்களிடத்தில் காணப்படுவதற்குக் காரணம் கூறமுடியாது.

சிலரால் நிலத்தின் கீழ் உலோகப் பொருள் இருப்பதைக் கூறமுடியும். சிலரால் நீர் இருப்பதைக் கூறமுடியும். சிலரால் அவை இவ்வளவு ஆழத்தில் இருக்கின்றன என்று கூறமுடியும். பத்துப்பேரில் ஒருவருக்கு இவ்வாற்றல் உண்டென்றும் அவர் தமக்கு இவ்வாற்றல் உண்டென்பதை அறிவதில்லை என்றும் சொல்லப்படுகின்றன. மேல் நாடுகளில் நிலத்தின் கீழ் உள்ள நீரூற்றுக்களைக் கண்டு படிப்பவர் கையில் கவருள்ள ஒரு தடியை வைத்திருப்பார். அவர் மறைந்திருக்கும் நீர் அல்லது உலோகத்துக்குக்கிட்டச் சென்றதும் கையிலிருக்கும் தடி நடுங்குகிறது. கிணற்றுக்கு நிலையம் போடுகிறவர்கள் எனச் சிலர் எமது நாட்டிலுள்ளனர். தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் கூவ நூலார் என்போர் இவ்வகையினராகலாம்.

# வர்ணம் தீட்டுவோம்





# காய்கறி உணவு அதிகம் உண்டால் புற்றுநோய் ஏற்படாது



மாமிச உணவு சாப்பிடுபவர்களுக்கு புற்று நோய்க்கட்டிகள் வளர்ச்சியடைகின்றன. அத்துடன் புதுப்புது இடங்களிலும் புற்றுநோய் ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலையில் அமெரிக்காவில் புற்றுநோய் வளர்ச்சியைத் தடுக்க ஏதாவது புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திப் பார்த்தால் என்ன என்று விஞ்ஞானிகளுக்குத் தோன்றியது. அதன் விளைவாக அதிகமாகக் காய்கறிகளைச் சேர்த்து கொள்ளவும் மாமிசங்களைக் குறைத்துக் கொள்ளவும் யோசனை வழங்கப்பட்டது.

அமெரிக்க விஞ்ஞானிகளின் புதிய உணவுத்திட்டப்படி 1982ஆம் ஆண்டு முதல் பலர் சாப்பிட்டுவந்தார்கள். 1988இல் இவர்களை ஆராய்ந்த போது புற்றுநோயக் கிருமிகளால் பாதிக்கப்பட்டிருந்தோர் எண்ணிக்கை குறைந்திருந்தது. 1982இல் புற்றுநோய்களுக்கு மருந்தின் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக குணப்படுத்தி வந்தாலும் நோய் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் தான் இருந்தது. ஆனால் மேற்கொண்டு புற்றுநோய் வளர்ச்சியடையவே இல்லை என்ற உண்மை தெரிந்தது. இதற்குக்காரணம் விட்டமின்கள் ஏ.சி.இ. ஆகியவை உள்ள காய்கறிகளிலும் சோயா பீன்ஸ் பட்டாணி, மொச்சை போன்ற தானிய உணவுகளிலும், உருளைக்கிழங்கு கருணைக்கிழங்கு போன்றவற்றில் புற்றுநோய் வர விடாமல் தடுக்கக் கூடிய பொருள்கள் இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த நேரடிப் பரிசோதனையால் தற்போது அமெரிக்க மக்கள் மட்டன் வகைகளையும் காரம் அதிகம் சேர்த்த உணவுப் பொருள்களையும் குறைத்துக் கொண்டு வருகின்றனர். குடல், மார்பு, வயிறு, தொண்டனை மற்றும் மலக்குடல் ஆகியவற்றில் புற்றுநோய் வராமல் இருக்க விரும்பினால் அதிகமாகக் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஊறுகாய்கள், முதல் நாள் தயாரித்த குழம்புவகைகளில் புற்றுநோயை உண்டாக்கும் பொருள்கள் உள்ளன. எனவே அவற்றை நிறுத்துங்கள்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## மறு ஆய்வு அவசியம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை கொழும்பு முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பன்னாட்டு க் கண்காணிப்பை இன்னும் ஒரு இரண்டு வருடங்களுக்குநீடிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்பேச்சாளர்எம்.ஏ.சுமந்திரன். இலங்கை மீதானபன்னாட்டுமேற்பார்வைநீடிக்கப்படவேண்டும்,மற்றொரு தீர்மானத்தின் ஊடாகவே அதனைச் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைதொடர்பானதீர்மானம்2015ஆம்ஆண்டுஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்து அப்போதுதான் அகன்றிருந்தார். புதிய ஆட்சி கொழும்பின் அதிகாரத்தில் அமர்ந்திருந்தது. புதிதாக இருக்கும் எல்லாவற்றுக்கும் இருக்கும் மவுசு போன்றே இந்த ஆட்சியும் மனித உரிமைகள்சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது. அப்போது அயலுறவுத்துறை அமைச்சராக இருந்தவர்இன்றைய நிதி அமைச்சர்மங்களசமரவீர.

அவரது அதீதமான அக்கறையுடன் இலங்கை தொடர்பானதீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டது. அதுவரையில், மகிந்த ராஜபக்ச ஆட்சியினால் கொழும்பு பன்னாட்டுமட்டத்தில்அடைந்திருந்தமிகமோசமான பின்னடைவுகள், இழி நிலை என்பவற்றில் இருந்து மீண்டு வருவதற்கு அந்தத் தீர்மானம் கொழும்புக்கு மிக உதவியாக இருந்தது. அதாவது பன்னாட்டு அரங்கில் கெட்டுப் போயிருந்த கொழும்பின் மதிப்பைச் சரி செய்து தூக்கி நிறுத்தவும் உலகின் பயங்கரமான இனப்படுகொலை இராணுவம் இலங்கையைச் சேர்ந்தது என்கிற அவப் பெயரில் இருந்து அதனை மீட்டெடுப்பதற்கும் இந்தத் தீர்மானம் கொழும்புக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

தீர்மானம்நிறைவேற்றப்பட்டதருணத்தில்இதுதமிழர்களுக்குக் கிடைத்த பெரு வெற்றி என்று கணிக்கப்பட்டது. நாம் இனிமேல் போராடவேண்டியதும் போராடியிருக்க வேண்டியதும் இந்த ஐக்கிய நாடுகள் சபையின் சுவர்களுக்குள்தான் என்று பல புலம்பெயர் அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் அறிக்கைவிடுவமளவுக்கு ஒரு பெரிய விடயமாகப் பார்க்கப்பட்டது. அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் சுவர்களுக்குள் இருந்து தமிழர்களுக்கு ஒரு தீர்வைக் கொண்டு வந்துவிடுவோம் என்று சொல்லுமளவிற்கு அதன் வியாபகத் தன்மை இருந்தது.

ஆனால், தனது நிதானமானதும் தெளிவானதுமான நகர்வுகளின் மூலமாக அந்தத் தீர்மானத்தைத் தனக்கு மட்டுமே வெற்றிகரமானதாகக் கொழும்பு மாற்றி அமைத்துக்கொண்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறு நாளில் இருந்தே அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தமுடியாது என்று அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டார். தீர்மானம்கூறியகலப்புநீதிமன்றத்தைஅமைக்கமுடியாது என்று அவர்நிராகரித்தார். சிறிதுகாலத்தின்பின்னர்தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவும்அரசதலைவரின்நிலைப்பாட்டை இந்த விடயத்தில் அனுசரிக்கத் தொடங்கினார். அப்போதே ஐ.நாவின் தீர்மானம் வலுவிழந்துவிட்டது.

அதன்பின்னரும்இதேபோன்று,கொழும்புமீதானகண்காணிப்பை நீடிக்க வேண்டும் என்று தெரிவித்தே மீண்டும் ஒரு இரண்டு வருடங்கள்கால அவகாசம் வழங்கும்தீர்மானம் ஒன்று 2017இல் நிறைவேற்றப்பட்டது. இப்போது அந்தக் கால அவகாசமும் முடிவடைந்ததும் அடுத்த 2 வருடங்களுக்கான தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்கிறது கூட்டமைப்பு.

இந்தத் தீர்மானம் இருந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கண்காணிப்பு இலங்கை மீது தொடரும் என்பதும் கொழும்பின் வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லைஎன்பதுபன்னாட்டுஅரங்கில்தொடர்ச்சியாகஅறிக்கையிடப்படும் என்பதும் அத்தகைய அறிக்கைகள் கொழும்புக்கு அழுத்தம் கொடுப்பவையாக இருக்கும் என்பதும் தீர்மானம் இல்லையெனில் இந்த கண்காணிப்பு அறிக்கைகள் இல்லாமல் போய்விடும் என்பதும் கூட்டமைப்பு கூறுகின்ற காரணங்கள். அதுசரியானதுதான்.ஐ.நா. தீர்மானம் இல்லையெனில் இலங்கையின் திருகுதாளங்கள் குறித்த ஒரு நடுநிலையான அறிக்கைகூட பன்னாட்டு அரங்கில் இல்லாமல்தான் போய்விடும். ஆனால், இங்குள்ளகேள்விஎன்னவென்றால்,அந்தஅறிக்கைகள்வந்தும்கூட கடந்த 4 வருடங்களில் என்ன நடந்துவிட்டது? அல்லது தமிழர்களுக்கு என்ன தீர்வு கிடைத்துவிட்டது? என்றாவது ஒரு நாள் அப்படிப்பட்ட ஒரு நல்லது நடக்கலாம் என்பதற்காக இந்த அறிக்கைகளை அடுக்கி வைத்துக்கொண்டே இருப்பதா?

இத்தகையநிலையில்மீண்டும்ஒருதீர்மானம்கொண்டுவரப்படுவது நான்அடிக்கிற மாதிரிஅடிக்கிறேன், நீஅழுகிற மாதிரி அழு என்று சொல்வதைப் போல உள்ளது.

உள்ளூர் அரசியல் களநிலவரத்துக்கு அப்பால் பன்னாட்டு அழுத்தம்ஈழத்தமிழர்கள்பிரச்சினையில்எத்தகையதாக்கத்தைச் செலுத்துகின்றது என்பதைத் தமிழர்கள் மறு ஆய்வு செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.



## அச்சமூட்டும் அமெ. - சீனா

# வர்த்தகப் போர்

அமெரிக்கா – சீனா இடையில் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்குத் தீவிரம் பெற்றுள்ளது வர்த்தகப் போர். அடுத்து என்ன நடக்குமோ என்கிற வகையில் பதற்றத்தில் உறைந்துள்ளன உலக நாடுகள். ஐக்கிய நாடுகள் சபைகூட இதற்கு விதிவிலக்கில்லை.

சீனத்திலிருந்து இறக்குமதியாகும் சூரியஒளி மின்சாரத் தயாரிப்பு சாதனங்கள், சலவை இயந்திரங்கள் ஆகியவற்றின் மீது காப்பு வரியை விதித்த ட்ரம்ப், சீனத்தின் அனைத்துப் பொருள்கள் மீதும் அடுத்து வரி விதிக்கப்ப டும் என்று எச்சரித்திருக்கிறார். இதை ட்ரம்ப் ஆதரவாளர்கள் வேண்டுமானால் ரசிக்கக்கூடும். ஆனால், அமெரிக்காவிடம் சீனா வாங்குவது குறைவாகவும், விற்பது அதிகமாகவும் இருப்பதால் வெளிவர்த்தகப் பற்றாக்குறை அமெரிக்காவுக்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

### நேரடித் தாக்குதல்கள்

கடந்த சில மாதங்களாகக் காப்பு வரியைப் பரஸ்பரத் தாக்குதலுக்கான ஆயுதமாக வைத்து எச்சரித்துக்கொண்டிருந்த அமெரிக்காவும் சீனாவும், தற்போது வர்த்தகப் போரில் நேரடியாக இறங்கியிருக்கின்றன. இரு நாடுகளும், இறக்குமதிப் பொருள்கள் மீது 25சதவீதம் காப்பு வரியைப் பரஸ்பரம் விதித்துக்கொண்டுள்ளன. இதன் மதிப்பு 3 ஆயிரத்து 400 கோடி அமெரிக்க டொலர்கள். ""பொருளாதார வரலாற்றிலேயே இதுதான் மிகப் பெரிய வர்த்தகப் போர்" என்று சீனா வர்ணிக்கிறது. உலகம் இதுவரை பார்த்துள்ள பெரிய போர்களைவிட இது ஒன்றும் பெரிதல்ல என்றாலும் உலகப் பொருளாதாரத்துக்குக் கணிசமான நாசத்தை விளைவிக்கக் கூடியது இது என்பதில் சந்தேகமில்லை.



### ஆரம்பித்தவர் ட்ரம்ப்

சீனத்திலிருந்து இறக்குமதியாகும் சூரியஒளி மின்சாரத் தயாரிப்பு சாதனங்கள், சலவை இயந்திரங்கள் ஆகியவற்றின் மீது காப்பு வரியை விதித்த ட்ரம்ப், சீனத்தின் அனைத்துப் பொருள்கள் மீதும் தொடர்ந்தும் வரி விதிக்கப்படும் என்றும் எச்சரித்திருக்கிறார். இதை ட்ரம்ப் ஆதரவாளர்கள் வேண்டுமானால் ரசிக்கக்கூடும். ஆனால், அமெரிக்காவிடம் சீனா வாங்குவது குறைவாகவும், விற்பது அதிகமாகவும் இருப்பதால் வெளிவர்த்தகப் பற்றாக்குறை அமெரிக்காவுக்கு அதிகரித்துக்கொண்டே வருகிறது. அமெரிக்காவுக்குப் பதிலடி தரும் வகையில், அங்கிருந்து வரும் சோயாபீன்ஸ், மோட்டார் வாகனங்கள், உதிரிபாகங்கள் போன்றவற்றுக்கு சீனாவும் காப்பு வரியை விதித்திருக்கிறது. இதனால், அமெரிக்காவில் ஏராளமானவர்கள் வேலையிழப்பார்கள். ஐரோப்பிய ஒன்றியம், மெக்சிக்கோ, கனடா ஆகியவையும்கூடப் பதிலடியாக அமெரிக்கப் பொருள்கள் மீது காப்பு வரி விதித்துள்ளன.

### காப்பு வரியென்பது தற்காப்பு அல்ல

உலகம் சுருங்கிவிட்ட நிலையில் எந்த நாடும் தனக்குப் பாதிப்பு இல்லாமல் காப்பு வரி விதித்துப் பிழைத்துக்கொள்ள முடியாது. வரிவிதிப்பதால் பொருள்களின் விலை உயர்ந்து நுகர்வோருக்குச் சுமையைக் கூட்டும் என்பதுடன், உற்பத்தியில் ஈடுபடும் தொழில்முனைவோர்களுக்கு உற்பத்திச் செலவும் அதிகரிக்கும். அது அவர்களுடைய இலாபத்தையும் ஏற்றுமதியையும் விற்பனையையும் சரித்துவிடும். பல இறக்குமதிகள் அத்தியாவசியமானவை. அவற்றுக்குத் தடை விதித்தாலோ, அதிகமாக வரி விதித்தாலோ வர்த்தகச் சங்கிலியே அறுபட்டுவிடும். உலக வர்த்தகத்தில் ஏதேனும் பிரச்சினை என்றால் அதை உரிய அமைப்பு மத்தியஸ்தம் செய்து தீர்த்துவந்தது.

இப்போது அந்த விதிகளை மதிக்காமல் நேரடியாகக் காப்பு வரி விதித்து களத்தில் மோதிக்கொண்டால் உலக வர்த்தகம் சுருங்கிவிடும். அது உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் என்று எல்லாவற்றையும் பாதிக்கும்.

இந்நிலை தொடர்ந்தால் வர்த்தகத்தைப் பெருக்க என்ன செய்யலாம் என்று யோசிக்கும் பல நாடுகள், தங்களுடைய செலாவணியின் மாற்று மதிப்பைத் தாங்களாகவே குறைத்துக்கொள்ளவும் முன்வரலாம். தொடக்கத்தில் இது ஏற்றுமதியாளர்களுக்கு உதவியாக இருந்தாலும், பிறகு அனைவருக்குமே ஆபத்தாக முடியும். மிகவும் மெதுவாகத்தான் மீண்டுவருகிறது உலகப் பொருளாதாரம். அதற்குள் இப்படித் தேவையற்ற அதிர்ச்சிகளை அரசியல் உள்நோக்கத்துடன் அளித்தால் பொருளாதாரத்தால் அதைத் தாங்கவே முடியாது!

*தி ஹரிந்து*



சேரலாதன்

# தெற்கில் ஏற்படுகின்ற மாற்றம்தான் தமிழ் மக்களின் இன்றைய தேவை


சிங்கள மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காது விட்டால் தமிழர்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்காதென சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். அவரது கருத்தில் புதுமை எதையும் காண முடியவில்லை. ஏனென்றால் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் இதுதான் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

**தீர்வும் தெற்கும்**

தமிழர்களுக்குத் தீர்வு எதையாவது வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறும்போது பெரும்பான்மை அரசியல்வாதிகள் தாம் சார்ந்த மக்களிடம் நஞ்சை நன்றாக விதைத்து விடுகின்றனர். இதை அறுவடை செய்ய வேண்டிய அவல நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

இதற்கு உதாரணமாக பண்டா - செல்வா ஒப்பந்தத்திலிருந்து தற்போதைய புதிய அரசமைப்பின் உருவாக்கம் வரையிலாகக் கூறமுடியும். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது கூட அது தொடர்பாகத் தவறான தகவல்கள் பெரும்பான்மையின மக்களுக்கு வழங்கப்பட்டன.

இலங்கையை இந்தியாவுக்குத் தாரை வார்க்கின்ற ஒப்பந்தமே இதுவெனவும், இதன் மூலமாகத் தமிழர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள தமது இனத்தவருடன் இணைந்து இலங்கையின் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடுவார்களெனவும் கூறப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் மூலமாகத் தமிழர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடைக்கவில்லை. இந்தியப் படைகள் தமிழர்களின் பிரதேசங்களில் நுழைந்து அநீதி இழைப்பதற்கே அது வழிவகுத்தது.



**புதிய அரசமைப்பும் இனவாத பரப்புரையும்**

தற்போதுகூட புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் தமிழர்களுக்குத் தனி நாடு கிடைத்துவிடுமெனத் தெற்கில் பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் இனவாத அரசியல்வாதிகள் மட்டுமல்லாது பௌத்த தேரர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பெரும்பான்மையின மக்கள் இதை நம்பவே செய்கின்றனர். இதனால் புதிய அரசமைப்பை அவர்கள் எதிர்க்கவே செய்வார்கள். பெரும்பான்மையின அரசியல்வாதிகள் சிங்கள மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கி அவர்களைப் பிழையாக வழிநடத்தும் வரையில் அந்த மக்களின் மனநிலையில் மாற்றத்தை எதிர்பார்க்கவே முடியாது.

சிங்கள மக்கள் பொதுவாகவே தமிழர்களுடன் ஐக்கியமாக வாழ்வதையே விரும்புகின்றார்கள். தற்போது தமிழர்கள் தென்பகுதிக்கும், சிங்கள மக்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கும் எவ்வித அச்சமுமின்றிச் சென்று வருகின்றனர். சகோதர மனப்பான்மையுடன் ஒருவருடன் ஒருவர் பழகுவதற்கும் அவர்களால் முடிகின்றது. இனவாதிகள் தமது செயற்பாடுகளைக் கைவிட்டால் இது தொடரவே செய்யும். இனவாதத்தால் இந்த நாடு எதிர்கொண்ட அவலங்கள் ஏராளம். ஆனால் இதிலிருந்து விடுபட முடியாத நிலையில்தான் நாடு உள்ளது.

**புலி என்றதும் கிலி**

புலிகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா தெரிவித்த கருத்துக்கள் தென்பகுதியில் பெரும் புயலைக் கிளப்பி விட்டது. அவர் சார்ந்த கட்சியினர் கூட அவருக்கு எதிராகக் கிளம்பிவிட்டனர். ஆனால் எந்தச் சூழ்நிலையில் அவர் அவ்வாறு தெரிவித்தாரென எவருமே சிந்தித்துப்பார்க்கவில்லை. புலி என்றால் இன்னமும் அவர்கள் கிலி கொள்வதையே இது எடுத்துக் காட்டுகின்றது. கூட்டு எதிரணியில் இனவாதிகளே அதிகமுள்ளனர். ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இவர்கள் எதைச் செய்வதற்கும் தயாராகவே உள்ளனர். எந்த விடயமாக இருந்தாலும் அதில் இனவாதத்தைக் கலப்பதுதான் இவர்களின் வழமையாகவுள்ளது. தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவிவகிப்பதும் இவர்களின் கண்களை உறுத்துகின்றது. இதன் காரணமாகவே சம்பந்தனை அந்தப் பதவியிலிருந்து நீக்கி விடுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் சிங்கள மக்கள் ஒத்துழைப்பு வழங்காத வரையில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காதெனக் கூறுவதில் எவ்வித அர்த்தமுமில்லை. தென்பகுதி அரசியல்வாதிகள் தம்மைத் திருத்திக் கொண்டால் எல்லாமே சரியாக நிறைவேறிவிடும். தாம் சார்ந்த மக்களைக் காரணம் கூறுவதை விடுத்து அவர்கள் தம்மைத் திருத்திக் கொண்டால் அதுவே போதுமானது.

## ஆசிரியருக்கான கடிதம்

# இனியாவது விடுதலை கொடுங்கள்

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை நேற்று முடிவடைந்துள்ளது. கடந்த பல மாதங்களாக கசக்கிப்பிழிந்து, சித்திரைவதை செய்து, அடித்து, நித்திரை கொள்ள விடாது மாணவர்களைப் பாடாய்ப்படுத்தி ஒருவாறு பரீட்சை எழுத வைத்துவிட்டார்கள் எமது கெட்டிக்காரர்கள். இனியாவது அந்த மாவணவர்களுக்கு விடுதலை வழங்கவேண்டும். அதிகளவான நேரத்தை அவர்கள் மைதானத்தில் செலவிட அனுமதிக்க வேண்டும் என்பதே பேரவா.

புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்து விட்டால் மாணவர்கள் விடுதலை பெற்றுவிடுவார்களா என்றால் அதற்கு இல்லை என்பதே பதில். சில பெற்றோர் பரீட்சை மாதிரி வினாத்தாளைக் கொடுத்து பரீட்சை மண்டபத்தில் எழுதிய விடையை இங்கு திரும்பவும் எழுதச் சொல்லுவார்கள்.

அதில்வைத்து தமது பிள்ளை சித்தியா தோல்வியா என்பதை ஓரளவு கணக்கிட்டு விடுவார்கள். ஆக, பரீட்சை முடிந்த பின்னரும் மாணவர்களால் ஒழுங்காக உறக்கம் கொள்ள முடிவதில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

குருவியின் தலையில் பனங்காயை வைத்ததுபோல் என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. அதற்கு இந்தப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு. பரீட்சை என்றால் என்னவென்று அறியாத பருவத்தில் மிகப்பெரும் பரீட்சை ஒன்றில் மாணவர்களை நாம் தள்ளிவிடுகிறோம்.

இதுவே பத்தே வயதான அந்தப் பிஞ்சுகளுக்கு நாம்செய்யும் மிகப்பெரிய துரோகம். இவ்வாறான நிலையில் பரீட்சை முடிந்த பின்னரும் இந்த நிலை தொடர வேண்டுமா.

மாணவர்களின் திறமையை மதிப்பிடும் நோக்கில் இந்தப் பரீட்சை அமைகிறதோ இல்லையோ அவர்களின் பெற்றோரின் திறமையை மதிப்பிடும் நோக்கில் நன்றாகவே அமைகிறது. ஏனெனில் மேற்குறிப்பிட்ட கசக்கிப்பிழியும் வேலையைச் செய்தவர்கள் அவர்களல்லவா.

இனி அவர்களின் எண்ணம் பரீட்சை முடிவுகளை எதிர்கொண்டதாய் இருக்கும்.

தமது பிள்ளை சித்தி அடையவில்லையாயின் அடுத்துவரும் பரீட்சைகளின் போதெல்லாம் அவர்களின் குழந்தைகள் வாழ்நாள் கைதிகள் தான். பெற்றோரும் தமது இந்த மனவோட்டத்தைக் கைவிட வேண்டும்.

ஏனெனில் படித்த அனைத்தும் பரீட்சைக்கு வருவதுமில்லை. பரீட்சைகள் அனைத்தையும் தீர்மானிப்பதுமில்லை.

*பிரகாஸ்*

# ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம்










இலங்கை வங்கியின் கிளி நொச்சிக் கிளை நிலையம் 79 ஆவது ஆண்டு நிறைவை அண்மையில் சிறப்பாக கொண்டாடியது. கிளை முகாமையாளர் வி.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பிராந்திய முகாமையாளர் பிறேமராஜன், சிறப்பு விருந்தினராக வடமாகாண குருதி வங்கியின் மருத்துவ நிபுணர் திருமதி டர்மிக செனவிரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மருத்துவ நிபுணர் திருமதி டர்மிக செனவிரட்ண, 'குருதிக் கொடையின் நன்மைகள்' என்ற கருப்பொருளில் சிறப்புரை யாற்றினார்.

ஆண்டுநிறைவை முன்னிட்டு அன்றைய தினம் குருதிக்கொடை முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.


நூற்றுக்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ஒ)




# 'மெல்பன்' ஒன்றுகூடல் நிகழ்வு

மெல்பன் மெற்றல் நிறுவனம் ஏற்பாடு செய்த, ஊவா மாகாண பொறியியலாளர்கள் மற்றும் கட்டட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான "தேசத்தின் உருக்குக்கம்பி மெல்பன்" எனும் தொனிப்பொருளின் கீழான ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் பதுளை 'றிவர் சைற்' ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மெல்பன் மெற்றல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மட் றஸ்மி, பொறியியலாளர்கள் மற்றும் கட்டட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ)



# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றமில்லை; சமனிலைத் தன்மையைப் பேண நடவடிக்கை

சந்தைக்கான வட்டி வீதங்களை தீர்மானித்துக்கொள்வதில் நேரடியான தாக்கங்களை செலுத்தும் கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் சமனிலைத்தன்மையோடு பேணிக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை தீர்மானித்துள்ளது.

இம்மாதம் 02 ஆம் திகதி வெளியான பணக்கொள்கை தொடர்பான விவர அறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக, "நடைமுறையிலுள்ள நிதிக் கொள்கைகளில் நீடித்த உறுதித்தன்மை காணப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியில் நிலையான வைப்புகள் மற்றும் நிலையான கடன் வசதிகளுக்கான விகிதாசாரங்கள் முறையே 7.25 மற்றும் 8.50 என்ற நிலைபேறான மட்டங்களில் தொடர்ந்தும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. யாப்பு ரீதியான கையிருப்புகளுக்கான விகிதாசாரம் என்பது 7.5 சதவிகிதமாக பேணப்படும்." என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கி,

"நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் உறுதிப்படுத்துவதனையும் அதன் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் அதிகரித்த மற்றும் நீடித்த வளர்ச்சி உத்வேகத்துக்கு பங்களிப்பு செய்வதற்குமான நோக்குடன் இசைந்து செல்லும் வகையில் சபையின் தீர்மானம் அமைந்துள்ளது. சபையானது அதன் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார அபிவிருத்தியை கரிசனையுடன் கண்காணித்துள்ளது.

அதிகரித்த நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியிலும் உலகளாவிய வளர்ச்சி பலமடைந்து வருகின்றமை நாடுகளுக்கிடையே நிலவிய சமச்சீரற்ற விரிவாக்கத்தை நடப்பாண்டிலும் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் பலமடையச் செய்யும். இதனை பன்னாட்டு நாணய நிதிய உலக பொருளாதாரத் தோற்றப்பாட்டின் தற்போதைய இற்றைப்படுத்தல் உறுதிப்படுத்தியுள்ளது." - என்றுள்ளது.

பணக்கொள்கை தொடர்பான விவர அறிக்கையின் அடுத்த வெளியீடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி இடம்பெறும். (ஒ)




**மேடம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பணி நிறைவேற தாமதமாகும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** இளமைக்கால நண்பரை சந்திப்பீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் அளவில் பணிபுரிவீர்கள்.

**மிதுனம்:**எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் முன்யோசனை அவசியம். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இயங்கும் .

**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட செயல் நிறைவேறி பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும்.

**சிங்கம்:** நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சுறு சுறுப்பாக பணிபுரிவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும்.

**கன்னி:** தர்மசங்கடமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிடலாம். உங்களின் நற்குணம் மாறாமல் செயல்படுவீர்கள் .தொழில் வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**துலாம்:** உங்களை சிலர் குறை சொல்ல நேரிடலாம். சகிப்புத் தன்மையுடன் பொறுமை காப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு தேவை.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் உங்கள் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற குறுக்கீடு விலகும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** இஷ்ட தெய்வ அருளால் முக்கியமான செயல் நிறைவேறும்.தொழில்வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்:**உங்கள் செயல்களில் நிதானம் பின்பற்றவும். சக தொழில் வியாபாரம் சார்ந்தவர்களிடம் சண்டை, சச்சரவு வேண்டாம்.

**கும்பம்:** உடல்நலத்தில் அக்கறை வேண்டும். திட்டமிட்ட செயல் நிறைவேறுவதில் தாமதம் இருக்கும்.தொழில், வியாபாரம் சீர்பெற நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** வெளிவட்டார பழக்கத்தால் நன்மை வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். சேமிக்கும் விதத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

# இளையராஜா இசையை மருந்தாக்க முயற்சி



இந்திய சினமாவில் இசைஞானி என்று போற்றப்படும் இளையராஜா வின் இசையை மருத்துவத்துக்குப் பயன்படுத்தும் முயற்சியில் சிங்கப் பூர் மருத்துவமனை ஈடுபட்டுள்ளது. இசைஞானி என்று போற்றப்படும் இசை அமைப்பாளர் இளையராஜா ஆயிரம் படங்களுக்கு மேல் இசை யமைத்து விட்டார்.

அவரது இசைக்குப் பெருமை சேர்க்கும் விதமாக இளையராஜாவின் இசையை மருத்துவத்துக்குப் பயன்படுத்தும் முயற்சியை சிங்கப்பூரில் உள்ள பிரபல மருத்துவமனை கையில் எடுத்திருக்கிறது.

அவருடைய பட்ங்கள், சில திரைப்படப் பாடல்கள் பற்றி விரிவாக ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கின்றது. சில இசைக்கோப் புகளைப் பிரத்தியேகமாக இந்தத் தொகுப்புக்காக உரு வாக்கி கொடுத்திருக்கிறார் இசைஞானி.

## twitter

செங்காந்தள்@kumarfaculty



மருத்துவமனைகளுக்கு
"நோயுற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"...!!!

ச ப் பா ணி @manipmp



ஒரு தேநீருக்கு
சுவை சேர்க்க
பால்,சர்க்கரையோடு
மழையும் தேவைப்படுகிறது

## வாகனம் செலுத்தும் முறை

- ஓதாமல் ஒரு பயணம் தொடங்க வேண்டாம்
- ஒருவரோடும் போட்டிக்கு ஓட வேண்டாம்
- சாதாரண ஸ்பீட் தாண்டிப் போக வேண்டாம்
- சந்தியிலே சடுதியாகத் திரும்ப வேண்டாம்
- பாதசாரிக் கடவைகளில் பறக்க வேண்டாம்*
- பாவியாகி உயிர்களினைப் பறிக்க வேண்டாம்
- போதாத நெரிசலுக்குள் புகுத்த வேண்டாம்
- பொறுமை பற்றி அறிவுரைகள் மறக்க வேண்டாம்.
- அஞ்சாறு பைக் ஒன்றாய் செல்ல வேண்டாம்
- அரைக் கண்ணால் போன் பார்த்து ஓட்ட வேண்டாம்
- துஞ்சாமல் தொடராக ஓட வேண்டாம் .
- தொலைதூரம் தனியாக ஓட்ட வேண்டாம்
- கஞ்சா போதைகளில் செல்ல வேண்டாம்
- கவனமாகப் போவோரைக் கொல்ல வேண்டாம்
- பொஞ்சாதி புள்ளைகளை மறக்க வேண்டாம்
- பொடுபோக்காய் ஓடி வழியில் இறக்க வேண்டாம்.
- மனம் டென்ஷன் ஆகும் போது ஓட வேண்டாம்
- மாற்றி மாற்றி 'ட்ரக்'களிலே பாய வேண்டாம்
- வண்டி செக் பண்ண மறக்க வேண்டாம்
- திமிரோடு லைசன்ஸ் எடுக்காது ஓட வேண்டாம்
- பைக்கில் ஹெல்மட் இன்றிப் போக வேண்டாம்
- மற்றவரை புளொக்பண்ணி ஓட வேண்டாம்*
- சடாரென்று விழுந்த பின்னர் வருந்த வேண்டாம்*



## சுடோக்கு


எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 2 | | | | | |
| | 3 | | | 8 | | | 9 | |
| | | | 7 | 6 | | | | 8 |
| | | | | 2 | | 1 | | 4 |
| | 2 | 5 | | | | 9 | 7 | |
| 1 | | 9 | | 5 | | | | |
| 5 | | | | 7 | 2 | | | |
| | 7 | | | 4 | . | | 2 | |
| | | | | | 9 | 3 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |

நேற்றைய விடை


சுத்துறது தப்புன்னு அப்பா, அம்மா சொல்லும்போது புரியல்ல....





இப்போ டவுன்லோடு பண்ணும் போதுதான் புரியுது

## சந்திரகிரகணம் என்பது....

சூரியன், பூமி, சந்திரன் அனைத்தும் ஒரே நேர் கோட்டில் வரும்போது சந்திர கிரகணம் ஏற்படும். பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால், சந்திரன் பிரகாசம் குறைந்து கருஞ்சிவப்பாக காட்சியளிக்கும். அதாவது, சூரியன் மாலை மறைந்த பிறகு அடிவானம் எந்த நிறத்தில் இருக்குமோ, அதுபோன்று சந்திரன் காட்சியளிக்கும். பௌர்ணமி தினத்தன்று சந்திர கிரகணமும், அமாவாசை தினத்தன்று சூரிய கிரகணமும் நடக்கும். சந்திர கிரகணம் என்பது நிலா பூமியின் பின்னால் கடந்து செல்லும்போது பூமியானது சூரியனின் கதிர்களை நிலவின் மீது படுவதிலிருந்து மறைத்துவிடுவதால் ஏற்படுவது ஆகும். சந்திர கிரகணம் முழுமையாக ஏற்பட்டால் பூரண சந்திர கிரகணம் என்றும், அரைகுறையாக ஏற்பட்டால் பார்சுவ சந்திர கிரகணம் என்றும் அழைக்கப்படுகிறது.





## இது புதுசு

ஆண்களுக்கான மணிக்கூடு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள் ளன. இவை இரண்டாயிரத்து 300 ரூபா வுக்கு விற்பனை செய்யப்ப

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1800 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 700 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

# உடல் எடையை அதிகரிக்கும் பழங்கள்




உடல் எடையை குறைப்பதற்காக முயற்சி செய்பவர்கள் மத்தியில் உடல் எடையை அதிகரிக்க முயற்சி செய்பவர்களும் இருக்கிறார்கள். எடையை குறைப்பதற்கு டயட், உடற்பயிற்சி என போன்ற வழிகள் இருக்கையில், எமது அன்றாட உணவு பழக்கங்களின் மூலம் உடல் எடையை அதிகரிக்கலாம்.

- உடற்பருமனாக இருப்பவர்களும், மெலிந்த தேகம் கொண்டவர்களுக்கும் வாழைப்பழம் பயன்தரும். அதாவது உடற்பருமனாக இருப்பவர்கள் வாழைப்பழத்தை தினமும் உணவில் சேர்த்து வந்தால் அவர்களது குருதியில் உள்ள குளுகோஸ் அளவு ஒரு நிலையான தன்மைக்கு வருவதால் உடற்பருமன் குறைவதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வாழைப்பழத்தில் அதிக ளவில் கலோரிகள் உள்ளது, எனவே உடல் எடையை அதிகரிக்க நினைப்பவர்களுக்கு சிறந்த பழமாக இருக்கும்.
- ஒரு அத்திப்பழத்தில் 111 கலோரிகள் உள்ளது. தினசரி 2 பழங்களை சாப்பிட்டால் உடலில் குருதி உற்பத்தி அதிகரிக்கும். இதை சாப்பிடுவதால் உடல் ஆரோக்கியமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் உடல் எடையும் அதிகரிக்கும்.
- எடையை அதிகரிக்க விரும்புபவர்கள் அதிகளவில் அவகோடா பழத்தை சாப்பிட வேண்டும். இவற்றில் 322 கலோரிகள் உள்ளது. மேலும் இதில் நல்ல கொழுப்புகள் அதிகம் இருப்பதால் இதயத்திற்கு ஆரோக்கியம் தரும்.
- வால்நட்ஸ், பாதாம் மற்றும் ஹாசில் நட்ஸ் உள்ளிட்ட பருப்புகளில் கொழுப்புகள் மற்றும் கலோரிகள் அதிகம் உள்ளது. இவற்றில் அடங்கியுள்ள அதிக அளவு புரதம் உடலுக்கு உரத்தை அளிக்கிறது. தினமும் சிறிதளவு உலர் பழங்களை எடுத்துக் கொள்வது உடல் எடையை அதிகரிக்க நிச்சயம் உதவும்.
- மாம்பழத்தில் விற்றமின் ஏ உயிர்சத்து மற்றும் கலோரிகள் நிறைந்துள்ளது. இதனை உட்கொள்வதால் எமது குருதி அதிகரிக்கப்பட்டு உடலுக்கு நல்ல பலம் கிடைக்கும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியும் அளிக்கிறது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 90 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 40 | 100 |
| பாகல் | 280 | 160 | 180 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 220 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 140 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 80 | 100 | 60 |
| தக்காளி | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 400 | 400 | 300 | 500 |
| புடோல் | 110 | 70 | 100 | 100 |
| கோவா | 150 | 180 | 180 | 160 |
| வெண்டி | 100 | 50 | 100 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 260 | 280 |
| லீக்ஸ் | 240 | 150 | 140 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 300 | 300 |
| கரட் | 280 | 300 | 320 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 60 | 180 |

# பசியின்மையும் அதைப் போக்கும் வழிமுறைகளும்



ருசியான உணவுகளைக்கூட சாப்பிட விடாமல் செய்யும் பிரச்சினைதான் `பசியின்மை'. இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. பசியை அதிகரித்து, உணவுகளை விரும்பி சாப்பிட நீங்கள் உணவுப் பழக்கத்தில் கடைபிடிக்க வேண்டிய சில விடயங்கள் இங்கு தரப்படுகின்றன.

- நல்ல உடல்நலத்துக்கு 40க்கு மேற்பட்ட ஊட்டச் சத்துக்கள் அவசியம். எனவே உங்கள் உணவு தினமும் ஒரே வகையானதாகவோ, ஒரு வேளையில் ஒரே உணவு மட்டுமோ இருக்கக்கூடாது. தினசரி உணவுடன் கூடுதலாக பழங்கள், காய்கறிகள், பால் பொருள்கள் மற்றும் இறைச்சி, கோழி, மீன் மற்றும் பிற தானிய உணவுகள் இவைகளில் ஏதாவது ஒன்றிரண்டை கூடுதலாக சேர்த்து சாப்பிடுங்கள்.
- சமைக்கும் உணவு சுவையாக இருந்தால்தான் எம்மால் விரும்பி சாப்பிட முடியும். எனவே வழக்கமான காய்கறிகளானாலும், கொஞ்சம் வித்தியாசமான தயாரிப்பு முறையில் சமைத்து சாப்பிடுங்கள். சமையல் புத்தகங்கள் அல்லது விதவிதமாக சமைக்கும் அனுபவமுள்ளவரின் உதவியை நாடுங்கள்.
- உங்கள் எடை சரியானதா என்பது பாலினம், உயரம், வயது மற்றும் பாரம்பரியம் உட்பட பல விடயங்களை சார்ந்திருக்கிறது. உடல் எடை அதிகமாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் பல வியாதிகள் ஏற்படும். சராசரியான உடல் எடையை மேலாண்மை செய்வது உடல் நலத்திற்கும், உணவு பழக்க வழக்கத்திற்கும் நல்லது.
- உடல் ஆரோக்கியமாக இருக்க மிதமான அளவில் உணவு சாப்பிடுவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். அளவாக சாப்பிடுவதுதான் சரியான நேரத்திற்கு பசியைத் தூண்டும். உங்களுக்குப் பிடித்த உணவை கூடுதலாக சாப்பிடுவதும், மற்ற உணவுகளை தேவையைவிட குறைவாக எடுத்துக் கொள்வதும் உடலுக்கு தீங்கு தரும். இது பசியின்மையையும், உணவின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தக்கூடும்.
- சிலருக்கு புதுப்புது உணவுகளைச் சுவைத்துப் பார்ப்பது பிடிக்கும். அடிக்கடி புதிய உணவுகளை சேர்த்தால் ஜீரண நேரம் மாறுபடுவதால் பசிப்பதில் பிரச்சினைகள் வரலாம். வழக்கமான உணவுகளை சுழற்சி முறையில் சாப்பிடுவது எளிதான ஜீரணத்திற்கு வழிவகுக்கும். வழக்கமான நேரத்திற்கு பசியையும் தூண்டும்.
- சேர்க்க வேண்டிய உணவுகளைச் சேர்ப்பதும், தவிர்க்க வேண்டிய உணவுகளைத் தவிர்ப்பதும் சிறப்பான உணவுப் பழக்கமாகும். உடல் நலத்தில் அக்கறை காட்டும் பலரும் அதிக ஊட்டச்சத்துள்ள உணவை விரும்பி சாப்பிடுகிறார்கள். ஒவ்வொருவர் உடலுக்கும் தேவையான சத்துக்கள் மாறுபடும். எனவே உணவு ஆலோசகரின் பரிந்துரைப்படி சத்தான உணவுகளை சேர்க்கவும், அவசியமற்ற நொறுக்குத் தீனி போன்ற உணவுகளை குறைக்கவும், தவிர்க்கவும் செய்யுங்கள்.
- எல்லா உணவுகளும் அவசியமானதும், சத்தானதும் அல்ல. ஒருமுறை கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை நிறைந்த உணவுகளை நீங்கள் உட்கொண்டால் மறுமுறை அந்த சத்துக்கள் குறைவாக உள்ள உணவை உண்ண வேண்டும். அதே போல ஒரு சத்தான உணவை தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் அடுத்த முறை அந்த உணவை அவசியம் சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் சாப்பிடும் உணவுகள் நீண்ட காலத்திற்கு உங்கள் ஆரோக்கியத்திற்கும் பக்க பலமாக இருக்க வேண்டுமல்லவா!

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 05.08.2018 | 2342 | ஊதா |

வெற்றி இலக்கங்கள்: 03 32 46 48

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,515,796/=

2018.08.07 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**கோடிபதி சனிதா**

சீட்டிழுப்பு வாரம்: 324

வர்ணம் : பச்சை

சீட்டிழுப்பு திகதி: 2018.08.05

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்

ரூ. 89,520,633/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: Z 21 43 46 54

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 333

வர்ணம் : இளநீலம்

சீட்டிழுப்பு திகதி: 2018.08.05

இன்றைய ஜக்பொட் பரிசு

ரூ. 57,057,625/-

வெற்றி இலக்கங்கள்: 18 27 30 46

ஆங்கில எழுத்து: C

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>A.K என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## PERSONAL CLASS

தரம் - 03. முதல். O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதிகவியல். இரசாயனவியல். பொருளியல். வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

076 249 8127

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306. 077 138 7596**

(CS 18781(35/17))

## ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.

021 492 7471 / 021 492 7472

கிளை அலுவலகம்:-

New Market, 1st Floor, Chavakachcheri

021 492 7432

esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவபாலன்



யாழ்ப்பாணம் நல்லூர், சங்கிலியன் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Saarbruchen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவபாலன் 03.08.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், திலகராஜ், பாக்கியராஜ், நிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பானு, மீரா, றஜீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தவமணி, சிவஞானம், சறோஜாதேவி, சிவராசா, சிவமலர், சிவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசமணி, காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் செல்வராணி, பத்மநாதன், கயிலாயபிள்ளை, காலஞ்சென்ற முத்துவேலு மற்றும் நாகராஜா, சறோஜாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஸிஸியா, அஜய், ஸ்ரீவன், அனிகா, அஸ்ரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.08.2018 புதன்கிழமை பிற்பகல் ஒருமணி தொடக்கம் 3 மணிவரை ஜேர்மனியில் உள்ள Saargemunder Str 85 - 87, 66119, Saarbruchen என்னும் இடத்தில் நடைபெறும். அத்துடன் யாழ்.நல்லூர், சங்கிலியன் வீதியில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**57/1, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**பாக்கியராஜ் சிவபாலன்**

**(ஜேர்மனி)- +496 813720 369, +491590 464 1897**

**சி.சிவஞானம் (இலங்கை) - +9421 222 7182, +9476 675 2419**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தந்தையார்

**அமரர் அம்பலவாணர் இராசரத்தினம்**

(ஓய்வுநிலை அதிபர் யா/ இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை)



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (07.08.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**கந்தசுவாமி கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

**குடும்பத்தினர். (077 739 2345)**

## மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்

K.T.Prassath - 078 612 5929, 071 381 5114

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)

## நவாலியூர் அருள்மிகு களையோடை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த ஆடிப்பூர திருவிழாவின் 4 ஆம் நாள் 07.08.2018

அம்பிகை அடியார்களே !

செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு பூஜையும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம் பெறும்.

**விசேட நிகழ்வுகள் :** காலை 9.30 மணிக்கு **இணுவையூர்** அகில உலக தவில் மாமேதை லய விவாகரா வித்துவமணி N.R. **சின்னராசாவின் புதல்வர் N.R.S. சுதாகரன் குழுவினர்.**

**கீதன் குழுவினர் இணுவையூர்**

ஆகியோரின் தவில், நாதஸ்வர கச்சேரி இடம் பெறும்.

**அம்பிகை அடியார்கள் அனைவரும் வருகை தந்து திருவிழாவில் பங்கேற்று அம்பிகையின் அருட்கடாச்சத்தினை பெற்று உய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.**

- ஒளி, ஒலி சஞ்சீவன் சவுண்ஸ் (நவாலி)
- செல்வம்ஸ் சவுண்ஸ் (பண்டத்தரிப்பு)

**4 ஆம் திருவிழா உபயகாரர்.**

## நினைவலைகள்

**3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி** — **ஈராண்டு நினைவலைகள்**



தோற்றம் 27.07.1960

மறைவு 09.08.2015

**அமரர் சின்னத்துரை இராதாகிருஷ்ணன்**

திதி:- 06.08.2018



தோற்றம் 12.03.1966

மறைவு 21.06.2016

**அமரர் சின்னத்துரை பரமேஸ்வரன்**

திதி:-28.06.2018

நிலையில்லா இவ்வுலகின் நிலையாமை கண்டோ? நீண்ட பயணம் சென்றீர்கள் ஈரவிழிகளுடன் முன்னவரின் மூன்றாண்டையும் பின்னவரின் இரண்டாண்டுப் பிரிவையும் எண்ணி ஏங்குகின்றோம்

**உங்கள் ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!**

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு

உங்கள் பிரிவால் வாடும் அன்பு சகோதரர்கள்

(CS/18378)(11,17)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு கந்தசாமி



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கந்தசாமி நேற்று (05.08.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தங்கலட்சுமி மற்றும் தங்கராசா, ஆறுமுகநாதன், செல்வராசா, யோகராசா, ஆனந்தராசா, தவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மகுல சிங்கம், பத்மதேவி (நோர்வே), பத்மேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன் (நோர்வே), செல்வி, கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், ஆரணி, ஆகாஸ், யுரேகா, திவ்யா, பிரணவன், பிரணீதன், தருணிகா, யஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோகுல வீதி, கோண்டாவில் மேற்கு.**

**தகவல் : குடும்பத்தினர்.**

## அமைச்சர்...

கான சம்பளம் என்பவற்றை வழங்கலாமா எனக் கேட்டு, அமைச்சுக்களின் செயலர்கள் வடக்கு மாகாண ஆளுநர் குரேக்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

வடக்கு மாகாண அமைச்சர் சபையிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஜூன் மாதம் 29ஆம் திகதி இடைக்கால கட்டளையை வழங்கிய மன்று, பா.டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று குறிப்பிட்டிருந்தது. டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்வதால் அமைச்சர் சபையில் 6 பேர் உள்ளனர். அரசமைப்புக்கு அமைவாக 5பேர் மாத்திரமே அமைச்சர்களாகப் பதவிவகிக்க முடியும். டெனீஸ்வரனையும், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் உள்ளடக்கிய அமைச்சரவை மறுசீரமைப்பை மேற்கொள்ளுமாறு மன்று பணித்தது.

வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு முதலமைச்சரிடம், அமைச்சரவை மறுசீரமைப்புக்கு அமைச்சர்களின் பெயர்களைப் பரிந்துரைக்குமாறு கோரியிருந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் இதுவரையில் பெயர்களைப் பரிந்துரைக்கவில்லை. தனக்கு அதற்கான அதிகாரம் இல்லை என்று நீதிமன்று கட்டளையிட்டுள்ளது. ஆளுநர் விட்ட தவறை அவரே சரிசெய்யவேண்டும். இவ்வாறு தெரிவித்து வடக்கு முதலமைச்சர், அமைச்சர்களின் பெயர்களைப் பரிந்துரைக்கவில்லை.

அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறாத நிலையில், அமைச்சர் சபையின் கூட்டம் இரண்டு மாதங்களாகக் கூட்டப்படவில்லை. வடக்கு மாகாண சபையின் சட்டவாக்க, நிறைவேற்றுச் செயற்பாடுகள் தேக்கமடைந்துள்ளன.

அமைச்சர் சபை மறுசீரமைக்கப்படாத நிலையில், தற்போது அமைச்சர்களாக உள்ளவர்களுக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க முடியுமா என்று அமைச்சுக்களின் செயலர்கள் வடக்கு ஆளுநரிடம் கோரியுள்ளார்கள்.

ஆளுநர், சட்டஏற்பாடுகளை மாத்திரம் குறிப்பிட்டு அமைச்சுச் செயலர்களுக்குப் பதில் வழங்கியுள்ளார். சம்பளத்தை வழங்க முடியுமா? இல்லையா என்பதற்கு அந்தக் கடிதத்தில் நேரடியாகப் பதில் தெரிவிக்கவில்லை. இது அமைச்சுச் செயலர்களிடம் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (5,105)

## சந்தேகநபர்களை...

தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டார்கள். சட்டத்தரணியும், மாகாணசபை உறுப்பினருமான கே.சயந்தன் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் இளைஞர்கள் மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப் பட்டனர். இளைஞர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவித்த சட்டத்தரணி சயந்தன், அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரியுள்ளார். பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (5,26)

## கிராமிய...

கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியே போதாது என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், அது மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

கூட்டு அரசினால் குருநாகல் மாவட்டத்தில் கடந்த மாதம் 15ஆம் திகதி கிராம அபிவிருத்தித் திட்டம் (கம்பிரெலிய) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையிலுள்ள 330 பிரதேச செயலகங்களுக்கும் தலா 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். 12 வகையான வேலைகள் அந்த நிதியில் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும். இவ்வாறு திட்ட அறிமுகத்தின்போது நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை கடந்த மாதம் வடக்குக்கு வந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் ஆரம்பித்து வைத்திருந்தனர். 200 மில்லியன் ரூபாவுக்குரிய திட்டங்களை பிரதேச செயலகங்கள் தயாரித்திருந்தன. கடந்த மாதம் 25ஆம் திகதி தலைமை அமைச்சரின் செயலரினால் அவசர அவசரமாக பிரதேச செயலகங்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. திட்டத்துக்கான ஒதுக்கீடு 100 மில்லியன் ரூபா மாத்திரமே என்று குறிப்பிடப்பட்டிருந்தது. குறைக்கப்பட்ட நிதிக்கு அமைவாகத் திட்டங்களை மாற்றும் நடவடிக்கைகளை பிரதேச செயலகங்கள் முன்னெடுத்திருந்தன.

இந்த நிலையில் அந்த நிதி 40 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக இரண்டு தினங்களுக்கு முன்னர் மீண்டும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

330 பிரதேச செயலகங்களுக்கும் ஒரே தடவையில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கும் போது 33 ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படும். திறைசேரியால் அந்தளவு நிதியை ஒரே தடவையில் ஒதுக்க முடியாது என்பதாலேயே, பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றுக்கும் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5,105)

## வழிநடத்தல்...

தல் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்வதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் வழி நடத்தல் குழுவில் குழப்ப நிலமைகள் காணப்படுகின்றன. ஒரு சிலரின் தலையீடுகளினால் இன்று அரசமைப்பைத் தயாரிக்கும் பணிகள் பெரிய சிக்கலான நிலையை எட்டியுள்ளன.

தவறான முறையில் புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. அரசமைப்பு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக உரிய முறையில் இடம்பெற வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாவிடின் அரசமைப்பைத் தயாரிப்பதில் குழப்ப நிலமைகள் தோன்றும். தற்போது அவ்வாறான நிலமையே ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் வழி நடத்தல் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்வதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியுள்ளது. கூட்டு எதிர்க்கட்சி என்ற வகையில் கடந்த காலங்களில் நாங்கள் அதில் பங்கேற்றோம். ஆனால் எதிர்வரும் காலங்களில் அது குறித்து தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியுள்ளது - என்றார். (5,31)

## அச்சுவேலிப்...

யம், அதனோடு இணைந்துள்ள தாய் சேய் நிலையம், 4 வீடுகளின் கேற்கள் என்பவற்றின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம் மற்றும் அதோடு இணைந்த நிலையில் உள்ள தாய் சேய் நிலைய யன்னல்களின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. 70 ஆயிரம் ரூபா வரையிலான சேதம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அச்சுவேலி - சந்நிதி வீதியில் பத்தமேனியில் உள்ள வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினரும், வடக்கு மாகாண முதலமைச்சர் பணியாள் தொகுதியைச் சேர்ந்தவருமான நா.இராசேந்திரனின் வீட்டு முன்பக்கக் கேற்றின் தகரங்கள் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டும் தகரத்தை முறித்தும் இளைஞர்குழு சேதப்படுத்தியுள்ளது.

பத்தமேனியில் தீத்தாங்குளம் பிள்ளையார் கோயில் பூசகரின் வீட்டுக் கேற்றிலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இரண்டு வீடுகளின் கேற்றுக்களும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

அச்சுவேலி - சந்நிதி வீதியில் உள்ள வெளிநாட்டில் வசிக்கும் ஆசிரியை ஒருவரின் வீட்டுக் கேற் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உந்துருளியில் திரிந்த இளைஞர்களின் விசமச் செயலால் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பொது மக்கள் பலரும் திகில் அடைந்த நிலையில் இருப்பதாகக் கூறினர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக இடைக்காடு கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர்கள் தனித் தனியாக அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். அச்சுவேலிப் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்திருப்பதாகவும் விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (5,11)

## வாள்வெட்டுக்...

தென்மராட்சியின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் 7பேர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்கள். சிவில் உடையில் சென்ற மானிப்பாய் பொலிஸார் இவர்களைக் கைது செய்திருந்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பேருக்கு எதிராக வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது. வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் தம்மால் பிரதானமாக தேடப்பட்டு வந்த இருவரும் கைது செய்யப் பட்டவர்களில் உள்ளடங்குகின்றார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை விட மேலும் 9பேரைத் தேடி வருவதாகவும், அவர்கள் தலைமறைவாகி விட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், வெளிநாட்டிலிருந்து பணப்பரிமாற்றல் சேவையூடாக ஒருவருக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தார்கள்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றும் சில பொலிஸ் அதிகாரிகளுக்கும், கைது செய்யப்பட்ட இளைஞர்களுக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றதா என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தார்கள். கைது செய்யப் பட்ட இளைஞர்களின் அலைபேசிகளை மையப்படுத்தியே இந்த விசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் குறிப்பிட்டார்கள். (5,26)


மீட்கப்பட்ட வந்துருளிகள்

## பொலிஸ்...

நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த எ.டெனிஸ்ரன் (வயது-18) என்ற இளைஞனே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

பொற்பதி அரசடி வீதியைச் சேர்ந்த இளைஞன் உந்துருளியில், இன்னொரு இளைஞனை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்துள்ளார். பின்னால் இருந்தவர் தலைக்கவசம் அணியவில்லை. அந்த வீதிக்கு குறுக்காக மூன்று உந்துருளிகளில், சிவில் உடை அணிந்த இரண்டு பொலிஸார் உள்ளிட்ட 6 பொலிஸார் நின்றுள்ளார்கள். இளைஞர்கள் தப்பி ஓட முற்படுகின்றார்கள் என்று கருதிய பொலிஸார், தமது உந்துருளியை நகர்த்த முற்பட்டார்கள். உந்துருளியைச் செலுத்தி வந்த் இளைஞன், பொலிஸாரின் உந்துருளியுடன் மோதிக் காயமடைந்தான். இளைஞனின் கால் முறிந்து பலத்த காயம் ஏற்பட்டது. கீழே விழுந்த இளைஞனை பொலிஸார் சப்பாத்துக் கால்களால் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளார்கள். சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

விபத்தினாலும், தாக்குதலினாலும் காயமடைந்ததாகத் தெரிவித்து இளைஞன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். (5,7,8)

## இளைஞர்களின்...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உப தலைவர் அரியகுட்டியின் உருவச்சிலை திறப்பும் நூற்றாண்டு நாள் நிகழ்வும் ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது இளைஞர்கள் போதைப் பொருள் பாவனை, மது எனச் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். வாள்வெட்டுப் போன்ற சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். பொலிஸாரும் அவற்றைக் கட்டுப்படுப்படுத்தாது அசமந்தமாக உள்ளனர்.

இவற்றைச் சுட்டிக்காட்டும் சிலர் இராணுவம் இங்கு தொடர்ந்தும் நிலை கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். எமது இளைய சமூகம் சிந்தித்துச் செயலாற்றாவிட்டால் இராணுவத்தினரை அகற்ற முடியாத நிலைமையே ஏற்படும் - என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது, எமது சமூகத்தின் மீது தற்போதும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக எமது சமூகம் போராட வேண்டும். எம்மில் பலர் பிரதேச வேறுபாடு பார்க்கின்றனர். அவ்வாறான பிரிவினைவாதம் நீங்க வேண்டும். அனைவரும் தமிழர் என்ற ரீதியில் ஒன்று பட வேண்டும் - என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-8)

## புலிகள்...

போராட்டத்துக்காக நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு எதிரான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் விதிமுறைகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளால் தொடர்ந்தும் ஆபத்து உள்ளது என்பதை ஐரோப்பிய ஒன்றியத்தின் 28 உறுப்பு நாடுகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்துள்ளோம் என்று பிரசல்சிற்கான இலங்கையின் தூதுவர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரசல்ஸில் தொடர்ச்சியாக சந்திக்கும் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்களின் கருத்துக்களை அதிகாரிகள் உரிய வடிவத்தில் பின்பற்றுவதை தூதரகம் உறுதி செய்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருந்தது. (5)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 05 . 04 . 1934

இறப்பு 09 . 05 . 2018



### அமரர் நாகமணி அருளானந்தம் (சின்னையா)

*(சிவன் கோவில் வீதி, மல்லாவி)*

கடந்த 09.05.2018 அன்று எம்மை விட்டுப்பிரிந்த எமது குடும்பத்தலைவரின் அகால மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (06.08.2018) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை மற்றும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயில் வீதி,
முதலாம் ஒழுங்கை, மல்லாவி.

குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

85, பருத்தித்துறை வீதி, நல்லூர் சந்தைக்கு முன் வசிக்கும் கு.அருள்நாயகத்தினுடைய சாரதி அனுமதிப் பத்திரம் வாகன அனுமதிப் பத்திரம் காப்புறுதிப்பத்திரம் ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

**021 221 6491** (CS/18794) (11,17)

**Abirami Tex & Tailoring**
Parameswara Junction
பெண்களுக்கு என அனைத்து ஆடைகளும் தைக்கக்கூடிய பெண்கள் வேலைக்குத் தேவை.
தொடர்பு - 077 148 4528, 075 750 8410

**காணி விற்பனைக்கு**
யாழ்.நகர் மையத்தில் இருந்து 500M தூரத்திற்குள்ளும், ஆஸ்பத்திரி வீதிக்கு அருகிலும் உள்ள விசாலமான $1^1/2$ பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 076 230 2984**

## மரண அறிவித்தல்

### திருமதி நித்தியாநந்தேஸ்வரி தியாகரன்

(ராசாத்தி)



யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியாநந்தேஸ்வரி தியாகரன் கடந்த (04.08.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தியாகரனின் அன்பு மனைவியும் துஷ்யந்தினி (வவி), துஷ்யந்தன் (கோபி, லண்டன்), துஷிதரன் (அருண், பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் மகேந்திரன் (லண்டன்), கௌசல்யா (லண்டன்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் தியாழினி, துசான், கீர்த்திகன், கஜோனா, அக் ஷயன், லசியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற நீதிராசா, இராஜேஸ்வரி, ஆனந்தேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் குலசிங்கம் (ஜேர்மனி), இரத்தினசிங்கம் (சுவிஸ்), மனோன்மணி, மங்கையற்கரசி (பிரான்ஸ்), யோகம்மா, தவலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2018) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33 / 09, அகத்தியர் வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல் :குடும்பத்தினர்
+94 77 271 6468, +94 76 688 5763

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கந்தசாமி



கோவில் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் இல. 31/6, அம்பகர் வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கந்தசாமி கடந்த (04.08.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோன்மணி (மணி)யின் அன்புக் கணவரும் சாந்தகுமார் (மோகன் - லண்டன்), கருணகுமார்(பாபு-பிரான்ஸ்),நந்தினி(பிரான்ஸ்),றெஜினி(றெஜி),பிறேம்குமார் (பிறேம் - பிரான்ஸ்), சுதன்குமார் (Thony - பிரான்ஸ்), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சுபாஸ்குமார் (பிரான்ஸ்), நிராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தம்பித்துரை, சின்ன ராஜா, நடராஜா (சின்னத்தம்பி), காலஞ்சென்ற பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லதாலட்சுமி (லதா - லண்டன்), றாஜினி (வவி - பிரான்ஸ்), றெஸ்லி (பிரான்ஸ்), சுபேந்திரன், சோபனா (சோபா - பிரான்ஸ்), டெஸ்சியா (பிரான்ஸ்), ஸ்ரீவித்தியா(வனஜா-பிரான்ஸ்),றாஜினா(விஜி-பிரான்ஸ்),மிகிந்தராஜா (மிகிந்தா - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மாணிக்கராசா மற்றும் தெய்வேந்திரம் (வண்ணைதெய்வம்-பிரான்ஸ்), ராஜேந்திரம் (சின்ராசா - கனடா), மகாலட்சுமி (கிளி), மனோராணி (சின்னக்கிளி - பிரான்ஸ்) ஜெயராணி (ஜெயா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமைத்துனரும் லிஷா, அனீஸ், விதுர்ஷன், கீர்த்திகா, வினுஷன், றொஷான், நவீன், நந்து, அஸ்மிதன், சதுஷ்ரிகா, சயான், பிறிஷா, றியானா, திலான், சுரூதிகா, ஈஸ்வரன், சரன், சுப்பிறியா, ஆறிஷா, மினித், மினிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2018) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தீயுடன் சங்கமிக்கும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 18358/15/17)

**075 097 1053,**
**021 222 9529**

தகவல்:
குடும்பத்தினர்.



# ஆவரங்கால் மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம் , ஒக்6
புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 26:24, 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி.

பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் இ. ஆனல்ட், மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், வே.சிவயோகன், யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரன், வளர்மதி சனசமூக நிலையத்தின் போசகர் ஆ.தங்கராசா, வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)

## கலைமதி அணி நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக 6
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:21, 28:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது கலைமதி. (ம-23)

## சிவகுமரன் அசத்தல்

யாழ்ப்பாணம் ஒக்6
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சிவகுமரன் அணி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிவகுமரன் விளையாட்டு கழக அணியை எதிர்த்து கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதியது.

25:09, 28:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது சிவகுமரன் அணி. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக 6

**கைதடி தெற்கு சன சமூக நிலைய கரப்பந்துத் தொடர்**

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் பி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வடக்கு - கிழக்கு கால்பந்துத் தொடர்**

வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை எப்.சி. அணியை எதிர்த்து மாந்தோட்டம் எப்.சி. அணி மோதவுள்ளது. (ம-23)

## வெற்றிபெற்றது நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம் ஒக்6
கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழக பி2 அணி மோதியது. நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக பி அணி 25:22 22:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ரில்கோ அணி வெற்றிநடை

யாழ்ப்பாணம், ஒக 6
வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரெர்ஸ் எப்.சி. அணி வெற்றிபெற்றது.

கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நோதேண் எலைட்ஸ் அணியை எதிர்த்து ரில்கோ கொங்கியூரெர்ஸ் எப்.சி அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் ரில்கோ அணி வெற்றிபெற்றது. (ம-23)



# டெஸ்ட் தரவரிசை கோக்லி முதலிடம்



இங்கிலாந்து – இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் முடிவடைந்ததுடன் இந்தத் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது. பெர்மிங்ஹாமில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் கோக்லி மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார்.

பன்னாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது. இந்திய அணியின் தலைவர் கோக்லி துடுப்பாட்டத் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தார்.

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் முடிவடைந்ததுடன் இந்தத் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது. பெர்மிங்ஹாமில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் கோக்லி மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். முதலாவது இன்னிங்ஸில் 149 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 51 ஓட்டங்களையும் அவர் பெற்றார். இதனால் துடுப்பாட்டத் தரப்படுத்தலில் கோக்லியின் புள்ளிகள் உயரும் என்று கருதப்பட்டது.

இதன்படி 934 புள்ளிகளு டன் அவர் முதலிடம் பிடித்தார். நீண்டகாலமாக முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த சிமித் 929 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்குச் சரிந்தார்.

இங்கிலாந்தின் அணித் தலைவர் ரூட் 865 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 847 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் வோர்ணர் 820 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் புஜாரா, கருணாரத்ன, சந்திமல், எல்கர், மார்க்ரம் ஆகியோர் உள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இன்னும் 4 ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. அவற்றிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் பட்சத்தில் டெஸ்டில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் என்ற புதிய உச்சத்தை அவர் பெறுவார். பிரட்மன் பெற்ற 961 புள்ளிகள்தான் டெஸ்ட் ஆட்டத்தில் அதியுச்ச தனிநபர் பெறுபேறாக உள்ளது.

அதேநேரம் கோக்லி இன்னும் பல மாதங்கள் முதலிடத்தில் நீடிக்க வாய்ப்புண்டு. ஏனெனில் இரண்டாவது இடத்தில் உள்ள சிமித்தின் புள்ளிகள் தற்போது உயிர்ப்பற்று உள்ளன. பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் சிமித் ஓர் ஆண்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## தீவுக்கு பதிலடி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குத்தக்க பதிலடி கொடுத்தது பங்களாதேஷ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 5 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தமீம் இக்பால் 74 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 60 ஓட்டங்களையும், சர்கார் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நேர்ஸ், பவுல் இருவரும் தலா 2 இலக்குகளையும், ரசல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. பவல் 43 ஓட்டங்களையும், பிளட்சௌ் 43 ஓட்டங்களையும், ரசல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரகுமான், இஸ்லாம் இருவரும் தலா 3 இலக்குகளையும், சகிப் அல் ஹசன் 2 இலக்குகளையும், ரூபல் கொசைன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் உள்ளதால் மூன்றாவது ஆட்டத்தில் வெற்றியைத் தீரமானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. (ம)

## கரோலினா மரினுக்குத் தங்கம்



உலக சம்பியன்சிப் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார் ஸ்பெய்னின் வீராங்கனை கரோலினா மரின்.

சீனாவில் இந்தத் தொடர் நடைபெற்றது. இந்திய வீராங்கனை சிந்துவை எதிர்த்து ஸ்பெய்னின் கரோலினா மரின் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. 21:19, 21:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வென்றார் மரின்.

ரியோ ஒலிம்பிக் தொடரின் இறுதியாட்டத்திலும் இவர்கள் இருவரும் மோதினார்கள். மரின் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். (ம)



## சர்மாவுக்குத் தண்டம்

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் மலனுடன் முறையற்ற நடத்தைகளில் ஈடுபட்டமைக்காக இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் இசாந் சர்மாவுக்குத் தண்டம் விதித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

மலனை வீழ்த்திய பின்னர் சர்மா அவரைப் பவிலியனுக்குச் செல்லுமாறு சைகை காட்டினார். இது பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் குற்றமாகும். இதையடுத்து சர்மாவுக்கு குறித்த ஆட்டத்துக்கான கட்டத்தில் இருந்து 15 சதவீதத்தை தண்டமாக்கியது ஐ.சி.சி. (ம)

## தூக்கத்தைத் தொலைக்க வைத்தார் கோக்லி

### அன்டர்சன் புலம்பல்




இந்திய அணியின் தலைவர் கோக்லி எமது தூக்கத்தைத் தொலைக்க வைத்தார் என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சன்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் பெர்மிங்ஹாமில் நேற்றுமுன்தினம் முடிவடைந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தாலும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தியது. முதலாவது இன்னிங்ஸில் சதம், இரண்டாவது இன்னிங்ஸில் அரைச்சதம் என்று வியக்க வைத்தார் கோக்லி. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அன்டர்சன்.

"நம்ப முடியாத வகையில் கோக்லி துடுப்பெடுத்தாடினார். அவரின் ஆட்டம் வேறு தரத்தில் இருந்தது. ஆகச் சிறந்த இன்னிங்ஸ்களை அவர் வழங்கினார். ஒவ்வொரு நாளின் இரவிலும் கோக்லியை எவ்வாறு வீழ்த்துவது என்பதை நீண்டநேரமாகச் சிந்தித்தோம். அவர் எமது தூக்கத்தைத் தொலைத்துவிட்டார்" என்று அன்டர்சன் மேலும் தெரிவித்தார். (ம)

# தொடரை இழந்தது இலங்கை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை இழந்தது இலங்கை அணி. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் கிடைத்த தோல்வியை அடுத்தே சொந்த மண்ணில் தொடரை இழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது இலங்கை.




இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்ற காரணத்தால் நேற்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கை வென்றால் அந்த அணி தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்கும். தென்னாபிரிக்காவென்றால் அந்த அணி கிண்ணம் வெல்வதை உறுதிசெய்யும் என்கிற நிலையில் இந்த ஆட்டம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் குயின்டன் டிகொக். இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் குயின்டன். ஆனால் அம்லா-ஹென்றிக்ஸ் இணை இலங்கையை ஆட்டிப் படைத்தது. பிறிதொரு இலங்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்கா. அரைச்சதம் கடந்து 59 ஓட்டங்களுடன் அம்லா ஆட்டமிழந்தார். அணித் தலைவர் பிளாசிஸ் ஏமாற்றினாலும், டுமினி - ஹென்றிக்ஸ் இணை இலங்கையைப் புரட்டி எடுத்தது. சதம் கடந்தார் ஹென்றிக்ஸ். அவர் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டுமினி 70 பந்துகளில் 92 ஓட்டங்களைக் குவித்தார். முடி வில் 7 இலக்குகளை இழந்து 363 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் திசர பெரேரா 4 இலக்குகளையும், குமார 2 இலக்குகளையும், தனஞ்சய ஓர் இலக்கையும் கைப்பற்றினர். வலுவான இலங்கை நோக்கிக் களமிறங்கிய இலங்கை ஆரம்பம் முதலே தடுமாறியது. தரங்க 19, டிக்வெல்ல 10 என்று ஆரம்ப வீரர்கள் தடுமாறினார்கள். குசல் மென்டிஸ், மத்தியூஸ் இருவரும் முறையே 31, 32 ஓட்டங்களை மத்திய வரிசையில் பெற்றனர். எனினும் இமாலய இலக்குக்கு இது இம்மிளவும் போதாது. தனஞ்சய டி சில்வா 84 ஓட்டங் களைக் குவித்த போதிலும் மறு முனையால் இலக்குகள் சரிய 285 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங் களால் தோல்வியடைந்தது இலங்கை. பந்துவீச்சில் நெக்டி 4 இலக்குகளையும், பிளுக்வையோ 3 இலக்குகளையும், சம்சி 2 இலக் குகளையும் கைப்பற்றினர். (ம)

# பதவி விலகினார் சம்போலி

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் ஏற்பட்ட தோல்வியின் எதிரொலியாக ஆர்ஜென்ரீன அணியின் தலைமைப் பயிற்சியாளர் சம்போலி பதவி விலகினார்.

ரஷ்யாவில் நடந்து முடிந்துள்ள உலகக்கிண்ணத் தொடர் ஆர்ஜென்ரீன அணிக்குக் கெட்ட கனவாகவே அமைந்துள்ளது. உலகக்கிண்ணத் தொடரின் முதன்மைச் சுற்றுக்குள் நுழைவதற்கே படாதபாடு பட்டது ஆர்ஜென்ரீனா. அந்த அணி தொடர்ந்தும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தி காலிறுதியுடன் நடையைக் கட்டியது. இது அந்த நாட்டு ரசிகர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. இதையடுத்து அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி, பயிற்சியாளர் சம்போலி ஆகியோருக்கு எதிராக விமர்சனங்கள் குவிந்தன. தொடர் விமர்சனங்களை அடுத்து தலைமைப் பயிற்சியாளர் என்ற பதவியில் இருந்து விலகினார் சம்போலி. சம்போலியின் விலகலை அடுத்து எய்மர், ஸ்காலோனி ஆகியோர் இடைக்காலப் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

அணித் தலைவர் மெஸ்ஸியும் ஓய்வு முடிவை அறிவிப்பார் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் அவர் தொடர்ந்து விளையாடுவார் என்ற ஆர்ஜென்ரீன கால்பந்து சம்மேளனம் அண்மையில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. ஆர்ஜென்ரீன அணி செப்ரெம்பர் 3ஆம் திகதி கொலம்பியாவையும், செப்ரெம்பர் 7ஆம் திகதி கவுதமாலாவையும் எதிர்கொள்கிறது. இந்த ஆட்டங்களில் ஆர்ஜென்ரீனாவினதும், மெஸ்ஸியினதும் தனிநபர் பெறுபேறு தொடரிலும் பெரும் எதிர்பார்ப்பு உள்ளது.

(ம)


உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர்
திரு. டானியல் முருகேசு வேதாபரணம்
அவர்கள் இன்று (06.08.2018) திங்கட்கிழமை 74 ஆவது அகவையில் விளையாட்டுத்துறையில் 60 வருடங்களும் உதைபந்தாட்ட நிர்வாக தலைவனாய் 25 வருடங்களும் சேவையாற்றிவரும் நாயகனை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் :- வடமராட்சி உதைபந்தாட்ட லீக்

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணம்
லண்டன் (UK) 11 kg மேல் 550/- 5kg மேல் 800/-
1) மேலதிக கட்டணம் எதுவும் இல்லை
2) உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
3) 3 வேலை நாள்களில்
திருமுருகன் கொம் நெற்
No.4, மந்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. (அன்னை முத்துமாரி Bus Booking center) 46, அடியபாதம் வீதி, திருநெல்வேலி. (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக)
Hot line - 077 755 4528, 021 222 7835

வாடகைக்கு
சுப்பர் A.C. (வடி) வாகனம் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு - 077 9213835

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள்
Visit Visa / Tourist Visa, Sponsor Visa and Student Visa Online மூலமாகவும், ஆவணப்படுத்தல் மூலமாகவும் செய்து கொடுக்கப்படுகின்றன. Translation உட்பட விசா சம்பந்தமான சகல ஏற்பாடுகளும் ஒரே இடத்திலே செய்து பெற்றுக் கொள்ளலாம். அன்று தொடக்கம் இன்றுவரை
Thirumurugan Com Net (pvt) Ltd,
No.321, K.K.S.Road, Jaffna
Hot line - 071 141 8711 Tel - 021 222 7835
tcnvisaconsultancy@gmail.com

மேலும் மேம்படுத்தப்பட்ட
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம்
• முதுகு வலி
• முழங்கால் வலி
• ஆர்த்தரைட்டிஸ்
• மூட்டு வலி
• தசைப்பிடிப்பு
• நரம்புசார் வலிகள்
Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

பிழையின்றி முழுமையாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள திரு. ஷாம்சன் அவர்களின் 16 புத்தகங்கள்!
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தை முழுமையாக தமிழ்மூலம் கற்கும் வகையில் திரு. ஷாம்சன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட 16 புத்தகங்கள் கொண்ட பாடப்புத்தகப்பொதி
ஆங்கில ஆசிரியரின் தேவையுமின்றி பாடசாலை மாணவர்கள் முதல் தொழில்புரிவோர் வரை எவரும் சுயமாக ஆங்கிலம் கற்கும் வகையில் உருவாக்கப்பட்டது.
10.08.2018 வரை ரூ 800 விலைக்கழிவு
SARMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி யாழ்நகர் 021 320 3313 077 1570 486

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.